இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
எட்டாவது பாராளுமன்றத்தின்
(முதலாவது அமர்வு)

பாராளுமன்ற தொடர் இல 331

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்
நான்காவது அறிக்கை
(2017 சனவரி 24 முதல் 2017 மே 24 வரையான காலப்பகுதிக்கு)

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர்
கௌரவ லசந்த அலகியவன்ன
அவர்களினால்
2017 திசெம்பர் 08ஆம் திகதி அன்று
சமர்ப்பிக்கப்படுகின்றது.

எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர்

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் உள்ளடக்கம்

கௌரவ லசந்த அலகியவன்ன (தவிசாளர்)

கௌரவ எஸ். பீ. திசாநாயக்க

கௌரவ மஹிந்த சமரசிங்ஹ

கௌரவ பி. ஹரிசன்

கௌரவ பைஸர் முஸ்தபா

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ பந்துல குணவர்தன

கௌரவ விஜித ஹேரத்

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ நிஹால் கலப்பத்தி

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா

கௌரவ புத்திக பத்திறண

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ சி. சிறீதரன்

கௌரவ சந்திம கமகே

கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ ச. வியாழேந்திரன்

உள்ளடக்கம்

	பக்க இல.
• தவிசாளரின் குறிப்பு	01
• சுருக்க அறிக்கை	03
• பொது அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் விதப்புரைகள்	05
• நிறுவனங்களுக்கு சிறப்பியல்பான அவதானிப்புக்கள், தீர்மானங்கள், மற்றும் சிபாரிசுகள்	07
• 2017 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் புலனாய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தினதும் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகள், அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்	13
• உள்ளடக்கம்	149

தவிசாளரின் குறிப்பு

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புக்கமைய பாராளுமன்றத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ள அரச நிதி நிருவாகப் பொறுப்பினை செயற்படுத்துவதற்கான பிரதானமான பங்களிப்பினை வழங்குவதும் இலங்கைப் பாராளுமன்ற வரலாற்றில் நிதி நிர்வாக நடவடிக்கையை மேற்பார்வை செய்வதற்காக செயற்பட்டு வரும் மிகப் பழமைவாய்ந்த அமைப்பும் அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவாகும். எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வின் நான்காவது அறிக்கையை பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்க முடிந்தமை தொடர்பில் குழுவின் தற்போதைய தவிசாளர் என்ற வகையில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

2015 நவம்பர் மாதம் 26 ஆம் திகதி நிறுவப்பட்டு பணிகளை ஆரம்பித்த தற்போதைய அரசாங்க கணக்குகள் பற்றிய குழு 38 அரச நிறுவனங்கள் தொடர்பாக 41 புலனாய்வுகளை மேற்கொண்டு அதன் முதலாவது அறிக்கையை 2016 செப்டம்பர் மாதம் 22 ஆம் திகதி வெளியிட்டது.

சுங்கம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மதுவரித் திணைக்களம் போன்ற அரச வருமானத்தில் பெரும் பங்களிப்பு வழங்கும் திணைக்களங்கள் உட்பட மேலும் பல நிறுவனங்களை தொடர்புபடுத்தி பயனுள்ள தகவல் தொழில்நுட்ப முறைமையை பயன்படுத்தி அரச வருமானங்களை திரட்டுதல் மற்றும் அதனை மேம்படுத்துவதற்காக தரப்பினர்களால் தரப்பினர்களுக்கிடையில் எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக சிபாரிசுகளை செய்வதற்காக நியமிக்கப்பட்ட துணைக் குழுவினால் சிபாரிசு செய்யப்பட்ட தகவல்கள் அடங்கிய அறிக்கை 2016 நவம்பர் மாதம் 23ஆந் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

31 நிறுவனங்கள் தொடர்பாகவும் 3 விசேட விடயங்கள் தொடர்பாகவும் மேற்கொள்ளப்பட்ட 36 புலனாய்வுகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட இரண்டாவது அறிக்கை 2017 யூன் மாதம் 23 ஆம் திகதி பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் வரலாற்றில் பாரளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளின் சம்பிரதாயங்கள் மாற்றப்பட்டு 2015 நிதி ஆண்டு தொடர்பாக அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் விடயப்பரப்பினுள் வருகின்ற 831 வரையிலான சகல அரசாங்க நிறுவனங்களின் நிதி நிலைமைகள் மற்றும் செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் கணினி தகவல் முகாமைத்துவ முறைமையின் மூலம் நேரடியாக (online) பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் அந்த அனைத்து நிறுவனங்கள் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அறிக்கை அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் மூன்றாவது அறிக்கையாக 2017 நவம்பர் மாதம் 13 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. அதன்படி அரசின் விசேட வருமான பிரிவுகள், அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாவட்ட செயலகங்கள், மாகாண சபைகள் மற்றும் அதன்கீழ் உள்ள நிறுவனங்கள் மற்றும் அனைத்து உள்ளூராட்சி நிறுவனங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட உயர் மட்டத்திலான செயலாற்றுத்திறனை நெறிப்படுத்திய 81 நிறுவனங்கள் மதிப்பிடப்பட்டு ஊக்குவிக்கும் பொருட்டு அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் அந்த நிறுவனங்களுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

அரசாங்க கணக்குகள் பற்றிய குழு 2017 ஜனவரி மாதம் தொடக்கம் 2017 மே மாதம் இறுதி வரைக்கும் 36 நிறுவனங்களை குழுவின் புலனாய்வுக்காக அழைத்து மேற்கொண்ட புலனாய்வின் மூலம் கிடைத்த தகவல்களை உள்ளடக்கி தயாரிக்கப்பட்ட குழுவின் நான்காவது அறிக்கையையும் (இடைக்கால அறிக்கை தவிர) எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வுக்குள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க முடிந்தமை செயற்குழு வரலாற்றில் ஓர் விசேட மைல்கல்லாகும்.

கரையோர பாதுகாப்பு மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவம் தொடர்பாக குழுவினால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகளில் வெளிவந்த விசேட பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் இலங்கையின் கரையோரப் பாதுகாப்பு மற்றும் சுற்றுலாத்துறையின் அபிவிருத்திக்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாகவும் சிபாரிசுகளை செய்வதற்கான துணைக்குழுவொன்று கௌரவ சுஜீவ சேனசிங்கவின் தலைமையில் நியமிக்கப்பட்டதுடன் அந்த துணைக்குழுவின் அறிக்கையும் எதிர்காலத்தில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட உள்ளது.

அரசாங்க கணக்குள் பற்றிய குழுவினால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த அறிக்கையும் உள்ளடங்கலாக எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட 5 அறிக்கைகள் (இடைக்கால அறிக்கை உட்பட) தொடர்பாக பாராளுமன்றம் தனது கவனத்தை செலுத்த வேண்டும் எனவும் நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய கொள்கை ரீதியான தீர்மானங்களை மேற்கொள்ளும் போது, இத்தால் சிபார்சு செய்யப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவது உகந்ததெனவும் முன்மொழிகின்றேன்.

குழுவின் நடவடிக்கைகளை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு சகல கட்சிகளையும் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படுகின்ற ஒத்துழைப்பை பெரிதும் வரவேற்கின்றேன். பாராளுமன்றத்தின் செயலாளர் நாயகம், பிரதிச் செயலாளர் நாயகம் மற்றும் உதவிச் செயலாளர் நாயகம் உள்ளிட்ட பெரும் அர்ப்பணிப்புடன் பணியாற்றுகின்ற அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் பணியாட்டொகுதிக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன்.மேலும், கணக்காய்வாளர் தலைமை அதிபதி உள்ளிட்ட அத்திணைக்களத்தின் பணியாட்டொகுதியும் திறைசேரியின் உத்தியோகத்தர்களும் இக்குழுவிற்கு அளித்த ஒத்துழைப்பு இல்லாது போயிருப்பின், இந்தளவு வெற்றிகரமாக இப் பணியை செய்து முடிப்பது கடினமாகி இருக்கும். அச்சகல உத்தியோகத்தர்களுக்கும் என்னுடைய நன்றிகள் உரித்தாக வேண்டும்.

தற்போதைய அரசாங்கத்தின் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு எதிர்கொள்ள நேர்ந்துள்ள சவால்களை முறியடித்து இது வரை வந்த பயணத்தின் வெற்றி தொடர்பாக சாதகமானதொரு மதிப்பீட்டை வழங்க முடியுமெனவும், நவீன தொழில்நுட்ப செயன்முறைகளை பற்றிக்கொள்ளுமாறு அரச நிறுவனங்களுக்கு சிபார்சு செய்வதோடு நின்று விடாது அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவும் மேற்படி நவீன தொழில்நுட்ப செயன்முறைகளை பயன்படுத்தும் வகையில் தம்மை மாற்றிக்கொண்டு மிகவும் பயன்மிக்கதும் வினைத்திறன் மிக்கதுமான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவாக செயற்பட தொடங்கியுள்ளதாகவே நான் கருதுகிறேன்,

லசந்த அலகியவண்ண
அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர்

சுருக்க அறிக்கை

அரசாங்கக் கணக்குக் குழு இலங்கைப் பாராளுமன்றத்தில் நடைமுறையில் இருந்து வரும் நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு குழுவாகவும், பிரதான நிதி மேற்பார்வைக் குழுவாகவும் உள்ளது. 1947 சோல்பரி அரசியல் யாப்பின் கீழும், 1972 குடியரசு அரசியலமைப்பின் கீழும், 1978 இன் தற்போதைய அரசியலமைப்பின் கீழும் பாராளுமன்றத்திற்கு பகிரங்க நிதிக் கட்டுப்பாடு தொடர்பான முழுமையான அதிகாரம் தொடர்ச்சியாக அளிக்கப்பட்டு வந்துள்ளது. காலனித்துவ யுகத்தில் அதாவது, 1923 செப்தெம்பர் 05 திகதி தாபிக்கப்பட்ட இக்குழு 1923 செப்தெம்பர் 17 திகதி முதல் தடவையாக கூடியது. இலங்கை முழு அளவில் இறைமையுடைய ஓர் அரசாக மாறிய பின்னர் 1972 ஒக்டோபர் மாதம் 26 திகதி தேசிய அரசுப் பேரவையின் முன்மொழிவு ஒன்றுக்கமைய இக்குழு மீண்டும் தாபிக்கப்பட்டது. தற்போதைய அரசியலமைப்பின் 148ஆவது உறுப்புரைக்கமைய பாராளுமன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பகிரங்க நிதிக் கட்டுப்பாட்டு அதிகாரத்தை நடைமுறைப்படுத்தச் செய்யும் பிரதான குழுவான அரசாங்கக் கணக்குக் குழு இலங்கைப் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டடகளை 125, 131 மற்றும் 132இன் கீழ் வலுவுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

“125(2)அரசாங்கச் செலவுகளை எதிர்நோக்குவதற்காகப் பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட ஒதுக்கீட்டுத் தொகைகளைக் காட்டுக்கின்ற கணக்குகளையும், குழு தக்கதெனக் கருதும் பாராளுமன்றத்தின் முன்னிடப்படும் பிற கணக்குகளையும், அவை பற்றிய கணக்குப் பரிசோதகர் தலைமையதிபதியின் அறிக்கைகளுடனும் உள்ளூர் அதிகாரசபைகள் பற்றிய கணக்குப் பரிசோதகர் தலைமையதிபதியின்அறிக்கைகளுடனும் பரிசோதித்தல் குழுவின் கடமையாததல் வேண்டும்.

குழு காலத்திற்குக் காலம் பொதுவாக எந்தவொரு திணைக்களத்தினதும் உள்ளூர் அதிகாரசபையினதும் பரிசோதிக்கப்பட்ட கணக்குகள், நிதியங்கள், நிதி நடைமுறைகள், செயற்படும் நிருவாகமும் என்பவை பற்றியும் அவற்றினின்று எழும் எந்தவொரு விடயம் பற்றியும் பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

குழு அவசியமெனக் கருதுமிடத்து அதன் உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக்களை நியமிக்கலாம். அவை குழுவால் பணிக்கப்படும் வகையில் அத்தகைய திணைக்களங்கள், உள்ளூர் அதிகாரசபைகள் ஆகியவற்றின் எல்லாக் கணக்குகளையும், நிதியங்களையும், நிருவாகத்தையும் பரிசோதித்து குழுவிற்கு அறிக்கையிடும்.

குழு அல்லது அதன் உப குழுக்களின் ஏதாவதொன்று தன் கடமைகளை நிறைவேற்றுவதற்காக எந்தவோர் ஆளையும் அதன்முன் வரவழைப்பதற்கும் கேள்வி கேட்பதற்கும் எந்தவொரு பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது பிற ஆவணத்தைக் கேட்டுப் பெறுவதற்கும் பரிசோதிப்பதற்கும் களஞ்சியங்கள், சொத்துக்கள் முதலியனவற்றை பார்வையிடவும் அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.”

அதன்படி, எட்டாவது பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடரில் அரசாங்கக் கணக்குக் குழுவினால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட குழுவின் நான்காவது அறிக்கை (இடைக்கால அறிக்கையுடன்) குழுவின் விடயப் பரப்பினுள் அடங்கும் அமைச்சுக்கள், திணைக்களங்கள், விசேட செலவு அலகுகள், மாவட்டச் செயலகங்கள், உள்ளூராட்சி நிறுவனங்கள் தொடர்பாக நடாத்தப்பட்ட விசாரணைகளுடன் சம்பந்தப்பட்ட தகவல்களைக் கொண்டுள்ளது.

அரச நிறுவனங்களில் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர், கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின்படி, நிதி தொடர்பான பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தும் வகையில் கணக்காய்வின் விளைவுகளை பரிசீலிப்பதற்காக பாராளுமன்றத்தால் தாபிக்கப்பட்ட பகிரங்க நிதி மீதான கட்டுப்பாட்டை ஆராயும் தற்போதைய அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழு 2015 ஒக்றோபர் மாதம் 23 ஆம் திகதி பாராளுமன்றத்தால் அறிவிக்கப்பட்டதுடன், அது தற்போதைய பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் சகல அரசியல் கட்சிகளையும் சேர்ந்த 26 அங்கத்தவர்களைக் கொண்டுள்ளது.

கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கைகள் மற்றும் அரசாங்க நிறுவனங்களின் தற்போதைய செயல் முன்னேற்ற மீளாய்வுகள், சிக்கனம், வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் தொடர்பில் விசேட கவனம் செலுத்தும் குழு தனது விசாரணைகளின்போது கணக்காய்வாளரால் சுட்டிக்காட்டப்படும் விடயங்கள் மற்றும் ஏனைய விதமாக குழுவுக்குக் கிடைத்துள்ள விடங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தி

அதை தொடர்ந்து மேற்கொள்ளப்படும் விசாரணைகளின் போது ஏற்புடைய அரச நிறுவனத்தின் பிரதான க. அ. /க. அ. குழுவிற்கு முன்னால் அழைக்கப்பட்டு வினவப்படும். பொறுப்புக்கூறலை உறுதிப்படுத்துவதற்கு கணக்காய்வின் பெறுபேறுகளை பரிசீலிக்கும் மற்றும் செயலாற்றுகையை மதிப்பிடும் பணி அளிக்கப்பட்டுள்ள பாராளுமன்றத்தின் நிதி மீதான கட்டுப்பாட்டு குறிக்கோள்களை நிறைவேற்றும் பொருட்டு, தாபிக்கப்பட்டுள்ள அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால், 2017 ஆம் ஆண்டு முதல் காலாண்டில் (2017 சனவரி தொடக்கம் மே மாதம் வரை) விசாரணைக்குட்படுத்தப்பட்ட 36 நிறுவனங்களில் காணப்பட்ட நிதி மற்றும் முகாமைத்துவ குறைப்பாடுகள், முறைகேடுகள் மற்றும் வினைத்திறனின்மை இனங்காணப்பட்டு அவற்றை தடுத்தல் மற்றும் தீர்க்கும் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்ட குழுவின் கருத்துக்கள், சிபார்சுகள் மற்றும் உத்தரவுகள் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அவதானிப்புகள், முடிவுகள் மற்றும் விதப்புரைகள்

நிறுவனங்களின் செயற்பாடுகளும் அவற்றின் தொலைநோக்கு மற்றும் செயற்பணி

பெரும்பாலான அரசாங்க நிறுவனங்களுடன் தொடர்புடைய தொலைநோக்கு மற்றும் செயற்பணி பற்றி கவனம் செலுத்துகையில் அந்நிறுவனங்களின் செயற்பாடுகள் அதன் தொலைநோக்கு மற்றும் செயற்பணியுடன் ஒத்துவராத சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன. பொதுமக்களுக்கு உச்சமட்டத்திலான சேவைகளை வழங்கக்கூடியவகையில் பணியாற்றுவதற்காக நிறுவனத்தின் தொலைநோக்கு மற்றும் செயற்பணிக்கமைய அதற்கு இசைந்தொழுகுகின்ற வகையில் செயலாற்ற வேண்டுமெனவும் அவ்வாறின்றேல் காலத்திற்கேற்றவாறு இடம்பெற வேண்டிய மாற்றங்களை பரிசீலனை செய்து அதற்கிணங்க தாபனம்சார் தொலைநோக்கினையும் செயற்பணியையும் மாற்றியமைக்க வேண்டுமென்பதையும் குழு வலியுறுத்துகின்றது.

<u>மாகாண சபைகள்</u>

மாகாண சபைகளில் சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களை வெளிநாட்டு விஜயங்களுக்காக தெரிவுசெய்தல் மற்றும் அதனோடு தொடர்புடைய ஏனைய நடவடிக்கைகள் பற்றிய பொதுவான வேலைத்திட்டமொன்று கிடையாதென்பதை குழு அவதானித்தது. அதற்கிணங்க அதற்கான திட்டவட்டமான பொதுவான முறையியலொன்று வகுக்கப்படல் வேண்டுமென குழு வலியுறுத்துகின்றது.

<u>மாவட்ட செயலகங்கள் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துதல்</u>

மாவட்ட செயலகங்களை அரசாங்க கணக்குகள் குழுவின் முன் தோற்றுமாறு அழைத்த சந்தர்ப்பங்களில் வெளியாகிய விடயங்களுக்கிணங்க அக்குழுக்கூட்டங்களை நடத்துவதற்கான பொதுவான முறையியலொன்று கிடையாதென்பது வெளிப்பட்டதோடு அதனை முறைசார்ந்ததாக்குதல் வேண்டுமென குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரையின் பிரகாரம் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் அக்குழுக்கூட்டங்கள் நடத்தப்படவேண்டிய விதம் தொடர்பில் கடைப்பிடிக்கவேண்டிய பொதுவான வேலைத்திட்டமொன்று முன்வைக்கப்பட்டுள்ளது. அதற்கிணங்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்டுள்ள DMA 2009(1) மற்றும் 2009.06.09 திகதிய சுற்றறிக்கையின் அறிவுறுத்தல்களுக்கிணங்க தயாரிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வு சுற்றறிக்கை மூலமாக மாவட்டச் செயலாளர்கள் அனைவரையும் விழிப்புணர்வூட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை வெளியாகியதோடு அதன் பொருட்டு குழுவின் பாராட்டு அமைச்சுக்கு உரித்தாகின்றது.

<u>பிரதேச செயலக மட்டத்தில் உள்ளகக் கணக்காய்வினைப் பலப்படுத்துவதற்காக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைத்தல்</u>

பிரதேச செயலக மட்டத்தில் உள்ளகக் கணக்காய்வினைப் பலப்படுத்துவதற்காக பயனுறுதிமிக்க வேலைத்திட்டமொன்றை தயாரிக்க அரசாங்க கணக்குகள் குழுவினால் விடுக்கப்பட்ட பணிப்புரைக்கிணங்க நிகழ்கால முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. அதற்கிணங்க கணக்கியல் மற்றும் கணக்காய்வு பற்றிய அறிவுபடைத்த பட்டதாரி ஒருவர்வீதம் ஒவ்வொரு பிரதேச செயலகத்திற்கும் அவற்றின் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகளுக்காக இணைப்பதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அமைச்சுக்கள், பல்வேறு திணைக்களங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களில் உள்ளகக் கணக்காய்வுக் கூறுகளில் நிலவுகின்ற பதவியணி எண்ணிக்கையை நிவர்த்திசெய்யும் பொருட்டு மேலே குறிப்பிட்டுள்ள தகைமைகளைக்கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை இணைக்க இயலுமெனவும் சுட்டிக்காட்டப்பட்டது.
பகிரங்க நிதியை மிகவும் பயனுறுதியுடனும் வினைத்திறனுடனும் ஈடுபடுத்துவதை நோக்கமாகக்கொண்டு உள்ளகக் கணக்காய்வுச் செயற்பாட்டினை மென்மேலும் பலப்படுத்துவதற்காக மேற்கொண்டுள்ள அந்த செயல்முறைக்கு குழுவின் பாராட்டு உரித்தாகின்றது.

நிறுவனங்களுக்கு சிறப்பியல்பான அவதானிப்புக்கள், தீர்மானங்கள், மற்றும் சிபாரிசுகள்

1. பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு

2016.12.31 ஆம் திகதி மூலதன மொத்த மீதி ரூ. 37,433,648/= இல் ரூ. 25,000,000/= JICA "முதல்நிலை உத்தியோகத்தர்களுக்குப் பயிற்சியளிக்கும் கருத்திட்டத்துக்காக" ஒதுக்கப்பட்ட தொகையாவதுடன் அது 100% மூலதன மீதியாகக் காணப்பட்டது.

இந்நிதி ஏற்பாடுகளை உபயோகிக்காததால் வகைப்பொறுப்புக்கூறல் மற்றும் அரச சேவையின் செயற்றிறன் தெடர்பான பிரச்சினைகள் எழுகின்றன எனவும் இதனால் நிதி முகாமைத்துவத்தின் பலவீனம் நன்கு புலனாகின்றது எனவும் குழு வலியுறுத்தியதுடன் இதற்கு திறைசேரியின் கவனமும் பின்னாய்வும் தேவைப்படுகின்றதென குழு வலியுறுத்தியது.

இதற்குப் புறம்பாக பயிற்றுவித்தலுக்கான நீண்ட காலத்திட்டம் இருக்க வேண்டும் எனவும் சிரேஷ்ட அலுவலர்களுக்கு சர்வதேச பயிற்சி வழங்கப்படுவது முக்கியம் எனவும் இது நீண்டகால முதலீடு எனவும் குழு வலியுறுத்தியது.

2. வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு

2016.12.31 ஆம் திகதிக்கு இலங்கை வெளிநாட்டு சேவையில் பணிபுரியும் வெளிநாட்டு தூதுவர் அலுவலகங்களின் அலுவலர்கள் தமது சேவையிலிருந்து விலகும்போது அறவிடப்பட வேண்டிய பயணச் செலவினங்கள், வாடகை முற்பணம் மற்றும் ஏனைய முற்பணங்கள் பெருமளவில் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. இது 2016.12.31 ஆம் திகதியளவில் முறையே ரூ. 326,472/= ரூ. 200,921,603/= மற்றும் ரூ. 109,559,890/= ஆகக் காணப்பட்டது. வீட்டுச் சேதம் தொடர்பில் உரிய அலுவலருக்கு நேரடி பொறுப்புச் சாட்டப்பட்டிருப்பினும் இந்த அறவீடு தொடர்பாக உயர் ஸ்தானிகர்கள்/ தூதுவர்கள் அடங்கலான உயர் அதிகாரிகளுக்கும் பொறுப்பிலிருந்து நீங்க முடியாது எனவும், இது தொடர்பாக நேரடி மேற்பார்வை இருக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தி பொது முறைமையொன்றை அமைப்பதற்காக அமைச்சினால் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் குழு சிபாரிசு செய்தது.

அதே போன்று வெளிநாடுகளுக்கு கல்வி விடயங்களுக்காக செல்லுகின்ற மாணவர்களின் வசதிகள் மற்றும் பாதுகாப்பு ஆகியன தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும் எனவும், அந்தந்த நாடுகளிலுள்ள தூதரகங்களினூடாக அல்லது உயர் ஸ்தானிகர் அலுவலகங்களினூடாக அவர்களால் பெற்றுக் கொள்ளக்கூடிய சேவைகள் தொடர்பில் முன்கூட்டி அறியப்படுத்துவதற்கும் நெருங்கிய உறவுகளைப் பேணுவதற்குமான ஒரு முறையியல் அவசியம் எனவும் தவிசாளர் சுட்டிக்காட்டினார்.

3. **உயர் கல்வி நெடுஞ்சாலைகள் அமைச்சு**

2010 - 2013 காலப் பகுதியில் வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள் தாமதமாகும் மற்றும் கோப்புகள் காணாமற்போகும் போக்கு காணப்படுகின்றது என குழு அவதானித்ததுடன் இதன் காரணமாக கருத்திட்டங்கள் முடிவடைந்து பல வருடங்களின் பின்னர் வெளிவரும் ஏதேனும் முறைகேடுகள் காணப்படும்போது இது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களைத் தேடிக்கொள்வதற்கான சாத்தியம் இல்லையென தெளிவாகியது. அதன் பிரகாரம் அவ்வாறான சந்தர்ப்பங்களில் இவ்வமைச்சுக்கு மாத்திரம் அல்ல அனைத்து அமைச்சுக்களுக்கும் பொதுவாக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றிய பொது வேலைத்திட்டம் மற்றும் சட்ட வரம்பினை நிதியமைச்சின் பங்கேற்புடன் அமைக்க வேண்டுமென குழு சிபாரிசு செய்தது.

4. **ஊழியர் சேமலாப நிதியம்**

நிதியத்தின் தகவல்கள் தொழில்நுட்ப செயற்பாட்டினை மேம்படுத்த தொழில் திணைக்களம் மற்றும் மத்திய வங்கியுடன் இணைந்து கணினி வேலைத்திட்டமொன்று தயாரித்தலின் முன்னேற்றத்தை பற்றி குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. ஏற்பட்டுள்ள கூடுதலான பிரச்சினைகளுக்கு காரணமாக அமைந்திருப்பது மேம்படுத்தப்பட்ட ஒன்றிணைந்த கணினி வலையமைப்பொன்று இல்லாமை என வலியுறுத்திய குழு, இதற்கான துரித நடவடிக்கையை மேற்கொள்ளும் படி அறிவித்தது. மேலும் இதன் மூலமாக முறைகேடான கொடுக்கல் வாங்கல்களை தடுக்க முடியுமெனவும், கடந்த காலந்தொட்டு இது வரையிலான தகவல்களை இலகுவாக பெற முடியுமெனவும், வெளிப்படைத்தன்மை பாதுகாக்கப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

5. **புத்தசாசன அமைச்சு மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களம்**

பௌத்த கலைக்களஞ்சிய நூல் தயாரித்தல் சுமார் 20 வருட காலமாக நடைபெற்று வருவதோடு அப் பணியை நிறைவு செய்வதில் புத்தசாசன அமைச்சும் மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களமும் இது வரையிலும் வெற்றி காணவில்லை. மேற்படி நூலின் பிரதான பதிப்பாசிரியராக செயற்பட தகுதியுள்ளவரை சேர்த்துக்கொள்ள முடியாமலிருப்பதற்கான காரணம் பிரதான பதிப்பாசிரியருக்குரிய கொடுப்பனவுகள் திருப்திகரமான மட்டத்தில் இல்லாமையே எனவும் வெளியாகியுள்ளது.

6. **தேசிய நூதனசாலை திணைக்களம்**

2012 ஆம் ஆண்டில் தேசிய நூதனசாலையில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவத்திற்கு பின் இற்றைவரை தொல்பொருட்களின் பாதுகாப்பு தொடர்பான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படவில்லை. திருட்டுச் சம்பவம் இடம்பெற்று 5 ஆண்டுகள் முடிவடைந்துள்ள போதிலும் உரிய முறையில் பாதுகாப்பு புகைப்படக் கருவி முறைமையொன்றை பொருத்த இது வரை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை .
இரவு நேர காட்சிகள் பெற முடியாமை போன்ற பல குறைப்பாடுகள் தற்போதுள்ள புகைப்படக் கருவித் தொகுதியில் இருப்பதாகவும், திருட்டு சம்பவம் நடைபெறும் போது தற்போதுள்ள சீ.சீ.ரீ.வீ. புகைப்படக் கருவித் தொகுதி செயலிழந்து இருந்ததாகவும் வெளிவந்துள்ளது. இது வரை இம் முறைமை உரிய முறையில் பொருத்தப்படவில்லை.

வேறு நாடுகளில் தேசிய நூதனசாலைகளில் திருட்டு, தீ அபாய பாதுகாப்பு தொடர்பாக செயற்படுத்தப்படுகின்ற பாதுகாப்பு முறைமைகளை பற்றி ஆராய்ந்து அத்துடன் சம்பந்தப்பட்ட நிபுணர் குழுவின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும், முப்படையினரின் மற்றும் பொலீஸாரின் பாதுகாப்பை பெற்றுக் கொள்வதன் மூலமாக நூதனசாலையின் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும் முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்கும் படி குழுவினால் பணிப்புரை வழங்கப்பட்டது.

7. **<u>உணவு ஆணையாளர் திணைக்களம்</u>**

16 ஆவது சார்க் மாநாட்டின் கொழும்பு சமவாயத்திற்கமைய 8000 மெற்றிக் தொன் விசேட அரிசி ஒதுக்கத்தையும் 2008 ஆம் ஆண்டின் அமைச்சரவை தீர்மானத்திற்கமைய 100,000 மெற்றிக் தொன் பாதுகாப்பு அரிசி ஒதுக்கத்தையும் பேணி வருதல் திணைக்களத்தின் தொலைநோக்காகும் என குறிப்பிடப்பட்டுள்ள போதிலும், மேற்படி ஒதுக்கத்தை பேணி வருவதற்கு போதுமான நிதி ஏற்பாடு திறைசேரியிலிருந்து கிடைப்பதில்லை என்பதை குழு அவதானித்துள்ளது. மேலும் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தொலைநோக்கை அடைய உணவு சேகரிப்பதற்கும் மற்றும் விநியோகிப்பதற்கும் நீண்டகால வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதன் தேவையை இனம்கண்டுள்ள குழு நெல் சந்தைப்படுத்தல் சபையும் உணவு ஆணையாளர் திணைக்களமும் ஒரே அமைச்சின் கீழ் இருப்பதன் தேவையையும் இனம்கண்டிருப்பதோடு, அதற்கான கொள்கை ரீதியான தீர்மானம் எடுப்பதற்காக மத்திய அமைச்சிடம் ஆற்றுபடுத்துவது முக்கியமானதெனவும் வலியுறுத்தியது.

8. **<u>தபால் திணைக்களம்</u>**

2013 ஆம் ஆண்டு கண்டறியப்பட்ட 04 தபால் அலுவலகங்களில் ஏற்பட்ட ரூ.8,613,00/- மோசடி பற்றி மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுகள் 03 வருடம் முதல் 13 வருடம் வரை காலதாமதமடைந்தது.

தபால் அலுவலகங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பிரிவுகளில் இடம்பெற்றுள்ள மோசடிகள், ஊழல்கள் மற்றும் முறைகேடுகள் சம்பந்தமாக நிகழும் புலனாய்வுப் பணிகள் மிகவும் மந்த கதியில் இடம்பெறுவதால் அதனை துரிதப்படுத்துமாறு பிரதம க. அ. ./க. அ. இற்கு ஆலோசனை வழங்கப்பட்டது. இந்த தாமதத்திற்கு காரணம் புலனாய்வு பிரிவில் நிலவுகின்ற உத்தியோகத்தர் பற்றாக்குறை எனவும் இந்த பிரிவில் 16 உத்தியோகத்தர்கள் மாத்திரமே உள்ளனர் என்பதும் தெரியவந்தது. 2016.12.31 ஆம் திகதியாகின்றபோது 2711 புலனாய்வுகள் உள்ளதென வெளிவந்ததனால் அவற்றை தீர்த்துக் கொள்வதற்கு மத்திய அமைச்சு தலையிட்டு பணியாற்ற வேண்டுமென குழு வலியுறுத்தியது.

9. **<u>ஓய்வூதிய திணைக்களம்</u>**

2017.02.28 ஆம் திகதியாகின்றபோது வங்கிகளுக்கிடையிலான கொடுப்பனவு முறைமையின் கீழ் மாதாந்த ஓய்வூதியத்தை ஓய்வூதியக்காரர்களின் வங்கி

கணக்குகளுக்கு அனுப்பும் போது அது உரிய வகையில் சம்பந்தப்பட்ட கணக்குகளில் வரவு வைக்கப்படாததனால் நிராகரிக்கப்பட்டதன் பின்னர் ரூ.53,392,514/- பெறுமதியுடைய 1463 ஓய்வூதியங்கள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு மீள திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. 2010 ஆம் ஆண்டு முதல் இந்நிலை சுட்டிக்காட்டப்பட்டாலும் இற்றைவரை உரிய முறையிலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவில்லையென தெரியவந்தது. இச்சம்பவங்களுக்கேற்ப பல்வேறு ஊழல்கள் மற்றும் மோசடிகள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் உள்ளதால் நிராகரிக்கப்படும் கொடுக்கல் வாங்கல் சம்பந்தமாக பணியாற்றுவதற்கு பிரத்தியேகமாக பிரிவொன்றை தாபித்தல் உசிதமானதென வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையை திருத்தியமைப்பதற்கு ஓய்வூதிய திணைக்களமும் உரிய தகவல் தொழில்நுட்ப முறைகளை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் குழுவினால் வலியுறுத்தப்பட்டது.

மேலும், 2016 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி சம்பளம் மிகையாக செலுத்துப்பட்டமைக்கான மீதி ரூ.320,250,815/- ஆக இருந்ததுடன் இந்த மேலதிக கொடுப்பனவுகளை மீள அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருப்பினும் அவ்வாறு தவறிழைத்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக நி.பி 119 மற்றும் 156 இன் கீழ் நடவடிக்கை மேற்கொள்ளாமை பற்றி குழு தனது அதிருப்தியை தெரிவித்தது.

10. <u>**வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்**</u>

2016 ஆம் ஆண்டில் வெளிநாடுகளினால் வழங்கப்பட்ட 4 புலமைப் பரிசில் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களுக்கு விண்ணப்பங்கள் கிடைக்காமை காரணமாகவும் 128 நிகழ்ச்சித்திட்டங்களுக்கு சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டதனாலும் இலங்கைக்கு அந்த புலமைப்பரிசில்கள் கிடைக்காமல் போயுள்ளமை அவதானிக்கப்பட்டது.

பொருத்தமான ஆட்களிடமிருந்து தாமதமடையாமல் உரிய காலத்தில் விண்ணப்பங்களை கோருதல் பற்றி கவனம் செலுத்துமாறும் இதற்கு பொது நிர்வாக அமைச்சின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ளுமாறும் விதப்புரை செய்யப்பட்டது.

வெளிநாடுகளுடன் கலந்துரையாடி பெற்றுக் கொள்ளப்பட்ட பல புலமைப் பரிசில்களை இலங்கை இழந்துள்ளமை மனவருத்தத்திற்குரிய விடயமாகும் எனவும் மனித வளத்தை விருத்தி செய்து கொள்வதற்கு உச்சமட்ட ஆற்றல் வழங்கப்பட வேண்டுமெனவும் இது அரச சேவைக்காக மேற்கொள்ளக்கூடிய பெறுமதியான முதலீடெனவும் குழு வலியுறுத்தியது.

11. **<u>மோட்டார் வாகன போக்குவரத்துத் திணைக்களம்</u>**

சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்கான சகல நடவடிக்கைகளும் மோட்டார் வாகனப் பரிசோதகர்களினால் மட்டுமே மேற்கொள்ளப்படுவதன் காரணமாக முறைகேடுகள் இடம்பெறுவதற்கு வாய்ப்பு உள்ளதென்பது அவதானிக்கப்படுதல் மற்றும் இதற்கு சுமார் 10 வருடங்களுக்கு முன்னர் சாரதி அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட ஆய்வு முறையியலானது தற்போது தொழிற்படுவதில்லையென்பது குழுவினால் அவதானிக்கப்பட்டது. அறிமுகப்படுத்தப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட ஆய்வு முறையிலிருந்து வெளியேறியமை மற்றும் புதிய தொழில்நுட்ப முறையியல்கள் பின்பற்றப்படாதமை தொடர்பாக குழு அதன் அதிருப்தியினைத் தெரிவித்தது.

12. **<u>கொழும்பு மாவட்ட செயலகம்</u>**

கொழும்பு மாவட்ட செயலகமானது தீக்கிரையானதால் கணக்காய்வு விசாரணைகள் மற்றும் ஏனைய விசாரணைகளுக்குத் தேவையான பல ஆவணங்கள் அழிந்துள்ளதாக கணக்காய்வு விசாரணைகள் தொடர்பான குழுவின் சில கேள்விகளுக்குப் பதிலாக க. அ. தெரிவித்தார். ஆவணங்கள் தீக்கிரையானதால் நிலவுகின்ற சிக்கலான தன்மைகளைத் தீர்ப்பதற்கு போதியளவு சாட்சிகள் இல்லையென்ற பதில்களின் மூலம் திருப்தியடைய முடியாதென குழு தெரிவித்ததோடு இத்தகைய நிலைமைகள் மீண்டும் ஏற்படாதவாறு அலுவலகத்தின் பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் என்பவற்றை கணினிமயப்படுத்துவதற்கான கடுமையான தேவை காணப்படுவதாகவும், இந்த அலுவலகத்தில் மட்டுமல்ல சகல நிறுவனங்களிலும் ஏற்படக்கூடிய திடீர் அனர்த்தங்களிலிருந்து பாதுகாப்படைவதற்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் குழு வலியுறுத்தியது.

13. **<u>வடமத்திய மாகாண சபை</u>**

கணக்காய்வு முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் ஆகக் குறைந்தது ஒரு நிறுவனத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் காலாண்டுக்கு ஒன்றேனும் நடத்தப்பட வேண்டியுள்ள போதிலும், வட மத்திய மாகாண சபையில் 2015 ஆம் ஆண்டில் 35 நிறுவனங்களும் 2016 ஆம் ஆண்டில் 36 நிறுவனங்களும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் எதனையும் நடத்தவில்லை. இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரதான செயலாளர் பொறுப்புக்கூற வேண்டுமெனவும் இதனை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு வலியுறுத்தியது.

14. **<u>கிழக்கு மாகாண சபை</u>**

கிழக்கு மாகாண சபைக்குரிய திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலுள்ள சில பாடசாலைகளின் அதிபர்கள் பாடசாலைகளின் அந்தஸ்தினைப் பேணுவதன் பொருட்டு 2014 ஆம் ஆண்டு (க.பொ.தா.) சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக திறமையை வெளிப்படுத்தாத 88 மாணவர்களுக்கும் 2015 ஆம் ஆண்டு 83 மாணவர்களுக்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கவில்லை.

எத்தகைய நிலைமைகளின் கீழேனும் குறித்த மாணவர்களுக்கு பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி மறுக்கப்பட்டமையின் மூலம் அவர்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளதென குழு அவதானித்ததோடு இத்தகைய நிலைமைகள் எதிர்காலத்தில் இடம்பெறாதிருப்பதற்கு ஆவனசெய்யுமாறும் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட மாகாண கல்விச் செயலாளரின் விசேட கவனத்தை ஈர்க்குமாறும் தெரிவிக்கப்பட்டது.

15. **<u>கொழும்பு மாநகர சபை</u>**

நிலுவை வருமானங்களை சேகரித்தல் மற்றும் வரிப்பணம் அறவிடுதல் பலவீனமான மட்டத்தில் காணப்படுதல் மற்றும் மாநகர சபையின் முறைசாரற்ற விடயங்களின் காரணமாக கிடைக்கப்பட வேண்டிய அதிகளவான வரிப்பண வருமானம் இழக்கப்படுதல் தொடர்பாக குழு கவனம் செலுத்தியது.
பல ஆண்டுகளாக நிலவுகின்ற நிலுவை வருமானங்கள் தொடர்பாக கவனம் செலுத்திய குழுவானது அவற்றை உரிய முறையில் அறவிடுமாறும், எஞ்சிய தொகையை திறைசேரியின் அங்கீகாரத்துடன் பதிவழிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும், வரும் ஆண்டுகளுக்கு செயற்பாட்டுத் திட்டங்களை இயற்றுகையில் வருமானங்களை உரியவாறு சேகரிப்பதற்கு முறை சார்ந்ததும் சீரானதுமான திட்டங்களை இயற்றுமாறும் அறிவுறுத்தப்பட்டது. இந் நடவடிக்கைகள் ஏனைய சகல மாநகர சபைகளுக்கும் ஏற்புடையதாகின்ற வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

16. **<u>டெங்கு நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சைகள் அடங்கிய டெங்கு நோய்க் கட்டுப்பாட்டு வேலைத்திட்டத்தின் செயலாற்றுகை தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை ஆய்வு செய்தல்</u>**

2016 ஆம் ஆண்டுக்கான டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவின் செயற்பாட்டுத் திட்டத்தில் அடையப்பட வேண்டிய உத்தேச இலக்குகள் மற்றும் அந்த இலக்குகள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் குறிப்பிடப்படவில்லை.
செயற்பாட்டுத் திட்டத்தில் பொறுப்பு வாய்ந்த ஆட்கள் தொடர்பாக கட்டாயம் குறிப்பிடப்பட வேண்டுமெனவும், டெங்கு ஒழிப்புக்கு பொது சுகாதார உத்தியோகத்தர்களை வலுவூட்ட வேண்டுமெனவும், தற்போதைய நிலைமையில் 1000 பேருக்கு ஒரு உத்தியோகத்தர் என்ற அடிப்படையிலாவது பொது சுகாதார பரிசோதகர்கள் நியமிக்கப்பட வேண்டுமெனவும் குழுவினால் வலியுறுத்தப்பட்டது.
அத்தோடு, உள்ளூராட்சி நிறுவனங்களில் பணியாற்றுகின்ற பொது சுகாதார பரிசோதகர்கள் பொது சுகாதார உத்தியோகத்தர்களிடமிருந்து அறிவுறுத்தல்களை பெறுகின்ற செயன்முறையொன்றின் முக்கியத்துவமும் சிபார்சு செய்யப்பட்டது.

2017 ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் புலனாய்வு செய்யப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தினதும் இனங்காணப்பட்ட பிரதான பிரச்சினைகள், அவதானிப்புகள் மற்றும் விதப்புரைகள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
ஆட்பதிவுத் திணைக்களம் **2017 சனவரி 24**		
1.	ஓர் ஆளின் பெயரில் இரண்டு அடையாள அட்டைகள் விநியோகிக்கப்பட்டிருத்தல், அடையாள அட்டை மீண்டும் விநியோகிக்கப்படுகையில் பழைய இலக்கத்திற்குப் பதிலாக புதிய இலக்கம் வழங்கப்பட்டிருந்தமை மற்றும் அந்த இலக்கத்தின் கீழ் ஆட்கள் இருவருக்கு அடையாள அட்டைகள் விநியோகிக்கப் பட்டிருந்தமை போன்ற பலவீனங்கள் நிலவியமை	ஆளொருவர் இரட்டை விண்ணப்பப் பத்திரங்களை சமர்ப்பித்தமையால் தகவல் களில் நிலவுகின்ற சிறிய மாற்றங்கள், முறைமையால் ஆட்கள் இருவரென இனங்காணப்படுவதால் ஓர் ஆளுக்கு இரண்டு அடையாள அட்டைகளை விநியோகித்தல் இடம்பெறக்கூடு மெனவும் முதலில் வழங்கியுள்ள தகவல்கள் மற்றும் பின்னர் வழங்கப் படுகின்ற தகவல்களில் முரண்பாடுகள் நிலவுகின்ற போதும் புதிய இலக்கத்தின் கீழ் அடையாள அட்டை விநியோகித்தல் மேற்கொள்ளப்படுகின்ற தெனவும் அது மிகவும் அரிதான நிகழ்வாக அமைந்த போதிலும் விரல் அடையாளங் களுடனான புதிய அடையாள அட்டையை விநியோகித்தல் மூலமாக நிலவுகின்ற பெரும்பாலான பலவீனங்களைக் குறைத்துக்கொள்ள இயலுமெனவும் பிரதம க. அ. / க. அ. கூறினார். நிலவுகின்ற முறையியலில் இனங்கண்ட பலவீனங்கள் பற்றிய முழுமையான கற்கை யொன்றினை மேற்கொண்டு அதனைத் தடுப்பதற்காக மேற்கொள்ளக் கூடிய வழிமுறைகள் மற்றும் 3 மாதங்களுக்குள் அதனை அமுலாக்கிய விதம் பற்றி தயாரிக்கப்பட்ட அறிக்கையொன்றினை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. / கணக்கீட்டு அலுவலருக்கு பணிப்புரை விடுத்தார்.
2.	2007 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட	2006.05.17 ஆந் திகதி அமைச்சரவை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை கருத்திட்டத்தை 2016 திசெம்பர் 31 திகதியளவிலும் நிறைவுசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளாமை.	அங்கீகாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட இக்கருத்திட்டமானது நிலவிய சிக்கலான நிலைமை காரணமாக அமைச்சரவைத் தீர்மானத்தின்பேரில் 2009.09.09 ஆந் திகதி இரத்துச்செய்யப்பட்டது. இதனை மிகவும் பரவலான நோக்கங்களைக் கொண்டதாக மீண்டும் அமைச்சரவையின் அங்கீகாரம் 2011.08.17 ஆந் திகதி கிடைத்துள்ளது. அதற்கிணங்க சனாதிபதி செயலாளர், பாதுகாப்புச் செயலாளர், ஆணையாளர் நாயகத்தை உள்ளிட்ட 11 பேர்களைக்கொண்ட சனாதிபதி தொழிற்பாட்டுக் குழு மூலமாக கொள்கைத் தீர்மானங்கள் மற்றும் கருத்திட்ட மேற்பார்வை மேற்கொள்ளப்படுவதோடு தொழில்நுட்ப ஒத்துழைப்பினை மொறட்டுவ மற்றும் கொழும்பு பல்கலைக்கழகங்களிடமிருந்து பெறத் தீர்மானிக்கப்பட்டது. இதன் ஆரம்ப படிமுறையாக உத்தேச அடையாள அட்டையில் அடங்கிய அனைத்து தகவல்களையும் உள்ளடக்கிய இடைக்கால அட்டையொன்றை விநியோகிப்பதற்காக 2015.10.07 ஆந் திகதி அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சம்பந்தப்பட்ட அட்டைகளை கொள்வனவு செய்வதற்காக 12 நிறுவனங்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்பட்டு EPIC Lanka (Pvt) Ltd எனும் நிறுவனத்திடமிருந்து ஒன்று ரூ. 71.83 ற்கு கொள்வனவு செய்ய பெறுகைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளபோதிலும் இது சம்பந்தமாக நிலவுகின்ற கணக்காய்வாளர் தலைமை அதிபதி விசாரணைகள் நிறைவடையும்வரை கொள்வனவுசெய்தல் இடைநிறுத்தப்பட்டுள்ளதென பிரதம க.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		அ. . / க. அ. கூறினார். இந்த கருத்திட்டத்தை அமுலாக்குகையில் அட்டையின் விலை மட்டங்களைப் போன்றே தரம் பற்றியும் அதிக கவனம் செலுத்தபடவேண்டுமென வலியுறுத்திய குழு வினால் இந்த பணிக்காக நியமிக்கப்பட்ட தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அங்கத்தவர்கள் மற்றும் ஆலோசகர்களின் பெயர்ப்பட்டியலொன்றையும் அவர்கள் மேற்கொண்ட தீர்மானங்களையும் உள்ளிட்ட அறிக்கையொன்றினை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு திணைக்களத்தைப்போன்றே கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டது.
கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் 2017சனவரி 24		
1.	2016 செயற்பாட்டுத் திட்டத்திற்கிணங்க 13 கருத்திட்டங்களுக்காக 249 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும் அவற்றின் நிதிசார் முன்னேற்றம் 117 மில்லியன் ரூபாவாக மாத்திரமே அமைந்திருந்ததோடு அவற்றில் 4 கருத்திட்டங்களில் எவ்விதமான முன்னேற்றமும் இல்லாமை	மீனவர் சமுதாயத்திடமிருந்து தோன்றிய எதிர்ப்பு காரணமாக மேற்படி கருத்திட்டங்களின் பணிகளை ஆரம்பித்தல் தாமதமாகியதெனவும் ஏனைய கருத்திட்டங்களின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனவும் க. அ. தெரிவித்தார். அலைதாங்கியை நிர்மாணித்தல் மற்றும் கரையோரம் பேணலுக்காக மணல் ஊட்டமளித்தல் பற்றியும் குழு தனது கவனத்தைச் செலுத்தியதோடு மணல் ஊட்டமளித்தலுக்காக அல்லது வேறு அலுவலுக்காக கடலிலிருந்து மணல் பெறப்படுகையில் சுற்றாடல் சேதம் குறைவடையத்தக்கதாக செயலாற்றுமாறு வலியுறுத்தப்பட்டது.
2.	கடந்த 06 வருடங்களில் 1592 தகர்த்து அகற்றும் கட்டளைகள் பிறப்பிக்கப்பட்ட போதிலும் அதன் முன்னேற்றம் 10%	கரையோரத் துண்டில் அத்துமீறிய நிர்மாணிப்புகளைத் தடுத்தல் மற்றும் அகற்றுதல் பற்றி சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களுடனும் விரிவான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	எனும் தாழ்ந்த மட்டத்தில் நிலவியமை	உரையாடலை நடத்தி கொள்கைரீதியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் பற்றி குழுவினால் வலியுறுத்தப்பட்டது. தற்போது நிலவுகின்ற இந்த அத்துமீறிய நிர்மாணிப்புகளின் எண்ணிக்கையான 1592 ஐ இனிமேல் அதிகரிக்காமல் இருப்பதற்காகவும் அவற்றை அகற்று வதற்காகவும் கரையோரம் பேணலுக் காகவும் இத்திணைக்களத்திடம் கையளிக் கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கிணங்க உச்ச அளவில் செயலாற்ற வேண்டு மெனவும் குழுவினால் வலியுறுத்தப்பட்டது.
கரையோரம் பேணல் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் அபிவிருத்தி பற்றி நடத்தப்பட்ட விசேட குழு 2017 சனவரி 24		
1.	சம்பந்தப்பட்ட அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் சிலவற்றை ஒரே சமயத்தில் அழைப்பித்து கரையோரம் பேணல், சுற்றுலாக் கைத் தொழில் மேம்பாடு, கரையோர வலயத்தில் கட்டடங்களை நிர்மாணித்தல், கரையோர வலயத்தை சுத்தமாக வைத்திருத்தல், கடலரிப்பு மற்றும் கரையோரத்தைக் கட்டி வளர்த்தல் போன்றே அதனோடு தொடர் புடைய அமுலாக்கல் நிறுவனங்கள், நிலவுகின்ற சட்ட நிலைமைகள் மற்றும் தோன்றுகின்ற நடைமுறைச் சிக்கல்கள் பற்றியும் அதனைச் சார்ந்த சிக்கல்களைத் தீர்த்துவைப்பதற்கான உரையாட லொன்றின் அவசியப்பாட்டினையும் குழு வலியுறுத்தியது.	சம்பந்தப்பட்ட அலுவல்களையும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்களையும் முன்னெடுத்துச் செல்வதற்காக அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக் கிடையிலான ஒருங்கிணைந்த வேலைத் திட்டமொன்று கிடையாதெனவும் ஒருசில பணிகளுக்காக குழுக்கள் நியமிக்கப் பட்டுள்ளதெனவும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் செயலாளர் தெரிவித்தார்.
2	கரையோரம் பேணல் நடவடிக்கைகள்,	மேற்படி உபகுழுவின் முன்னிலையில் தோற்றுமாறு மகாவலி அபிவிருத்தி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	சுற்றுலா வலயங்களை இனங்காணல், கரையோர வலயத்தில் ஹோட்டல்கள் மற்றும் வீடமைப்புத் தொகுதிகளை நிர்மாணித்தல், கரையோர வலயத்தில் குப்பைகூழங்களை அகற்றுதல், மீன்பிடிக் கைத்தொழில், கடலரிப்பு மற்றும் கரையோரம் ஊட்டமளிக்கப்படல் போன்றே அதனோடு பின்னிப்பிணைந்த சமூக பொருளாதார சிக்கல்கள் பற்றி நீண்ட உரையாடலில் ஈடுபட்ட குழுவினால் இந்த சிக்கல்களுக்கு தீர்த்துவைத்தல், தீர்வுகள் மற்றும் ஒழுங்குறுத்தலுடன் சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றின் அவசியத்தை வலியுறுத்தி அப்பணிகளை மேற்பார்வை செய்தல், ஒழுங்குறுத்தல் மற்றும் மதியுரை வழங்குவதற்கான உபகுழு நியமிக்கப்பட்டதோடு அதன் தலைமை கௌரவ சுஜீவ சேனசிங்கவிடம் கையளிக்கப்பட்டது.	மற்றும் சுற்றாடல், சுற்றுலாத்துறை அபிவிருத்தி மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள், மாநகர அபிவிருத்தி, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி, கடற்றொழில் மற்றும் நீரக வளமூல அபிவிருத்தி ஆகிய அமைச்சுகளும், கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் அபிவிருத்தி திணைக்களம், இலங்கை சுற்றுலா மேம்பாட்டுப் பணியகம், இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, மாகாண சபைகள் மற்றும் சம்பந்தப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்கள், புவிசரித வியல் அளவை மற்றும் சுரங்கங்கள் பணியகம், மத்திய சுற்றாடல் அதிகாரசபையை உள்ளிட்ட அவசிய மானவையென உணர்கின்ற வேறு நிறுவனங்களுக்கும் அழைப்புவிடுத்த பின்னர் இடைத் தொடர்புகளைக் கொண்ட ஒருங்கிணைந்த திட்ட மொன்றைத் தயாரித்தல் மற்றும் நடை முறைப்படுத்துதல் பற்றிய விடயங்களை புலனாய்வுசெய்து குறைந்தபட்சம் ஏறக் குறைய 03 மாத காலப்பகுதிக்குள் மேற்படி உபகுழுவின் அறிக்கையை அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவிடம் சமர்ப்பிக்கவேண்டுமெனவும் குழுவினால் அறிவிக்கப்பட்டது. மேற்படி உப குழுவின் அலுவல்களை இணைப்பாக்கம் செய்கின்ற பிரதான அமைச்சாக மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சு செயலாற்றவேண்டுமெனவும் இங்கு தீர்மானிக்கப்பட்டது.

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு
2017 சனவரி 25

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
1.	(i) ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் , உலக வங்கி மற்றும் அசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் கொழும்பு மெட்றோபொலிட்டன் வலயத்திற்குள் வாகன நெரிசலைக் குறைப்பதற்காக தயாரிக்கப்பட்ட 25 வருடங்களுக்கான விரிவான திட்டத்திற்கிணங்க 2015 தொடக்கம் 2021 வரையான 06 வருட காலப்பகுதிக்குள் குறுங்கால முதலீடாக 741,200 மில்லியன் ரூபா மற்றும் தொழிற்பாட்டு மற்றும் பராமரிப்பு செலவினமாக 237,100 மில்லியன் ரூபா செலவினத்தை ஏற்க திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் இந்த திட்டங்களுடன் தொடர்புடையதாக எவ்விதமான நிதிசார் அல்லது பௌதீக முன்னேற்றத்தை அடைவதில் அமைச்சு வெற்றிபெற்றிராமை.	இதன்பொருட்டு ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுனத்தின் (JAICA) நிதியுதவியுடன் திட்டமொன்று வகுக்கப்பட்டிருந்ததோடு மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் மீண்டும் மீளாய்வுசெய்திருந்த வேளையில் மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சு நிறுவப்பட்டதுடன் மேற்படி திட்டங்களின் பொறுப்பு மேற்படி அமைச்சின்கீழ் கையளிக்கப்பட்டுள்ளதாக பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார். மேலும் அது காணிப் பயன்பாட்டுத் திட்டமாகவும் போக்குவரத்து திட்டமாகவும் அமைவதால் போக்குவரத்து அமைச்சும் அவ்வமைச்சுடன் ஒன்றாக செயலாற்றுவதாகவும் JICA மற்றும் மொறட்டுவ பல்கலைக்கழகம் மேற்கொண்ட ஆய்வுகளை அடிப்படையாகக்கொண்டு அதனை முன்னெடுத்துச் செல்வதாகவும் பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார்.
	(ii) இலங்கை புகையிரத திணைக்களம் மற்றும் இலங்கை போக்குவரத்துச் சபையின் நட்டங்களை குறைப்பதற்காக 2012 இல் இருந்து 2016 வரையான காலப்பகுதியுடன் தொடர்புடையதாக உபாயமுறைத்திட்டம் தயாரிக்கப்பட்டிராமை தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது. அத்துடன் 2012 இல் இருந்து 2016 வரையான காலப்பகுதியுடன் இலங்கை போக்குவரத்துச் சபையின் நட்டங்கள் குறைவடைந்திருந்தபோதிலும் இலங்கை	இது சம்பந்தமாக ஏறக்குறைய 8100 கடிதக்கோப்புகள் உள்ளதாகவும் சட்டச் சிக்கல்கள் காரணமாக தாமதங்கள் ஏற்பட்டுள்ளதெனவும் பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	புகையிரத திணைக்களத்தின் நட்டம் தொடர்ச்சியாக அதிகரித்திருந்ததோடு இலங்கை புகையிரத திணைக்களத்தின் காணிக் குத்தகைப் பண நிலுவை 2016.12.31 ஆந் திகதியளவில் 1887 மில்லியன் ரூபா வரை அதிகரித்திருந்தமை. (iii) புறக்கோட்டை, மொறட்டுவ. நீர்கொழும்பு, கம்பஹா மற்றும் கொட்டாவ ஆகிய புகையிரத நிலையங்களில் இருந்து இலங்கை போக்குவரத்துச் சபையுடன் ஒருங்கிணைந்த பேருந்து சேவையொன்றினை அமுலாக்குதல் பற்றி அமைச்சின் கவனம் செலுத்தப்பட்டிராமை.	மாநகர மற்றும் மேல்மாகாண அபிவிருத்தி அமைச்சின் கீழ் போக்குவரத்து திட்டமொன்று அமுலாக்கப்படுவதாகவும் உத்தேச கொழும்பு கோட்டை சாரந்த போக்குவரத்து மையம் (Transport Hub) பற்றியும் இந்திய கடன் திட்டத்தின்கீழ் 500 பேருந்து என்ஜின் தொகுதிகளைப் பெற்றுக்கொள்ளல் அத்துடன் இது பேருந்து – புகையிரத ஒருங்கிணைந்த சேவையொன்றை ஆரம்பிக்க மேற்கொண்ட ஒரு படிமுறை எனவும் குறிப்பாக பத்தரமுல்லவுக்கு பேருந்துகள் ஓட்டப்படுதல் இடம்பெற்று வருகின்றபோதிலும் மேற்படி பேருந்துகளை நிறுத்திவைக்க தரிப்பு நிலையமொன்று கிடையாதெனவும் அதற்கான தீர்வொன்று அவசியமாகி உள்ளதெனவும் பற்றி பிரதம க. அ. / க. அ. தெளிவுபடுத்தினார்.
2.	(i) குருநாகலில் இருந்து ஹபரண ஊடாக தம்புல்ல புகையிரத வீதிக் கருத்திட்டத்தின் பணிகள் பற்றியும் ஏனைய உத்தேச புகையிரத வீதிகளின் சாத்தியவள அறிக்கைகளும்	இத்தகைய கருத்திட்டங்களுக்காக பெருந்தொகையான பணம் முதலீடு செய்யப்படுவதால் முன்னுரிமைப் பட்டியலுக்கு செல்லநேரிடுவதாகவும் அத்துடன் இதன்போது செலவாகின்ற பணத்தொகையும்' அதனோடு சார்புரீதியாக புகையிரத வீதியை மேலும் நீடித்தல் பற்றியும் சிக்கலான நிலைமையொன்று உள்ளமையால் மீள்பரிசீலனை செய்யவேண்டி நேர்ந்துள்ளதெனவும் பிரதம க. அ. / க.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	(ii) களணிவெலி புகையிரத வீதி பற்றிய நிலைமை	அ. கூறினார். அது சம்பந்தமான சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியின்கீழ் அவிஸ்ஸாவளை வரை இரட்டை புகையிரதப் பாதையாக விருத்திசெய்வதாகவும் இத்தகைய கருத்திட்டங்கள் காரணமாக காணிகளை இழக்கின்ற அத்துமீறிய குடியிருப்பாளர்களை மீளக் குடியமர்த்த துரித நடவடிக்கை மேற்கொள்வதாகவும் பிரதம க. அ. / க. அ. கூறினார்.
3.	(i) 200 பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளுக்காக பாதுகாப்பு முறைமைகளைப் பொருத்துவதற்கான பெறுகையுடன் தொடர்புடையதாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு மேற்கொண்டு விதப்புரையினைப் பொருட்படுத்தாமல் ஒப்பந்தத்தை அளிப்புச் செய்தமையால் ரூபா 258 மில்லியன் நட்டம் விளைந்துள்ளமை.	நிகழ்காலத்தில் அந்த கொடுக்கல் வாங்கல் FOB அல்லாமல் CIF முறைக்கிணங்க அமுலாக்கப்படுவதால் கப்பற் கட்டணம் செலுத்தாமையால் ஏதேனும் அனுகூலம் தமக்கு கிடைப்பதாகவும் இலங்கையில் உள்ள மொத்தமான பாதுகாப்பற்ற புகையிரதக் கடவைகளின் எண்ணிக்கை 671 எனவும் அவற்றுக்காக வருங்காலத்தில் பெல் மற்றும் லயிற் ஆகிய இருவகைளையும் பொருத்த எதிர்பார்ப்பதாகவும் பிரதம க. அ. / க. அ. கூறினார்.
	(ii) 2015 ஆம் ஆண்டில் M-9 புகையிரத என்ஜின் ஒன்று 162 மில்லியன் ரூபாவுக்கு கொள்வனவு செய்யத்தக்கதாக இருக்கையில் அதற்குப் பதிலாக 13 1/2 வருடங்களாக பாவனையில் இருந்து விலக்கிவைத்திருந்த 02 என்ஜின்களுக்காக 192 மில்லியன் ரூபா கேட்புவிலை அளிப்புச்செய்த அதன் திருத்தவேலைகளுக்குப் பின்னர் வெற்றிகரமாக ஓட்டப்பட இயலுமா என்பது பற்றிய உறுதிப்படுத்தலை	இங்கு மதிப்பீட்டுக் குழுவொன்றின் விதப்புரையின்பேரில் கேள்வி அளிப்புச் செய்யப்பட்டுள்ளதெனவும் முதலில் ஆரம்பக் கொடுப்பனவினை மாத்திரம் செய்து ஓட்டக்கூடிய ஆற்றலை பரிசோதித்துப்பார்த்த பின்னர் எஞ்சிய பணத்தொகையை செலுத்துவதாகவும் இந்த நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டதாக கேள்வி அளிப்புச் செய்யப்பட்டதெனவும் அதற்காக 03 வருடகால பொறுப்புறுதி உள்ளதெனவும் பிரதம க. அ. / க. அ. கூறினார். அது சம்பந்தமான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	பெற்றுக்கொள்ள சம்பந்தப்பட்ட நிபந்தனைகள் உடன்படிக்கையில் உள்ளடக்கப்பட்டிராமை. (iii) வீதிப் பாதுகாப்பு பற்றிய தேசிய ஆணைக்குழுச் சட்டத்தை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதில் தாமதமேற்பட்டமை மற்றும் மேற்படி நிறுவனம் தொடர்பான தொடர்நடவடிக்கைகளோ மதிப்பீடோ மேற்கொள்ளப்படாமை.	அறிக்கையொன்றினை பெப்ருவரி 01 ஆந் திகதிக்கு முன்னராக சமர்ப்பிக்குமாறு குழு பணிப்புரை விடுத்தது. ஒரு நிறுவனமென்ற வகையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிராவிடினும் ஒரு கருத்திட்டமென்றவகையில் இது இயங்கி வருகின்றதெனவும் அதன் மூலமாக பலியானவர்களுக்கு நட்டஈட்டுத் தொகை செலுத்தப்படுகின்றதெனவும் 2015 செத்தெம்பரில் இருந்து இதனை ஒரு நிறுலனமாக கூட்டிணைக்க சட்டவரைஞர் திணைக்களத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதெனவும் பிரதம க. அ. / க. அ. கூறினார். இந்த சட்டம் பற்றிய அறிக்கையொன்றை பெப்ருவரி 01 திகதிக்கு முன்னர் வழங்குமாறு குழுவினால் பணிப்புரை விடுக்கப்பட்டது.
	தென் மாகாண சபை 2017 சனவரி 25	
1.	தென் மாகாணசபையில் நிலவுகின்ற 1881 ஆக அமைந்த ஊழியர் மிகைநிலையும் 6957 ஆக அமைந்த வெற்றிடங்களும்	2014/25 இலக்கமுடைய பொது நிர்வாக சுற்றறிக்கைக்கிணங்க ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட ஊழியர்களுக்கு அதே பதவியில் நிரந்தரமாக்கப்படுவதற்கான பணிப்புரை வழங்கியமை மற்றும் வெற்றிடங்கள் நிலவாவிடினும் அமய அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட ஊழியர்களை நிரந்தமாக்கிமையும் காரணமாக மிகையான ஊழியர் எண்ணிக்கை தோன்றியுள்ளதெனவும் குழு அவதானித்தது.
2.	2000 யூன் 12 ஆந் திகதிய 1A1/2000/1இலக்கமுடைய திறைசேரி சுற்றறிக்கை மற்றும் 2007 சனவரி 26 ஆந் திகதிய 5/2007 இலக்கமுடைய தென்	இந்த நிறுவனங்களின் கூட்டங்களை உரிய தடவைகள் நடத்துவதற்கேதுவாக அறிவுறுத்தல்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்வதாகவும் கடந்த 2 வருடங்களில் படிப்படியான முன்னேற்றம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	மாகாணசபை (நிதி) சுற்றிக்கையின் பிரகாரம் காலாண்டுக்கு 01 கூட்டம் வீதம் ஆண்டொன்றுக்கு 4 கூட்டங்கள் நடத்தப்படவேண்டியபோதிலும் 09 நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் ஒன்றுகூட நடத்தப்பட்டிராமை.	அடையப்பெற்றுள்ளதாகவும் பிரதம க. அ. / க. அ. அறிவித்தார்.
3.	2006 ஆம் ஆண்டில் 9.6 மில்லியன் ரூபா செலவிட்டு கொள்வனவுசெய்த தார் பாய்ச்சும் இயந்திரம் முறையாக பாவனைக்கு எடுக்கப்படாமை மற்றும் மேல் மாகாண சபைக்கு வாடகை அடிப்படையில் வழங்கியதன் மூலமாக 2 மில்லியன் ரூபா அறிவிடப்படவேண்டியதாக உள்ளமையும்.	சேதமடைந்த வீதிகளை தீரத்தியமைப்பதற்காக அந்த இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டதெனவும் தார் பெறுகையில் கடைப்பிடிக்கப்பட்ட செயல்வழிமுறையினை மாற்றியதால் இந்த இயந்திரத்தைப் பாவிக்க இயலாமல் போனமையால் தற்போது பாவிப்பதில்லை எனவும் பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார். மேல் மாகாண சபையிடமிருந்து கிடைக்கவேண்டிய பணத்தொகையை அறிவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாக பிரதம க. அ. / க. அ. மேலும் அறிவித்தார்.
4.	தென் மாகாண அபிவிருத்தி அதிகாரசபையினால் 25 இலட்சம் தேயிலை நாற்றுகள் வழங்க்கபடுதல் சம்பந்தமாக 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2011 ஆம் ஆண்டுவரையான காலப் பகுதிக்குள் 22 ஒப்பந்த உடன்படிக்கைகள் செய்யப்பட்டிருந்ததோடு பின்வரும் விடயங்கள் வெளியாகின. (அ) பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.4.8 இன் பிரகாரம் செயலாற்றுகை முறி மற்றும் 5.4.4 இன் பிரகாரம் முற்பண முறி பெறப்பட்டிருக்கவில்லை. (ஆ) தேயிலை நாற்றுகளை குறைவாக வழங்கியமை மற்றும் அதிகாரசபை யினால் முற்பணமும் இறுதி செலுத்துதலும் மேற்கொள்ளப்பட்டமையால் 2013 மே மாதமளவில் அதிகாரசபைக்கு 18,034,507/- நேரடியான நட்டம்	இந்த காணி ஒப்பந்தாதாரருக்கு சொந்தமான அடகு வைக்கப்பட்டிருந்த காணியெனவும் அதனை விடுவித்துக்கொள்ள ரூ. 600,000/- செலுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. / க. அ. அறிவித்தார். சட்டத்துறை தலைமை அதிபதி திணைக்களத்திற்கு இந்த விடயங்கள் ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதெனவும் இந்த விடயங்கள் சம்பந்தமாக தென் மாகாண சபையின் சட்டப்பிரிவு மூலமாக சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள செயலாற்றி வருவதாகவும் பிரதம க. அ. / க. அ. மேலும் அறிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	ஏற்பட்டமை. (இ) 2013 ஆம் ஆண்டளவில் வழங்கலாளர்களிடமிருந்து அறிவிடப்படவேண்டிய 18 மில்லியன் ரூபா பணத்தொகை அறிவிடப்படாமை யால் ரூ.5,667,260/- வட்டி வருமானத்தை அரசாங்கம் இழந்தமை. (ஈ) நிலுவைத்தொகை அறவிடப்பட வேண்டி இருக்கையில் வெளியாளொரு வருக்கு சொந்தமான காணியை கொள்வனவு செய்வதற்காக அதிகாரசபை யினால் ஒப்பந்ததாரருக்கு ரூ. 600,000/- பணத்தொகை வழங்கப்பட்டமை. இந்த கொடுக்கல் வாங்கலுக்காக முத்திரைத் தீர்வை விடுவிக்கப்பட்டுள்ளதோடு அதற்காக தென் மாகாண காணி நியதிச்சட்டத்தின் கீழ் ஏற்பாடுகள் கிடையாதென்பதையும் குழு அவதானித்தது. அத்துடன் நிலுவைத் தொகையை அறவிட்டுக் கொள்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யும் நடவடிக்கைகள் 2017 சனவரி 15 ஆந் திகதி வரை மேற்கொள்ளப்படவில்லை என்பதோடு அதிகாரசபையின் கீழ் கொள்ளப்பட்ட காணி தொடர்பான மதிப்பீட்டறிக்கையும் கிடைத்திருக்கவில்லை.	
5.	2009 ஆம் ஆண்டில் சபையின் நிதியினால் ரூ. 5.3 மில்லியன் செலவில் ஆரம்பிக்கப்பட்ட அம்பலாங்கொடை உல்லாசப் பிரயாண விடுதி மற்றும் நடைமுறைப் பயிற்சிப் பாடசாலையை நிர்மாணிக்கும் கருத்திட்டம் இடைநடுவில் நிறுத்தப்பட்டமை தொடர்பாகவும் இவ்விடுதிக்குச் சொந்தமாக இருந்த புராதனப் பெறுமதி மிக்க பொருட்கள்	ரூ. 994 மில்லியன் மதிப்பீடுத்தொகையில் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு ரூ. 5.3 மில்லியன் செலவாகியுள்ளது என்பதையும் நிதி ஏற்பாடுகள் கிடைக்காமையால் இடையில் நிறுத்தப்பட்டுள்ளது என்பதையும் பிரதம க. அ. / க. அ. கூறினார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	காணாமற்போனமை தொடர்பாகவும் குழு விசாரித்தது.	
6.	அம்பாந்தோட்டை 55 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள மாதிரி ஒன்றிணைந்த பண்ணை மற்றும் கால்நடை உயர் இனப்பெருக்க நிலைய கருத்திட்டத்துக்கு 2008 தொடக்கம் 2014 வரை ரூ. 25,259,638/- செலவு செய்யப்படிருப்பினும் இது முழுமையாக தோல்வியடைந்துள்ளதால் இதுபற்றி குழு விசாரித்தது.	இப்பண்ணைக்குரிய காணிகள் சூழவுள்ள பிரதேச வாசிகளினால் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் இக்கருத்திட்டம் செயலிழந்ததாக உள்ளதெனவும் பிரதம க. அ. / க. அ. கூறினார் .
7.	போலிச் சான்றிதழ்களை முன்வைத்து அதிபர் சேவை, ஆசிரியர் சேவை அடங்கலான ஏனைய சேவைகளுக்கு நியமனம் பெற்ற 75 பேர் தென் மாகாண சபையில் இருக்கின்றமை.	இது தொடர்பாக 2017 மார்ச் 15 ஆம் திகதிக்கு முன்பு அறிக்கையிடுவதற்கு பிரதம க. அ. / க. அ. இணக்கம் தெரிவித்தார்
	கொழும்பு மாவட்ட செயலகம் **2017 சனவரி 26**	
1.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக்குழுக் கூட்டங்களை நடாத்துதல்	மூன்று மாதங்களுக்கு ஒரு தடவை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்படுவதாக க. அ. கூறினார். பிரதேச செயலக மட்டத்திலும் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கும் இது தொடர்பாக மாவட்ட செயலகங்களுக்கு அறிக்கையிடக் கூடியவாறு மிகவும் பயனுறுதியுள்ள வேலைத்திட்டமொன்றை அமைக்குமாறு குழு க. அ. க்கு பணித்தது.
2.	திம்பிரிகஸ்யாய மற்றும் மஹரகம பிரதேச செயலகங்களுக்குரிய உத்தியோக பூர்வ விடுதிகளில் மாவட்ட செயலகத்தையோ பிரதேச செயலகத்தையோ சாராதவர்கள் குடியிருத்தல்.	இவ்வாறு குடியிருப்பதற்கு அத்தியாவசிய காரணமின்றேல் உடனடியாக அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கும்படியும் இது தொடர்பான அறிக்கையை ஒரு வார காலத்தில் குழுவுக்கு வழங்கும்படியும் பிரதம க. அ. க்கு பணிக்கப்பட்டது.
3.	2015 திசம்பர் 15 ஆம் திகதியன்று பொது வைப்புக் கணக்கில் ரூ.543.48 மில்லியன்	இதில் பெரும்பகுதி காணி நட்டஈட்டுக்கானது எனவும் நட்டஈடு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	தீர்க்கப்படாத மீதி.	வழங்கும் பணி முடிவடையும் வரை இம்மீதியைத் தீர்ப்பது கடினமானது எனவும் இம்மீதியில் 2 வருடங்களைத் தாண்டிய 3.4 மில்லியன் தொகை 2016 திசம்பர் அளவில் தீர்க்கப்பட்டுள்ளது எனவும் க. அ. குறிப்பிட்டார். பொது வைப்புக் கணக்கில் தீர்க்கப்படாத மீதியான ரூபா 543.48 மில்லியன் தொடர்பான விரிவான அறிக்கையை (Break Down) கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அனுப்பும் படி க. அ. க்கு பணிக்கப்பட்டது.
4	கொடபொடவத்தயிலுள்ள அரச விடுதிகளுக்குரிய வாடகை நீண்ட காலமாக அறவிடப்படாமை மற்றும் நீதிமன்ற தீர்ப்பின்படி செயற்படாமை	இவ்வீட்டுத் தொகுதியை வீடமைப்பு அதிகாரசபைக்கு ஒப்படைத்துவிட்டு புதிய வீட்டுத்தொகுதியொன்றை அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் இவ்வீடுகளின் ஆட்சியைப் பெற்றுக்கொள்ள குடியிருப்பாளர்கள் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்துள்ளார்கள் எனவும் இவர்களுக்கு புதிய வீட்டுத் தொகுதியில் வீடு வழங்கப்படும் எனும் உறுதிப்பாட்டின் பேரில் வழக்கு சமரசம் செய்யப்பட்டுள்ளதெனவும் தெரிய வந்தது. பின்னர் வீடமைப்பு அதிகாரசபை யினால் புதிய வீடமைப்பு கைவிடப்பட்டுள்ளது எனவும் நீதி மன்றத்தில் சமரசமாகிய பின்னர் வாடகை செலுத்துவது நிறுத்தப்பட்டுள்ளது எனவும் இதுதொடர்பாக சட்ட மா அதிபரின் ஆலோசனை கிடைத்த பின்னர் நடவடிக்கை எடுப்பதாகவும் க. அ. கூறினார்.அதன் படி பின்னாய்வு செய்யும்படி பிரதம க. அ. / க. அ. க்குப் பணிக்கப்பட்டது.
5	கொழும்பு மாவட்ட செயலகத்தில் 2012 நவம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட திடீர் தீ	இது தொடர்பான சேதம் பற்றிய அறிக்கை கிடைக்கவில்லை என

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	விபத்து தொடர்பான சேதம் பற்றிய அறிக்கையின் படி செயற்படல்.	அவதானித்த குழு அதனை விசாரித்தது. தீ விபத்து தொடர்பான சேதம் பற்றிய அறிக்கை கொழும்பு மாவட்ட செயலகத்தினால் அமைச்சுக்கு அனுப்பப்பட்டுள்ளது எனவும் பொலிஸ் விசாரணை நடைபெறுகிறது எனவும் க. அ. கூறினார். விசாரணையை துரிதப்படுத்தும்படி பொலிஸ் மா அதிபருக்கு அறிவிக்கும்படி க. அ. க்கு பணிக்கப்பட்டது.
6	2007 தொடக்கம் நடைமுறையிலுள்ள பொது வைப்புக்க கணக்கிலுள்ள ரூ. 10 மில்லியன் மீதி.	இம்மீதி பற்றி 2011 இல் வெளியாகியது எனவும் இது எவ்வாறு ஏற்பட்டது என்பதை தேடிக்கொள்ள முடியாதெனவும் க. அ. கூறினார். பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் மற்றும் நிதியமைச்சின் செயலாளர் அடங்கலான குழு நியமிக்கப்பட்டு இத்தொகையைத் தீர்ப்பதற்கோ பதிவழிப்பதற்கோ நடவடிக்கை எடுக்கும் படியும் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி அறிவிக்கும் படியும் இவ்வாறான சம்பவங்களினால் மோசடிகள் இடம் பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படுவதனால் இது பற்றி முக்கிய கவனம் செலுத்தப்பட வேண்டும் எனவும் பிரதம க. அ. /க. அ. க்கு பணிக்கப்பட்டது.
7	புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை கணினிமயப்படுத்தும் திட்டத்தை அறிமுகம் செய்தல்	மாவட்ட செயலகம் தீக்கிரையானதால் விசாரணைக்குத் தேவையான பல ஆவணங்கள் அழிந்துள்ளமை மற்றும் நிலவி வரும் சர்ச்சைக்குரிய நிலைமைகளைத் தீர்ப்பதற்கு போதிய சாட்சியங்களில்லை என்பது ஆகிய பதில்களினால் திருப்தியடைய முடியாதென க் கூறிய குழு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		அலுவலகத்தில் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை கணினிமயப்படுத்துவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது.புதிய கணினி தொழில்நுட்பத்தை பாவிக்கும் எதிர்காலத் திட்டம் மற்றும் காலவரையறைகொண்ட அறிக்கையை குழுவுக்கு அனுப்பும் படி பிரதம க. அ. / க. அ. க்கு பணிக்கப்பட்டது.
கம்பஹா மாவட்ட செயலகம் 2017 சனவரி 26		
1.	2015 இல் ரூ. 294.80 மில்லியன் மூலதன ஏற்பாடுகளில் ரூ.77.31 மில்லியன் மாத்திரம் செலவு செய்துள்ளதால் ரூ.217.44 மில்லியன் (73.77%) மீதமாக இருத்தல்	பெறுகை முறைமை மற்றும் மதிப்பீடுகளில் திட்டவட்டமற்ற செலவினங்கள் அதிகரித்துள்ளதனால் இந்நிலைமை ஏற்பட்டுள்ள போதிலும் உரிய இலக்குகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் க. அ. தெரிவித்தார்.
2.	கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களை நடாத்துதல்	பல்வேறு மாவட்டங்களில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் பலவிதமாக நடைபெறுகின்றமையை அவதானித்த குழு சகல மாவட்டங் களுக்கும் பொதுவான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்களை நடாத்தும் முறைமையை அமைத்து ஒரு மாதத்தில் குழுவுக்கு அறிக்கையை சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. க்குப் பணிக்கப்பட்டது.
3.	ஒய்வூதியம் பிழையாக கணிப்பிடப்பட்ட காரணத்தால் 2015 திசம்பர் 31 ஆம் திகதியன்று 9 பிரதேச செயலகங்களில் ரூ.54,283,293 தொகை மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ளமை.	ஓய்வு பெற்ற அல்லது மரணித்த இராணுவ அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான உரிய தகவல்கள் இன்மையால் இவ்வூதியம் இராணு வத்தினாலும் பிரதேச செயலகங்களி னாலும் செலுத்தப்படுவதனால் இம் மேலதிக செலுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் இத்தொகை அறவிடப்பட்டு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		வருவதாகவும் பிரதம க. அ. தெரிவித்தார். ஓய்வு பெற்ற அலுவலர்கள் தொடர்பில் கிராம அலுவலர் மூலம் வாழ்வுச் சான்றிதழ்களைப் பெற்று இவர்கள் மரணித்தவர்கள் / மரணமாகவில்லை என்பது உறுதி செய்யப்படுவதுடன் இக்காலத்துக்கு இடையில் மரணித்தவர்களின் ஓய்வூதியத்தை போலியாகப்பெற்றுக் கொண்ட மற்றும் போலியாக வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களும் உண்டு எனவும் இவ்வாறு போலியாகப் பெற்றவர்களிடமிருந்து மீள அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும் ஓய்வூதியத்தைக் கணனிமயப்படுத்துவதன் மூலம் இந்நிலைமையைத் தவிர்க்கலாம் எனவும் க. அ. கூறினார். தொம்பே பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் 40,010,502.00 ரூபா தொகையொன்று மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தமை தொடர்பில் விஷேட கவனத்தைச் செலுத்துமாறு குழு பி.க.அ. / க.அ. இற்கு கட்டளையிட்டது.
4.	2016 திசெம்பர் 31 ஆம் திகதியன்று கூட அரச காணிகளுக்கு வழங்கப்பட்ட அளிப்புப் பத்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படாமை.	மாவட்ட காணிப் பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட மற்றும் பதிவு செய்யப்படாத 533 அளிப்புப் பத்திரங்கள் விவசாயிகளுக்கு வழங்கப்படாமை தொடர்பில் குழுவின் வினாவுக்கு பதில் அளித்த பிரதம க. அ. , ஆட்களின் மரணம், உரிமை தொடர்பான பிணக்குகள், ஆட்சி அனுபவிப்பு தொடர்பான பிணக்குகள் மற்றும் துணைப்பிரிவினை தொடர்பான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பிரச்சினைகள் காரணமாக இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகக் கூறினார்.இதுவரை சிக்கலற்ற அளிப்புப் பத்திரங்கள் கிடைக்காவிடின் இது தொடர்பில் கூடிய விரைவில் நடவடிக்கை எடுக்கும்படி க. அ. க்குப் பணிக்கப்பட்டது.
5.	திவுலப்பிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் மாவட்ட அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ரூ. 5,629,000 க்கான 12 அபிவிருத்தித் திட்டங்களை 2014 இல் செயற்படுத்தியிருக்காமை மற்றும் பின்னர் அவற்றை கைவிட்டு விடல் .	2014 இல் பொருளாதார அபிவிருத்தி அமைச்சிடமிருந்து கிடைத்த ஏற்பாடுகளை வருட இறுதியில் வழங்குதல் மற்றும் கொள்ளல் தொடர்பான பிரச்சினைகள் இதற்குக் காரணமாகியது என க. அ. தெரிவித்தார்.
6.	களனி பிரதேச செயலகத்தில் ஒய்வூதியம் பெற்றுவந்த 9 பேர் மரணமடைந்த பின்னர் ஓய்வூதியமாக ரூ. 416,782/- செலுத்தப்பட்டு அதில் ரூ. 137,333 ஐ மீள அறவிடுவது நிச்சயமற்ற நிலையிலுள்ளது.	மேலும் செலுத்தப்படாதுள்ள தொகை 25,978/- ரூபாவாகும். இதில் 22,205/- ரூபா மீளறவிடப்பட்டு வருகின்றது எனவும், இத்தகைய நிலைமை தோன்றியிருப்பதற்கு காரணம் ஓய்வூதியம் பெறுகின்றவர்கள் இறந்த பின்னர் அது தொடர்பில் பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு அறியப்படுத்துவதில் தாமதம் ஏற்படுவது எனவும், இது வரை 95% வீத ஓய்வூதியர்கள் வாழுகின்றமை உறுதிசெய்யப்பட்டுள்ளதாகவும், அவ்வாறு அவ்வாறு உறுதி செய்யப்படாதவர்களின் ஓய்வூதிய சம்பளத்தை இடைநிறுத்துவதற்கு நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது எனவும் க.அ. குறிப்பிட்டார். ஓய்வூதிய சம்பளங்களைச் செலுத்தும் போது நிகழும் முறைகேடுகளையும் பிரச்சனைகளையும் ஓய்வூதியத் திணைக்களத்துடள் இணைந்து தீர்ப்பதற்கு நடவடிக்கையை எடுக்குமாறு குழு பி.க.அ. இற்கு கட்டளையிட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
7	மஹர பிரதேச செயலகத்திற்குரிய கிரிகித்த மேற்கு நீர் விநியோகத் திட்டத்தை நிறைவு செய்வதற்கும் நீர்க் குழாய்களை இடுவதற்கும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபைக்கு ரூ.892,436/= மொத்தத் தொகை வழங்கப்பட்டிருந்தும் 2013 யூன் 03 ஆம் திகதி வரை கருத்திட்டத்தின் எதுவித வேலையும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	இதில் குழாய்க்கிணறு மற்றும் பம்பிச்சாலையின் வேலை முடிவடைந்துள்ளததெனவும் பிரதேச அபிவிருத்திக் குழுவினால் எஞ்சிய வேலைகளுக்கு ரூ. 20 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளதெனவும் தேசிய நீர்வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் இக்கருத்திட்டம் 2017.03.31 ஆம் திகதி அளவில் நிறைவு செய்வதாக உறுதியளிக்கப்பட்டுள்ளதாகவும் க. அ. குறிப்பிட்டார். கம்பஹா மாவட்டத்தில் செயலிழந்த நிலையிலுள்ள அனைத்துக் கருத்திட்டங்கள் தொடர்பாகவும் நடடிக்கை எடுக்கும்படி குழு கணக்கீட்டு அலுவலருக்கு பணித்தது.
8	மினுவங்கொட பிரதேச செயலாளர் பிரிவில் உன்னாருவயில் அமைந்துள்ள கிராம அலுவலரின் உத்தியோகபூர்வ விடுதியில் 1990 தொடக்கம் அனுமதியின்றி குடியிருப்பவர்களை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.	இது தொடர்பில் வழக்குத் தொடரும்படி குழு முன்மொழிந்ததுடன் இதன் ஆட்சி அனுபவிப்பை மீளப் பெறுவதற்காக ஏற்கனவே சட்ட மா அதிபரின் ஆலோசனைக்காக அனுப்பப்பட்டுள்ளதென க. அ. கூறினார்.
9	மாவட்ட செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டிருந்த பூகோள தகவல் தொகுதியை ஒழுங்கமைக்கும் கருத்திட்டத்துக்கு ரூ. 5,171,624/= தொகை பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சினால் செலவு செய்யப்பட்டிருப்பினும் கருத்திட்டத்தின் நோக்கங்கள் ஏதேனும் நிறைவேறாமை.	பாதுகாப்பு அமைச்சும் பொருளாதார அபிவிருத்தி அலுவல்கள் அமைச்சும் ஒன்றிணைந்து இக்கருத்திட்டத்தை செயற்படுத்தியதெனவும் மாவட்ட செயலகத்தினால் கருத்திட்ட இணைப்பு அலுவல்களும் முன்னேற்ற மீளாய்வும் மாத்திரம் செய்யப்பட்டதெனவும் க. அ. கூறினார். இது தொடர்பாக உரிய அமைச்சுக்கள் மற்றும் பல்கலைக்கழகங்களிலிருந்து அறிக்கைகளைப் பெற்றுக்கொள்ளும்படி குழு பிரதான க. அ. / கணக்கீட்டு அலுவலருக்குப் பணித்தது.
10	மஹர பிரதேச செயலகத்தினால் நிலைபேறான தேனீக் கிராமம்	தொழில்நுட்பக் காரணங்களினால் வெற்றியளிக்காத கருத்திட்டமென

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	கருத்திட்டத்துக்காக தனியார் நிறுவனமொன்றுக்கு ரூ. 1,031,436/= செலுத்தப்பட்டு இருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் இறுதியில் இக்கருத்திட்டம் கைவிடப்பட்டிருந்தது.	கைவிடப்பட்டதென க. அ. கூறினார்.
11	2011 ஆம் ஆண்டு மஹர பிரதேச செயலகத்தினால் ரூ. 140,000/= க்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த அதிவேக 5 தையல் இயந்திரங்கள் 2016 இறுதி வரையிலும் பகிர்ந்தளிக்கப்படாமை	இத்தகைய இயந்திரங்களை அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்ட ஒரு சங்கத்துக்கு வழங்கும்படி குழு கணக்கீட்டு அலுவலருக்கு பணித்தது.
12	2014 இல் மஹர பிரதேச செயலகத்தில் நடைபெற்ற நிதி மோசடி மற்றும் இம்மோசடிக்கு காரணமான முகாமைத்துவக் குறைபாடுகளை நீக்குவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி குழு வினவியது.	ரூ. 100,082,045/= தொகை காணாமற் போனமை தொடர்பில் 3 அலுவலர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன் நீதவான் நீதிமன்றத்தில் வழக்குத் தொடரப்பட்டுள்ளதெனவும் ஒரு அலுவலர் சிறையில் இருப்பதாகவும் இரு அலுவலர்களின் வேலை இடைநிறுத்தம் செய்யப்பட்டு விசாரணை நடாத்தப்பட்டுள்ளதாகவும் இணைந்த சேவைகள் பணிப்பாளர் அதிபதி மற்றும் அரச சேவை ஆணைக்குழுவினால் இவர்களுக்கு எதிராக தண்டனை விதிக்கப்படவுள்ளதாகவும் சட்ட மா அதிபார் திணைக்களத்தினாலும் வழக்குத் தொடரப்படவுள்ளதெனவும் முகாமைத்துவக் குறைபாடுகள் தற்போது நிவர்த்தி செய்யப்பட்டுள்ளதெனவும் க. அ. கூறினார். மாவட்ட செயலகங்கள் தொடர்பாக உள்ளக அலுவல்கள் அமைச்சின் மேற்பார்வை போதாதென வலியுறுத்திய குழு இதனை நிவர்த்தி செய்யும்படி பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு அறிவித்தது.
	இரத்தினபுரி மாவட்ட செயலகம் **2017 பெப்ருவரி 21**	
1	240 வெற்றிடங்கள் மற்றும் 53 மிகை மாவட்ட செயலகத்தில் காணப்படுதல்	கிராம அலுவலர் வெற்றிடங்கள் அதிகமாக உள்ளதெனவும் 2017 சனவரி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		20 அளவில் 47 வெற்றிடங்கள் மாத்திரமே உள்ளனவெனவும் பிரதான க. அ. / க. அ. குறிப்பிட்டதுடன் இவ்வெற்றிடங்களை நிரப்ப துரித நடவடிக்கை எடுக்குமாறு குழு சிபாரிசு செய்தது.
2	பெலமடுல்ல பிரதேச செயலகத்தில் 2016 இல் முதலாவது மற்றும் இரண்டாவது காலாண்டு கூட்டங்கள் நடாத்தப்படாமை	இப்பிரதேச செயலகத்தில் முதல் இரண்டு காலாண்டுகளில் பிரதேச செயலாளர் பதவி மற்றும் அத்தியாவசிய அலுவலர்கள் வெற்றிடம் இருந்ததாகவும் இதனால் கூட்டம் நடாத்த முடியாது போனதெனவும் மூன்றாம் காலாண்டு தொடக்கம் கூட்டம் நடைபெறுவதாகவும் பிரதான க. அ. / க. அ. கூறினார்.
3	அரச ஊழியர் மற்றும் நடுத்தர வகுப்பினருக்கான வீடமைப்புக் கருத்திட்டம் வெற்றியளிக்காமை மற்றும் பின்வரும் முறைகேடுகள் பற்றி குழு வினவியது: • வீடு பெறுனர்கள் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை பற்றி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாமை. • உரிய நிதி பிரதேச செயலாளரின் தனிப்பட்ட சேமிப்புக் கணக்கில் வைப்பு செய்யப்படுதல் மற்றும் தொடர்ந்தும் தனிப்பட்ட கணக்குகளில் ரூ.2.85 மில்லியன் மீதமாக இருத்தல். • உள்ளக அலுவல்கள் அமைச்சினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணையின் முன்னேற்றத்தை அறிக்கையிடாமை.	இக்கருத்திட்டம் தோல்வியடையவில்லை எனவும் பணம் அறவிடப்பட்டு வீடுகள் வழங்கப்பட்டுள்ளதெனவும் பூர்வீக காணி தொடர்பில் சட்டப் பிரச்சினை எழுந்ததால் இப்பணம் திருப்பிச் செலுத்தப்பட்டது எனவும் பிரதான க. அ. / க. அ. கூறினார். பணத்தை மீளச் செலுத்துகையில் ஏதேனும் அநீதி ஏற்பட்டுள்ளதை அவதானித்த குழு வட்டி வழங்குவது தொடர்பாக கவனம் செலுத்தும்படியும் கருத்திட்டம் தொடர்பான அறிக்கையை மார்ச் மாதம் 01 ஆம் திகதிக்கு குழுவுக்கு சமர்ப்பிக்கும்படியும் பணிக்கப்பட்டது.
4	பனஹடுவ குளத்தின் மறுசீரமைப்புக்கு அங்கீகரிக்கப்பட்ட தொகையை தாண்டி ரூ. 417,928/= அதிகமாக செலுத்தப்பட்டமை	இது நீர்ப்பாசன பொறியியலாளர்களின் சிபாரிசின் மீது வழங்கப்பட்டுள்ளதென பிரதான க. அ. / க. அ. கூறினார். இச்சிபாரிசுகள் தொடர்பாக விசாரணை நடாத்தி இதை வழங்கியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதாக பிரதான க. அ. / க. அ. கூறினார்.
5	2010 இல் 6 கலாசார நிலையங்களை நிர்மாணிக்க ஆரம்பிக்கப்பட்டதெனவும் இவற்றை நிறைவு செய்து நோக்கத்தை	இக்கலாசர நிலையங்களை தொழில்நுட்ப குழுவொன்றினால் பரீட்சித்து அதன் சிபாரிசுகளின் பேரில் நிர்மணப்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	நிறைவு செய்ய முடியாது போனதால் செலவு செய்யப்பட்ட தொகையில் ரூ. 15.81 மில்லியன் பயனற்றுப் போயுள்ளதாகவும் இவற்றில் 03 நிர்மாணப் பணிகள் தொடர்பாக திருப்தியடைய முடியாதெனவும் குழு அவதானித்தது, அதன்படி கொலொன்ன நிலையத்திற்கு ரூ. 676.714/= செலவு செய்யப்பட்டுள்ளது என்பதோடு, கஹவத்தை கலாசார நிலையத்துக்கு ரூ.1,118,085/= மற்றும் கொடக்கடுவல கலாசார நிலையத்துக்கு ரூ.1,876,240/= செலவு செய்யப்பட்டுள்ளது.	பணிகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுப்பதாக பிரதான க. அ. / க. அ. கூறினார். அத்துடன் கலாசார அமைச்சின் செயலாளருக்கு இவ்விடயத்தினை நிறைவு செய்தல் தொடர்பாக வினவிய ஒரு கடிதத்தை அனுப்பும்படி குழு பிரதான கணக்கீட்டு அலுவலருக்கு பணித்தது.
6	மருகந்த வலுசக்தி நிலைய நிர்மாண வேலைகளை நிறுத்துவதற்கு மாவட்ட இணைப்புக்குழு மற்றும் சபரகமுவ மாகாண சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ள போதிலும் நிர்மாணப் பணிகளை தொடர்ந்து மேற்கொள்ளல்.	நிலைபேறான வலுசக்தி அதிகாரசபையினால் இது தொடர்பான விசாரணை நடைபெறுவதாகவும் நிர்மாணப் பணிகளை நிறுத்த நீதிமன்ற உத்தரவொன்று தேவை எனவும் இது தொடர்பாக செயற்பட தனக்கு அதிகாரம் இல்லை எனவும் பிரதான க. அ. / க. அ. கூறினார். இக்காணிகளில் ஆரம்பத்தில் குடியிருந்தவர்களுக்கு வேறு காணிகள் வழங்கப்பட வேண்டுமெனவும் நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனவும் குழு பணித்தது. இக்காணி பெறுநர்களின் எண்ணிக்கை, உரிமம் வழங்கப்பட்ட திகதி, உரிமத்தின் நிபந்தனைகள், உரிமம் வழங்கப்பட்டிருக்கையில் பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட வேறு சிபாரிசுகள் மற்றும் அதற்கான அடிப்படை ஆகிய விடயங்கள் தொடர்பான அறிக்கையை 2017 மார்ச் 01 ஆம் திகதிக்கு முன் வழங்கும்படி குழு பணித்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு 2017 பெப்ருவரி 22		
1	பூர்வாங்கத் திட்டத்தில் தபால் அலுவலகம் மற்றும் உப தபால் அலுவலகங்கள் அனைத்தும் வலையமைப்பாக்கப்படுமென குறிப்பிடப்பட்ட போதிலும் 647 தபால் அலுவலகங்கள் மாத்திரமே வலையமைப்பாக்கப் பட்டிருக்கின்றன.	தபால் திணைக்களத்தின் வருமானத்தை மேம்படுத்தல், வினைத்திறனையும் உற்பத்தித்திறனையும் விருத்திசெய்யவும் மற்றும் சேவையை விரிவுபடுத்தும் நோக்கத்துடனும் செயற்படுத்தப்பட்ட வலையமைப்பாக்கல் கருத்திட்டம் காரணமாக வருமானம் அதிகரித்திருப்பதாக க. அ. குறிப்பிட்டார். 3410 உப தபால் அலுவலகங்களை வலையமைப்பாக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார்.
2.	கணினி வலையமைப்பாக்கல் கருத்திட்டத்திற்காக 17 மொடியுல்களை நிர்மாணிக்க 2012.12.31 ஆம் திகதியாகும் போது மொறட்டுவ பல்கலைக்கழகத்திற்கு ரூ. 39.2 மில்லியன் செலுத்தியுள்ள போதிலும் மேற்படி மொடியுல்களை தபால் திணைக்களம் பயன்படுத்தவில்லை. மேற்படி கருத்திட்டம் உத்தேசித்திருந்ததன் பிரகாரம் பூர்த்திச்செய்யப்படாமையினால் செலவிடப்பட்ட நிதியில் ரூ. 6.8 மில்லியன்களுக்கான நலன் மாத்திரமே கிடைத்துள்ளது.	சில மொடியுல்களைத் தவிர ஏனைய அனைத்து மொடியுல்களும் வெற்றிகரமாக செயற்படுவதாகவும் அதற்கமைய தற்போது சுமார் ரூ. 2025 மில்லியன் வருமானமாக ஈட்டியுள்ளதாகவும் க. அ. தெரிவித்தார். பிரதான தபால் அலுவலகங்கள் அனைத்தும் வலையமைப்பாக்கப்பட்டிருப்பதாகவும், 3410 உப தபால் அலுவலகங்கள் கையடக்கத் தொலைபேசிப் பிரயோகம் (Mobile app) மூலமாக இணைக்கப்பட்டிருப்பதோடு, எதிர்வரும் மே மாத இறுதியில் புதிய கணினி வேலைத்திட்டத்தை பூரணப்படுத்த முடியுமெனவும், அதற்காக தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்ப நிறுவகத்தின் (ICTA) ஆலோசனைக்கமைய செயற்படுவதாகவும் க.அ தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		மேற்படி வலையமைப்பாக்கப்பட்ட கருத்திட்டத்தின் நோக்கங்களையும் அதன் வெற்றி, தோல்வி ஆகிய விடயங்களையும் உள்ளடக்கிய முழு அறிக்கையொன்றை பெற்றுத் தரும்படி பிரதம க. அ. க்கு பணிப்புரை வழங்கிய குழு, இக் கருத்திட்டம் பற்றி மொறட்டுவ பல்கலைக்கழகத்திலிருந்து அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளும் படி அறிவித்தது. மேற்படி வலையமைப்பாக்கப்பட்ட வேலைத்திட்டத்தின் முன்னேற்றம், தபால் திணைக்களத்தின் தகவல் தொழில் நுட்ப முறைமையின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால திட்டங்கள் பற்றிய அறிக்கையொன்றையும் குழுவுக்கு அனுப்பி வைக்கும்படி பிரதம க. அ. / க. அ. க்கு பணிப்புரை வழங்கப்பட்டது. தபால் விநியோகப் பணிகளை வினைத்திறனுடனும், விஞ்ஞான ரீதியாகவும் உற்பத்தித்திறனுடனும் மேற்கொள்ளும் படியும் தபால் திணைக்களத்திற்குச் சொந்தமாகவுள்ள காணிகள் சம்பந்தமான பட்டியலை இற்றைப்படுத்தி பேணிவரும் படியும், குழுவினால் ஆலோசனை வழங்கப்பட்டது.
	தபால் திணைக்களம் 2017 பெப்ருவரி 22	
1.	நான்கு தபால் அலுவலகங்களில் இடம்பெற்றிருந்த ரூ.8,613,000/= மோசடி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளுக்கு 03 வருடம் முதல் 13 வருட கால தாமதம் எற்பட்டிருந்தமை.	தபால் திணைக்களத்தின் தபால் அலுவலகங்களிலும் அத்துடன் சம்பந்தப் பட்ட பிரிவுகளிலும் நேர்ந்துள்ள ஊழல்கள், மோசடிகள் மற்றும் முறைகேடுகள் தொடர்பாக மேற் கொள்ளப்படுகின்ற விசாரணை செயற் பாடுகள் மிகவும் மந்தகதியிலானவை என வலியுறுத்திய குழு, மேற்படி விசாரணைப்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பணிகளை துரிதப்படுத்தும்படி பிரதம க. அ. / க. அ. க்கு ஆலோசனை வழங்கியது. 2016.12.31. ஆம் திகதியாகும் போது சுமரர் 2711 விசாரணைகள் இருப்பதாக வெளிவந்தமையினால், அவற்றை தீர்த்து வைப்பதற்கு மத்திய அமைச்சின் தலையீடு அவசியமென குழு வலியுறுத்தியதோடு, இற்றை வரையுள்ள விாரணைகளின் முன்னேற்றத்தை தனித் தனியாக வகைப்படுத்தி (தவறு /மோசடியின் நிதிசார் பெறுமதி மற்றும் தன்மை தொடர்பான வருட வாரியான) அறிக்கையொன்றை 2017 மார்ச் மாதம் 20 ஆம் திகதிக்கு முன் குழுவுக்கு சமர்ப்பிக்கும் படி பிரதம க. அ. / க. அ. க்கு பணிப்புரை வழங்கப்பட்டது.
2.	2007 ஆம் ஆண்டிலிருந்து 2012 வரை இடம்பெற்றுள்ள வாகன விபத்துகள் காரணமாக ஏற்பட்டுளள ரூ. 5,297,609/= நட்டத்தினை பொறுப்புவாய்ந்தவர் களிடமிருந்து அறவிட வேண்டியுள்ளமை, 1983 ஆம் ஆண்டிலிருந்து 2007 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் ஏற்பட்டுள்ள நட்ட நிலுவை தீர்க்கப்படாது புத்தகங்களில் பேணிவரப்படுதல், வாகனங் களுக்கு பூரண காப்புறுதிக் காப்பீடு பெறப்படாமை.	தற்போது தபால் திணைக்களத்தின் வாகனங்களுக்கு பூரண காப்புறுதிக் காப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பதால் எதிர்காலத்தில் அத்தகைய நட்டங்கள் ஏற்படாதெனவும், காலம் கடந்துள்ள நட்ட நிலுவைகளை பதிவழிக்க திறைச்சேரியின் ஆலோசனைக்கமைய நடவடிக்கை எடுப்பதாகவும் க. அ. தெரிவித்தார்.
3.	நாராஹேன்பிட்ட முத்திரை களஞ்சியத்தில் 2015.12.31 ஆம் திகதிக்கு ரூ.7,196,150 / = பெறுமதியான முத்திரைகள் குறைப்பாடாக இருப்பதாகவும், பழுதடைந்த மற்றும் அச்சு குறைப்பாடுகள் காரணமாக நிராகரிக்கப் பட்ட ரூ. 837,050/= பெறுமதி யுள்ள முத்திரைகள் களஞ்சியத்தில் இருந்த தாகவும் வெளியாகியுள்ளது.	இது தொடர்பான விசாரணைப் பணிகளும் சட்ட நடவடிக்கையும் நடைபெற்று வருவதாகவும், அதற்கமைய எதிர்கால நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் க. அ. தெரிவித்தார்.
4.	மத்திய தபால் பரிமாற்று நிலையத்தில் வெளிநாட்டு பொதிகள் பிரிவில் 2014 மே மாதத்தில் டுபாயிலிருந்து இந்நாட்டுக்கு	இத்துடன் சம்பந்தப்பட்டவர்களின் வேலையை இடைநிறுத்தி, குற்றப்பத்திரங்களை சமர்ப்பித்து மீண்டும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	கிடைத்திருந்த பொதிகளிலிருந்த பொருட்கள் அகற்றியதாக குற்றம் சுமத்தப்பட்ட 05 பேரை வேலை நீக்கம் செய்திருக்கையில் 2015 மார்ச் மாதம் மீண்டும் சேவையில் அமர்த்துதல்.	சேவையில் அமர்த்தப்பட்டதாகவும், இது தொடர்பாக நீதிமன்ற செயற்பாடு மேற்கொண்டுள்ளதாகவும், க. அ. தெரிவித்தார். தபால் திணைக்களத்தின் உள்ளக இடமாற்றங்கள் தொடர்பாக முறையான வழிமுறையொன்றை தாபிக்கும் படியும், குழு பிரதம க. அ. / க. அ. க்கு ஆலோசனை வழங்கியது.
5.	ரூ. 24,900,000 க்கு பாதுகாப்பு பிளாஸ்ரிக் இலச்சினை கொள்வனவு செய்யப்படுகையில் தொழில்நுட்ப மதிப்பீட்டு அறிக்கையை வழங்குதல் தாமதமடைந்ததன் காரணமாக குறிப்பிட்ட பண்டங்களை பெற 06 மாதத்திற்கும் அதிகன காலம் சென்றுள்ளதாகவும், தொழில்நுட்ப குழுவினால் தேர்ந்தெடுக்கப்பட்ட இரு நிறுவனங்களில் அதிக விலையை முன்வைத்திருந்த கம்பனிக்கு 2014 நவெம்பர் மாதத்தில் பெறுகையை அளிப்புச் செய்தல்	இச் செயற்பாட்டின் போது உள்நாட்டு விலைக் கேள்வியாளர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதாகவும், பெறுகை செயற்பாட்டின் போது அரசாங்க நிதித் திணைக்களத்தின் ஆலோசனைக்கமைய செயற்படுவதாகவும், இச்செயற்பாட்டின் போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தின் ஆலோசனை பெற்றுக்கொள்ளப்பட்டதாகவும் க. அ. தெரிவித்தார். மத்திய அமைச்சு இத் திணைக்களத்தின் பணிகளில் முனைப்பான தலையீட்டை மேற்கொள்ள வேண்டுமென குழு வலியுறுத்தியதோடு, பொது திறைசேரியின் ஆலோசனைக்கமைய நிலுவையை பதிவளிக்கும்படியும், விசாரணை மற்றும் ஒழுக்காற்று விசாரணை ஆகியவற்றை துரிதப்படுத்தி தீர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளும் படியும், அது பற்றிய அறிக்கையை 2017 யூன் மாதம் 30 க்கு முன், குழுவிடம் அனுப்பும் படியும், பிரதம க. அ. / கணக்கீட்டு அலுவலருக்கு ஆலோசனை வழங்கப்பட்டது.
நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு 2017 பெப்ரவரி 23		
1.	மூலதன நிதி ஏற்பாடு மீதியை சதவீதமாக நோக்கும்போது 2011 ஆண்டில் 10.6% ஆகவும் மற்றும் 2015 ஆம் ஆண்டில் 23.1%	கருத்திட்ட கணக்குத் தகவல்கள் சரியான முறையில் அறிக்கையிடப்படாமை காரணமாக கணக்குகள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	ஆகவும் கணிசமான அளவில் அதிகரித்திருத்தல்.	இற்றைப்படுத்தப்படாமையினால் மூலதன மீதி காண்பிக்கப்பட்டுள்ள போதிலும் கருத்திட்ட மற்றும் ஒதுக்கீட்டு கணக்குகளிலுள்ள வேறுபாட்டை சமப்படுத்தி திருத்துவதற்கு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக பிரதம க. அ. / க.அ தெரிவித்தார்.
2.	2011 ஆம் ஆண்டில் பாரிய தம்புள்ள நீர் வழங்கல் கருத்திட்டத்திற்கு 4 கெப் வண்டிகளை கொள்வனவு செய்கையில் ரூ. 42.73 மில்லியன் மேலதிக செலவினை ஏற்க நேரிட்டுள்ளமை.	அமைச்சரவை அங்கீகாரத்திற்கமைய இந்திய எக்ஸிம் வங்கியுடன் உடன்படிக்கை மேற்கொண்டு மேற்படி கருத்திட்டத்தின் விதிப்புரைகளை தயாரிக்கையில் ஏற்பட்ட குறைபாடுகள் அதற்கு காரணமானதெனவும் அங்கீகரிக்கப்பட்ட விலைகளின் பிரகாரம் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் குறிப்பிட்ட பிரதம க. அ. / க. அ. கருத்திட்டத்தின் சில பொருட்களுக்காக முன்வைக்கப்பட்டிருந்த விலைகள் மெய்யானவையல்ல என்ற போதிலும் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது இது ஆகக்குறைந்த விலைகளைக்கொண்டிருந்த விலைகோரல் எனவும் தெரிவித்தார். இது தொடர்பாக தனது அதிருப்தியை தெரிவித்த குழு கருத்திட்டத்தின் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் மற்றும் பெறுகைக் குழுவினதும் அங்கத்தவர்களின் தகவல்கள், பொருட்களின் எண்ணிகை, செலுத்தப் பட்டுள்ள பணம் ஆகியன உள்ளடக்கப் பட்ட விபரமான அறிக்கையொன்றை அமைச்சிடமிருந்தும் கருத்திட்டங்களில் பின்பற்றப்படுகின்ற பணம் செலுத்தல் செயற்பாடு தொடர்பான கண்காணிப்பு அறிக்கையொன்றை நிதி அமைச்சிட மிருந்தும் மார்ச் 01 ஆம் திகதிக்கு முன் குழுவுக்கு பெற்றுத் தரும்படி பணிப்புரை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		வழங்கப்பட்டது.
3.	2015 ஆம் ஆண்டு இறுதியில் கருத்திட்டங்களுக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுக் கடனும் வட்டியுமான ரூ.6300 கோடியை செலுத்தி முடிப்பதற்கு சபை எடுத்துள்ள நடவடிக்கை.	மொத்த நீர் வழங்கலில் வருமானம் பெறாத 26%, சட்டரீதியற்ற நீர் வழங்கல் மற்றும் விரயமாக்கல் 45% அறிவிக்கப் பட்டிருப்தோடு அதன் மூலம் வருவாய்க்கு நேரடியாகவே தாக்கம் ஏற்படுவதால் விரயமாக்கலை குறைக்க பாரிய கொழும்பு சார்ந்துள்ள 100 ஆண்டுகளை விடவும் பழமைவாய்ந்த குழாய்த் தொகுதியை PE குழாய்களைக் கொண்டு நவீனமயமாக்கவும் 2020 ஆம் ஆண்டாகும் போது கொழும்பு நகரத்தில் வருமானமற்ற நீர் வழங்கலை 18% வரை குறைப்பதன் மூலமாக சபையின் மொத்த நட்டத்தை குறைத்துக்கொள்ளவும் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் 5 வருட காலமாக நீர் கட்டணத்தில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்பதால் அது தொடர்பாக கவனம் செலுத்தப்படுவதாயின் கருத்திட்ட செலவு களை ஈடுசெய்வது போலவே மொத்த நட்டத்தை குறைத்துக் கொள்ளவும் அது உதவியாக அமையு மென பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார். 2020 இல் கொழும்பு நகரத்தில் வருமானமற்ற நீர் வழங்கைல 46% இல் இருந்து 18% வரை குறைத்துக்கொள்ள செயற்படுத்து வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வேலைத் திட்டம் தொடர்பில் திகதி, கால வரையறையுடன் தயாரிக்கப்பட்ட அறிக்கை யொன்றை குழுவிடம் சமர்ப்பிக்கும் படி பணிப்புரை வழங்கப்பட்டது.
4.	நீர் விநியோகம் தொடர்பாக எழுந்துள்ள சிக்கல் காரணமாக கைவிடப்பட்டிருந்த யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர் வழங்கல் கருத்திட்டத்தின் தற்போதைய நிலைமையைப் பற்றி குழு விசாரித்தது.	இக் கருத்திட்டத்தின் நீர் மூலகங்களில் ஏற்பட்ட சிக்கலொன்றை தீர்ப்பதற்கு 4 வருட காலமாக கலந்துரையாடல்கள் இடம்பெற்ற போதிலும் முடிவு கிடைக்காத காரணத்தினால் புறமறிப்பு செயற்பாடொன்று மூலமாக ஒரு பகுதிக்கு நீர் வழங்க நடவடிக்கை மேற்கொண்டு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		வருவதாகவும் ஏனைய பணிகள் தங்குதடையின்றி நடைபெற்று வருவதாகவும் பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார்.
5.	நீர்சார் கருத்திட்டங்களின் தாமதங்களை தடுக்க எடுத்துள்ள செயற்பாடுகள் பற்றி குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.	JICA உதவியுடன் செயற்படுத்தப்பட்ட கண்டி பெரும்பாக மற்றும் கொழும்பு பெரும்பாக நீர் திட்டங்களிலின் மீதி பணத்தை பயன்படுத்தி நாளொன்றுக்கு 30,000 கன மீட்டர் கொள்ளளவைக் கொண்ட கண்டி கருத்திட்டத்தின் கொள்ளளவை 54,000 கன மீட்டர் வரை அதிகரித்துக்கொள்ள முடிந்ததாகவும் பல கருத்திட்டங்களின் பணிகள் இவ்வருடம் முடிவதற்கு முன் நிறைவு செய்யப்படுமெனவும் சமூக நீர் வழங்கல் திட்டங்கள் தொடர்பான சட்டரீதியான விடயங்களை தீர்ப்பதற்கு சட்ட மாஅதிபர் திணைக்களத்திற்கு ஆற்றுப்படுத்தி இருப்பதாகவும் பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார்.
சமூக வலுவூட்டல், சமூக நலன்புரி அமைச்சு 2017 மார்ச் 07		
1.	2016 ஆம் ஆண்டு இறுதியாகும் போது 187 வெற்றிடங்களை நிரப்ப அமைச்சு தவறியமை மற்றும் இதில் 126 மதியுரையாளர் பதவிகள் என்பதால் திட்டமிட்டதன் பிரகாரம் மதியுரைப் பணிகளை செயற்படுத்த முடியாமை.	மதியுரைப் பிரிவானது இவ்வமைச்சின் மிக விசேடமான பிரிவொன்று என்பதோடு அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதி 324 எனவும் தற்போது 216 இருப்பதாகவும் கடந்த காலத்தில் ஊழியர் எண்ணிக்கை 108 ஆக இருப்பதற்கு காரணம் ஆட்சேர்க்கப்பட்ட அலுவலருக்கு மதியுரை டிப்ளோமா பட்டம் இல்லாமையே எனவும் இதற்கான பகிரங்க ஆட்சேர்ப்புக்கு அமைச்சரவை பத்திரமொன்று சமர்ப்பிக்கப்பட்டு அதற்கு அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்றிருப்பதாகவும் பிரதம க. அ. தெரிவித்தார்.
2.	கையடக்க தொலைபேசிக்கான உரித்து இல்லாத அலுவலருக்கு அவ்வசதி வழங்க	2009 ஆம் ஆண்டில் நாட்டில் சிவில் போராட்டமொன்று இருந்த

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	முன் தொடர்புடைய அனுமதியை பெற்றுக்கொள்ளும் படி பணிப்புரை வழங்கப்பட்டிருந்த போதிலும் பொது நிருவாக அமைச்சின் அனுமதியை கோரியுள்ள போதிலும் இது வரை கிடைக்காமை மற்றும் தற்போதைக்கு உரித்து இல்லாத 25 அலுவலர் கையடக்க தொலைபேசிகளை பயன்படுத்துகின்றமையால் நிறுவனத்திற்கு ஏற்பட்டுள்ள நிதிசார் நட்டம்.	நிலைமையினாலும் மற்றும் மதியுரையின் தேவை காரணமாகவும் மேற்படி கையடக்க தொலைபேசி வழங்கப்பட்டதாகவும் இதற்கான சட்டரீதியான காப்பங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள நிறுவன பணிப்பாளர் நாயகத்திடம் சமர்ப்பித்திருப்தாகவும் பிரதம க. அ. தெரிவித்தார். மதியுரை அலுவலருக்கு தற்போது வரை மேற்படி தொலைபேசிகளை பயன்படுத்த இடமளிக்கப்பட்டமைக்கான காரணம் அதனால் மேற்கொள்ளப்பட்ட சேவைகளே எனவும் பிரதம க. அ. தெரிவித்ததோடு அதற்காக இது வரை அனுமதி பெற முடியாமையும் பொறுப்பற்ற விதத்தில் செயற்படுதலும் குழுவின் குற்றச்சாட்டுக்கு ஆளானது.
3.	தமிழ் பாடசாலைகளின் அபிவிருத்திற்காக பயன்படுத்தப்பட்ட ரூ.11.3 மில்லியன் தொடர்பான செயலாற்றறிக்கை இது வரை சமர்ப்பிக்கப்படாமை.	மேற்படி பணம் மன்னார், வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர்களுக்கு பாடசாலை அபிவிருத்திற்காக வழங்கப்பட்டிருப் பதாகவும் அவ்விபரங்கள் திறைசேரியில் பதியப்பட்டிருப்பதாகவும் பிரதம க. அ. குறிப்பிட்டார். 2011 மற்றும் 2012 இல் அமைச்சுகள் மாற்றமடைந்தமையினால் அத்தகவல் களை கண்டெடுக்க முடியவில்லை எனவும் ஆகையால் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்க முடியவில்லையெனவும் தற்போது திறைசேரியின் அச்சிடப்பட்ட குறிப்புகளும் அமைச்சின் பேரேட்டு குறிப்புகளும் கணக்காய்வுக்கு சமர்ப்பி க்கப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. தெரிவித்தார். இத்தகைய சந்தர்ப்பங்களில் பொதுப் பணம் பற்றி தனிப்பட்ட மற்றும் கூட்டுப் பொறுப்பின் முக்கியத்துவத்தை குழு வலியுறுத்திய தோடு அது தொடர்பான அறிக்கையொன்றை 2017

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		மார்ச் மாதம் 25 க்கு முன் குழுவுக்கு அனுப்பும் படி பிரதம க. அ. / க. அ. க்கு பணிப்புரை வழங்கப்பட்டது.
4.	2012 ஆம் ஆண்டில் தனிப் பேற்றோருள்ள குடும்பமொன்றுக்கு சுயதொழில் முயற்சி களுக்கு உதவியாக ரூ.25,000/= பெற்றுக் கொடுக்க அக் குடும்பங்களின் தகவல் களை பெறுவதற்கு பிரதேச செயலகங் களால் முறையான வழிமுறையொன்று திட்டமிடப்படாமையினாலும் 2016 ஆகும் போது தனிப் பேற்றோருள்ள குடும்பம் பங்களின் எண்ணிக்கை 610,945 ஆக அறியப்பட்டிருந்த போதிலும் 24 மாவட்டங்களிலிருந்து சுமார் 700 குடும்பங்கள் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டிருந்தமை.	மேற்படி உதவியானது குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு மாத்திரம் பெற்றுக் கொடுக்கப்படுவதாகவும், மேற்படி வழிமுறைக்கான மாதிரிப் படிவமொன்றை தயாரித்து கணக்காய்வுக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் பிரதம க. அ. தெரிவித்தார்.
5.	2015 வரவு செலவுத் திட்டத்தின் கீழ் குறைந்த வருமானமுடைய சிரேஷ்ட பிரசைகளுக்கு வழங்கப்டுகின்ற ரூ.2000/= மாதாந்த கொடுப்பனவில் ரூ.100/= தேசிய முதியோர் செயலகத்தின் கணக்கொன்றில் வைப்பிலிடப்பட்டுள்ள போதிலும் மேற்படி பணம் எத்தகைய நலன்புரி பணிக்காகவும் பயன்படுத்தப்படவில்லை. 2016 டிசெம்பர் 31 வரை கிடைக்கப்பெற்ற ரூ. 389,000,000/= மற்றும் அதன் பின் கிடைக்கப்பெற்ற ரூ. 54,445,900 /= ஆக மொத்தம் ரூ.443,445,900 உபயோகிக்கப்படாமல் இருத்தல்.	அமைச்சரவை அங்கீகாரத்தை பெற்று மேற்படி நிதியத்தை தாபித்துள்ளதாகவும் முதியோர் நலன்புரிக்கான நம்பிக்கைப் பொறுப்பு நிதியமாக பதிவுசெய்யத் தேவையான வரைவு தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் அதன் மூலம் மேற்படி நோக்கங்களுக்காக செலவுசெய்ய எதிர்பார்ப்பதாகவும் பிரதம க. அ. தெரிவித்தார்.
6.	2016 ஆம் ஆண்டில் அரச சார்பற்ற அமைப்புகளால் சமூக சேவையாக வழங்கப்பட்ட ரூ.1.5 மில்லியன் பெறுமதிமிக்க 8 வகையான உபகரணங்களில் 24,610 அலகுகளை (சக்கர நாற்காலிகள், முடவன்கோல், ஊன்றுகோல், கண்ணாடி மேசைகள், கட்டில்கள், கழிவுக் களங்கள்) சுங்க வரியிலிருந்து விடுவிக்கும் சான்றிதழொன்று அமைச்சினால்	சமூக சேவை திணைக்களத்தில் தன்னார்வ நிறுவனங்களை பதிவு செய்தலின் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ள நிறுவனங்களுக்கு தீர்வை வரிச் சலுகை வழங்க விதந்துரைக்கப்படுவதாகவும் நலன்பெறுநர்களின் பெயர்ப் பட்டியல் உரிய முறையில் பிரதேச செயலகங்களால் பேணி வரப்படுவதாகவும் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்குரிய ஆவணங்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	வழங்கப்பட்டிருந்த போதிலும் மேற்படி நன்கொடைகள் அமைச்சினூடாக அவர்களது மேற்பார்வையின் கீழ் ஊனமுற்றவர்களுக்கு பகிர்ந்தளிக்காமையும் 2013,2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளிலும் இவ்வாறான சில சம்பவங்கள் பற்றி அறிவிக்கப்பட்டுள்ளமையும்.	கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருப்பதாகவும் பிரதேச செயலாளர்கள் மற்றும் சமூக சேவை அலுவலர்களின் விதப்புரை மற்றும் மேற்பார்வயின் கீழ் மேற்படி பொருட்கள் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. தெரிவித்தார்.
7.	வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்காக முறையே ரூ. 353,400,000 /= மற்றும் ரூ. 667,220,000/= சிறுநீரக உதவி ஏற்பாடுகளாக வழங்கப்பட்ட போதிலும் நிதி பயன்பாடு 62% மற்றும் 70% ஆக காணப்பட்டது. 2016 ரூ. 180,405,500/= ஆன உதவியின் மீதி 5011 நோயாளிகளுக்கு செலுத்த போதுமான போதிலும் அப்போது காத்திருப்போர் பட்டியலிலிருந்த 2711 நோயாளிகளுக்கு மேற்படி பணத்தை செலுத்தத் தேவையான வழிமுறைகளை அமைச்சு செயற்படுத்தாமை.	இலங்கையில் தற்போது உள்ள 27000 சிறுநீரக நோயாளிகளில் சுகாதார அமைச்சு பரிந்துரைக்கின்ற குறைந்த வருமானம் பெறுகின்றவர்களுக்கு மேற்படி உதவிகள் செலுத்தப்படுவதாகவும், 2016 ஆம் ஆண்டில் 15,939 பேருக்கு செலுத்தப்பட்டுள்ளதாகவும், 2017 ஆம் ஆண்டில் 19,645 பேருக்கு செலுத்தப்படுவதாகவும் பிரதம க. அ. தெரிவித்தார்.
	மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் 2017 மார்ச் 07	
1	ரூ.740 மில்லியன் முதலீட்டுடன் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட E மோட்டரின் கருத்திட்டத்தின் தற்போதைய முன்னேற்றமும் ரூ. 6.4 மில்லியனை பயன்படுத்தி ஆரம்பித்துள்ள இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் தொடர்புபடுத்துகின்ற கணினி வேலைத்திட்டமும் இலத்திரனியல் பாதுகாப்பு முறைகளுக்கேற்ப கடிதக் கோப்புகள் பாதுகாப்பு (Digital Scanning) பற்றிய முன்னேற்றமும்.	கடந்த ஆண்டில் பெறுகைப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள மேற்படி புதிய கருத்திட்டத்திற்கான விலைக் கேள்வியாளர் தெரிவு நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும், இவ்வாண்டில் யூலை மாதம் 10 ஆம் திகதியாகும் போது கேள்விப்பத்திரம் வழங்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும், 2018 ஆம் ஆண்டு இறுதி கட்டத்தில் கருத்திட்டத்தை செயற்படுத்த எதிர்பார்ப்பதாகவும் பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார். மேற்படி வேலைத்திட்டங்களினதும் E மோட்டரின் கருத்திட்டத்தின் செயற்பாடு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பற்றி திகதி, கால வரையறையுடன் கூடிய அறிக்கையொன்றை குழுவுக்கு பெற்றுத்தரும் படி பிரதம க. அ. / க. அ. க்கு பணிப்புரை வழங்கப்பட்டது..
2	போக்குவரத்திலிருந்து அகற்றப்பட்ட வாகன இலக்கங்களை பயன்படுத்தி சட்டவிரோதமான முறையில் சுங்க வரி செலுத்தாமல் இறக்குமதி செய்யப்பட்ட அல்லது தயாரிக்கப்பட்ட மிட்சுபிசி மொன்றெரோ ரக ஜீப் வண்டியொன்றும் ஹமர் ரக மோட்டார் வண்டியொன்றும் பதிவு செய்யப்பட்டிருத்தல்.	முதலாவது பதிவிலிருந்து வாகனத்தின் உரித்து மாற்றமடைதல், வாகனங்களை பாவனையிலிருந்து ஒதுக்குதல், / ஒதுங்குதல், போக்குவரத்திலிருந்து அகற்றுதல், போன்றவற்றை மேற்கொள்ளும் வழிமுறை பற்றியும் போக்குவரத்திலிருந்து அகற்றப்பட்ட வாகனங்களின் பதிவு இலக்கம், அடிச்சட்டகம் மற்றும் என்ஜின் இலக்கம் தொடர்பாக பின்பற்றப்படுகின்ற வழிமுறை பற்றியும் விபரமான அறிக்கையொன்றை குழுவுக்கு பெற்றுத்தரும்படி பிரதம க. அ. / க. அ. வுக்கு பணிப்புரை வழங்கப்ட்டது.
3..	போலியான முறையில் பதிவுசெய்யப்பட்ட 07 பிராடோ ரக ஜீப் வண்டிகள் பற்றி முன்னைய குழுவினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளின் முன்னேற்றம்.	இரு வாகனங்களின் பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும், ஏனைய 05 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்க சட்ட மாஅதிபரின் ஆலோசனைக்கமைய இலங்கை சுங்க திணைக்களத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்ட பிரதம க. அ. / க. அ. இச்சம்பவத்துடன் தொடர்புடைய அலுவலர்களுக்கு எதிராக பொது நிருவாக அமைச்சினால் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார். ஒரு மாத காலத்திற்குள் மேற்படி விசாரணை அறிக்கை குழுவுக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதம க. அ. /க. அ. இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.
4.	வாகன கடிதக் கோப்புகள் காணாமற் போவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதம க. அ. ./க. அ. உறுதிப்பாட்டினை வழங்கினாலும் கடிதக்	புதிய ஆவணக்கூடத்தின் நிருமாணப் பணிகள் நிறைவுபெற்றுள்ளதெனவும், கடிதக் கோப்புகளின் பொறுப்பினை சம்பந்தப்பட்ட உத்தியோகத்தருக்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	கோப்புகள் காணாமற் போகும் போக்கும் ஆவணங்களின் பாதுகாப்பற்ற தன்மையும் இற்றைவரையும் காணக்கூடியதாக உள்ளது.	சாட்டப்படும் வகையில் உரிய நடைமுறையின் அடிப்படையில் களஞ்சியப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் க. அ. தெரிவித்தார்
5.	இதற்கு முந்திய குழுவினால் விதப்புரை செய்யப்பட்ட இடமாற்றங்களின் முன்னேற்றம்	அனைத்து உத்தியோத்தர்களுக்கும் இடமாற்றம் கிடைக்கும் வகையில் 3 கட்டங்களில் இடம்பெறும் இடமாற்ற முறைமையொன்றை தயாரித்து அதனை 2017 ஆம் ஆண்டு சனவரி மாதம் முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், தகவல் தொழில்நுட்பப் பிரிவில் இடமாற்றங்களை 4 கட்டங்களில் மேற்கொண்டு 2018 ஆம் ஆண்டு நிறைவு பெறும் போது நிறைவு செய்வதற்குள்ளதாகவும் பிரதம க. அ. . தெரிவித்தார்
6.	சுங்க குறிப்புகளை போலியான முறையில் பயன்படுத்தி சில கம்பனிகள் பெருமளவிலான மோட்டார் சைக்கிள்களை பதிவுசெய்துள்ளமை மற்றும் அவ்வாறான தவறுகளை புரிந்துள்ள நிறுவனங்களை இனங்காணப்பட்ட பின்னர் அக்கம்பனிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளும் முறை	மேற்படி அனைத்து மோட்டார் சைக்கிள்களும் 2014 ஆம் ஆண்டிற்கு முன்னர் இறக்குமதி செய்யப்பட்டவைகள் என்பதையும், 2014 ஆம் ஆண்டின் பின்னர் சுங்கத்துடன் தகவல்களை பெற்றுக் கொள்ளும் ஒழுங்குமுறையான முறைமையொன்று உள்ளதால் அவ்வாறான மோசடி நடவடிக்கைகள் இடம்பெறுவதில்லையென பிரதம க. அ. ./க. அ. தெரிவித்ததுடன் இப்பிரச்சினைக்குரிய முறையான எழுத்திலான பதிலொன்றை குழுவுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் அறிவிக்கப்பட்டது. இவ்வாறான மோடிகளை மேற்கொள்ளும் கம்பனிகளை கறைநிரலில் சேர்ப்பதற்கு அல்லது அவற்றிற்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென குழு வலியுறுத்தியது.
7.	சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குதலுக்கு ஏதுவான அனைத்து பணிகளும் மோட்டார் வாகன பரிசோதகர்களினால் மாத்திரம் மேற்கொள்ளப்படுவதால் முறைகேடுகள்	அவ்வறான கணினிமயப்படுத்தப்பட்ட பரிசோதனை முறையொன்று தற்போது இடம்பெறாததுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	ஏற்படுவதற்கான வாய்ப்புகள் இருப்பதாக அவதானிக்கப்பட்டுள்ளமை மற்றும் இதற்கு 10 வருடங்களுக்கு முன்னர் சாரதி அனுமதிப்பத்திரத்தை வழங்குவதற்காக அறிமுகப்படுத்தப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட பரிசோதனை முறையின் முன்னேற்றம்.	முதலாவதாக எழுத்து பரீட்சை நடாத்தப்படுவதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். அறிமுகப்படுத்தப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட பரிசோதனை முறையிலிருந்து விலகியுள்ளமையும் புதிய தொழில்நுட்ப முறைகளை பின்பற்றாமையும் பற்றி குழு தனது அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன் சாரதி அனுமதிப்பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கு காணப்பட்ட பழைய முறைமை மற்றும் அறிமுகப்படுத்தப்பட்ட கணினிமயப்படுத்தப்பட்ட பரிசோதனை முறை செயற்படாமை, சட்டத்தில் திருத்தம் கொண்டுவந்த பின்னர் மேற்கொள்ளப்பட்டுள்ள புதிய நடவடிக்கைகள் ஆகிய விடயங்கள் சம்பந்தமாக அறிக்கையொன்றை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை வழங்கப்பட்டது.
டெங்கு நோயை தடுத்தல் மற்றும் சிகிச்சை உள்ளடக்கிய டெங்கு நோயைக் கட்டுப்படுத்துதல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றுகை பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான ஆய்வு 2017 மார்ச்சு 08		
1.	டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் 2011 ஆம் ஆண்டின் செயல் திட்டத்திற்கு ஏற்ப நுளம்பு அடர்த்தி குறிகாட்டி 5 ஐ விட குறைவாக இருக்க வேண்டுமென்பதுடன் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கு மாகாணத்தில் நுளம்பு அடர்த்தி குறிகாட்டி மிகவும் உயர்ந்த மட்டத்தில் இருந்ததென பூச்சியியல் விஞ்ஞானிகளின் அறிக்கையில் காணக்கூடியதாக இருந்தது.	மேற்கு மாகாணத்தில் கழிவு அகற்றலில் காணப்படும் ஒழுங்குமுறையற்ற தன்மை காரணமாக நுளம்புகள் பரவுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளதாகவும் கழிவுகளை அகற்றும் விடயத்தை முறைசார்ந்த வகையில் மேற்கொள்ளுதல் உள்ளூராட்சி சபைகளின் பொறுப்பென்றும் அந்நிறுவனங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்தல் அத்தியாவசியமான விடயமென்பதும் சுட்டிக்காட்டப்பட்டது.
2.	2016.12.31 ஆம் திகதி மேற்கு மாகாண சுகாதார மருத்துவ நிலையத்தில் பூச்சியியல் மதிப்பாய்வு பணிகளுக்காக அங்கீகரிக்கப்பட்ட 44 பூச்சியியல்	பூச்சியியல் உதவி உத்தியோத்தர்களை பயிற்றுவித்த பின்னர் டெங்கு, மலேரியா மற்றும் யானைக்கால் நோய் ஆகிய மூன்று நோய்களுக்காகவே பூச்சியியல்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	உதவியாளர் பதவிகள் இருந்ததெனினும் தற்போதைய ஆளணி 23 ஆக இருத்தல் மற்றும் மேற்கு மாகாணத்தில் பூச்சியியல் மதிப்பாய்வு 2015 ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டு குறைவடைந்து இருத்தல்	மதிப்பாய்வு பணிகளுக்காக இவர்கள் ஈடுபடுத்தப்பட உள்ளதால் டெங்கு நோய் மதிப்பாய்வு பணிகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ள பணியாளர்களில் பற்றாக்குறை இருப்பதாக காட்டுகின்றதென்றும், பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காக வேண்டுகோள்கள் முன்வைக்கப்பட்டுள்ளதால் ஆட்சேர்ப்பினை மேற்கொள்வதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலும் தெரிவு செய்யப்படுகின்றவர்களில் மிகவும் குறைந்த எண்ணிக்கையானோரே பதவியினை பொறுப்பேற்பதற்கு முன்வருகின்றதாக க. அ. குறிப்பிட்டார். மேலும், பூச்சியியல் மதிப்பாய்வு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான காரணங்கள் மற்றும் தற்போது காணப்படும் பூச்சியியல் மதிப்பாய்வு உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை குறிப்பிட்டு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு குழு பிரதம க. அ. . இற்கு பணிப்புரை வழங்கியது.
3.	சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பணிமனைக்கு கணினி மற்றும் இணையத்தள வசதிகள் வழங்கப்பட்டிருந்தாலும் டெங்கு நோயாளிகளைப் பற்றிய அறிவினை வழங்குதல் உரிய முறையில் மேற்கொள்ளப்படாமை மற்றும் தொற்றுநோய் பிரிவு இணையத்தளத்தின் மூலம் பெற்றுக் கொள்கின்ற தகவல்களின் படி மேற்கு மாகாணத்தில் 43 அரச வைத்தியசாலைகளில் 21 இற்கும் மற்றும் தனியார் வைத்தியசாலைகள் 67 இல் 6 இற்கும் மாத்திரம் தகவல்களை வழங்குதல்	மாகாண வைத்தியாசலைகள், மாவட்ட வைத்தியசாலைகள் மற்றும் ஆதார வைத்தியசாலைகள் ஆகிய பிரதான வைத்தியசாலைகளிலிருந்து நோயாளிகளைப் பற்றிய தகவல்கள் அறிக்கையிடப்படுவதாகவும் கொழும்பு மாநகர சபையின் ஆளுகைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பிரதான தனியார் மருத்துவமனைகளிலிருந்தும் விசேட முறைமையொன்றின் ஊடாக நோயாளர்களைப் பற்றிய தகவல்கள் அறிக்கையிடுதல் இடம்பெறுவதாகவும் க. அ. குறிப்பிட்டார். நாட்டில் நிலவும் நிலவரத்திற்கேற்ப அனைத்து அரச மற்றும் தனியார்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		மருத்துவமனைகளிலும் தகவல்களை பெற்றுக் கொள்ள இயலக்கூடிய வகையில் தகவல்களை அறிக்கையிடும் முறையான திட்டமொன்றை தயாரித்தல் பற்றி கவனம் செலுத்தப்பட வேண்டுமென குழு வலியுறுத்தியது.
4.	2016 – 2020 மூலோபாயத் திட்டத்திற்கேற்ப சம்பவ மரணங்களின் வீதத்தை 0.1% இனை விட குறைக்கக் கூடியதாக இருத்தல் வேண்டும். 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் சம்பவ மரணங்களின் வீதம் 0.16% - 0.18% இடையில் காணப்படுவதுடன் முகாமைத்துவத்தின் குறைபாடுகள் காரணமாக 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் டெங்கு நோயாளிகளின் எண்ணிக்கை முறையே 29,969 மற்றும் 50,102 ஆக அறிக்கையிடப்பட்டுள்ளது.	நோய் பீடிப்பதைக் கட்டுப்படுத்துவதில் காணப்படும் குறைபாடுகள் காரணமாக நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாயினும் வைத்தியாலைகளில் அனுமதிக்கப்படுகின்ற நோயாளிகளை முகாமைத்துவம் செய்தல் உயரிய மட்டத்தில் இருப்பதால் விகிதம் குறைவடைந்துள்ளதென குறிப்பிட்ட க. அ. நோய் பரவுவதை கட்டுப்படுத்துவதற்கு உள்ள அசௌகரியங்களாக கழிவுகளை முறையற்ற விதத்தில் அகற்றுதல் மற்றும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பணிமனையில் நிலவும் போக்குவரத்து வசதிகளுக்கான குறைபாடுகள் போன்ற விடயங்கள் பற்றி குழுவின் கவனம் ஈர்க்கப்பட்டது. சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பணிமனைக்கு தற்போதுள்ள வாகனங்களின் எண்ணிக்கை சம்பந்தமாக இணக்கமின்மை ஏற்பட்டதால் மேற்கு மாகாண சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பணிமனைக்கு தேவையான வாகனங்களின் எண்ணிக்கை மற்றும் தற்போது காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கை பற்றி அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. ./க. அ. பணிப்புரை விடுத்தார்.
5.	டெங்கு நோயாளிகளை பராமரிப்பதற்காக தற்போது அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளை ஆரம்பிப்பதற்காக 12	மத்திய அமைச்சிற்கு வழங்கப்பட்ட சுமார் ரூ. 400 மில்லியன் பணத்தொகையில் பாதியளவு டெங்கு நோயை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	மருத்துவமனைகளுக்கு 2014 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஒதுக்கப்பட்டிருந்த ரூ. 170,700,000/- இல் 38% மாத்திரம் செலவு செய்யப்பட்டுள்ளமையும் 46 மாகாண மருத்துவமனைகளுக்கு ஒதுக்கப்பட்டிருந்த ரூ.347,310,000/ இல் 66% மாத்திரம் செலவு செய்யப்பட்டுள்ளமையும் பற்றி குழு வினவியது. அங்கொட ஆதார வைத்தியசாலையில் 2 டெங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளும் நீர்கொழும்பு ஆதார வைத்தியசாலையில் ஒரு டெங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவும் தாபிக்கப்பட்டிருப்பினும் ஏனைய மருத்துவமனைகளில் மட்டுப்படுத்தப்பட்ட வகையில் இட வசதிகள் உள்ளதால் வாட்டுகளில் சம்பந்தப்பட்ட உபகரணங்கள் பொருத்தப்பட்டுள்ளதென டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு அறிக்கையிட்டுள்ளது.	கட்டுப்படுத்துவதற்கும் எஞ்சிய தொகையை மருத்துவமனைகளுக்கும் வழங்கியதாகவும் தெரிவித்த க. அ. மேற்கு மாகாணத்தில் மாத்திரம் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளை நிறுவுவதற்கு ஆரம்பத்தில் எதிர்பார்த்த போதும் தொடர்ந்து நோய் பரவ ஆரம்பித்ததால் ஏனைய மருத்துவமனைகளிலும் டெங்கு அதி தீவிர சிகிச்சைப் பிரிவுகளை தாபிப்பதற்கான தேவையை இனங்கண்டு மேற்படி மருத்துவமனைகளுக்கும் ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டதெனினும் அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்காக தான் விதப்புரை செய்த சில உபகரணங்களை வழங்குவதில் சிரமங்கள் அம்மருத்துவமனைகளில் உள்ளதாக மேலும் தெரிவித்தார். 10,000 பொதுமக்களுக்கு ஒரு பொதுசன உத்தியோகத்தர் வீதமாவது இருக்கும் வகையில் நியமிப்பதற்கான வாய்ப்புகள் பற்றி கவனம் செலுத்துமாறும் குழு இச்சந்தர்ப்பத்தில் வலியுறுத்தியது. டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதான நகரங்களில் சுகாதார மருத்துவ உத்தியோகத்தரை வலுவூட்டுவதின் தேவையையும் பொதுசன சுகதார உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக ஒழுங்குமுறையிலான முறைமையொன்றின் தேவையும் சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பணிமனைக்கு இணைக்கப்பட்டுள்ள மற்றும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இணைக்கப்பட்டுள்ள பொதுன சுகாதார உத்தியோகத்தர்களுக்கும் இடையில் ஒன்றிணைந்த இடமாற்ற முறையொன்றை ஏற்படுத்தும் தேவையும் இங்கு க. அ. இனால் குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
6.	மேல்மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்தைச் சேர்ந்த வைத்தியர்களினால் மேல்மாகாண டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் தொடர்பில் இலத்திரனியல் பரிசீலனை முறையை அறிமுகப்படுத்தும் முகமாக மேற்கொள்ளப்பட்ட மதிப்பாய்வுகளுக்கேற்ப கொழும்பில் அமைந்துள்ள 7 தனியார் வைத்தியசாலைகளிலிருந்து டெங்கு நோயர்களின் உடற் காப்பு ஊக்கி பற்றிய ஆய்வு அறிக்கைகளை இணையத்தளத்தின் ஊடாக மாகாண சுகாதார பணிப்பாளர் அலுவலகத்துக்கு அறிக்கையிட்டதன் பின்னர் அன்றைய தினமே டெங்கு நோயாளி உரித்தாகும் சுகாதார வைத்திய அலுவலகத்துக்கு அறிவிக்கப்பட்டதன் பின்னர் ஒரு நாள் போன்ற குறுகியதொரு காலப்பகுதியில் துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதன் மூலம் டெங்கு நுளம்புகளைக் கட்டுப்படுத்த முடியுமென வைத்தியர்கள் ஆராய்ச்சிகளை மேற்கொண்டு அறிக்கையிட்டுள்ளார்கள்.	இது மிகவும் சிறந்த ஒரு முறையெனவும், நாடு பூராகவும் இதனை செயற்படுத்த எதிர்பார்க்கின்றபோதிலும், அரசாங்க வைத்தியசாலைகளில் அனைத்து நோயாளர்களும் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்களென உறுதிப்படுத்தப்படுவதில்லை எனவும், பிணியாய்வு பரிசீலனைகள் மூலம் நோயாளர்கள் முகாமைத்துவம் செய்யப்படுவதனால், வைத்தியரால் நோயாளியை அடையாளம் காண முடியாத பட்சத்திலும் புதிய பிரதேசமொன்றிலிருந்து நோயாளர்கள் அறிக்கையிடப்படும் சந்தர்ப்பத்திலும் மாத்திரமே உறுதிப்படுத்தப்படுதல் தேவைப்படுகின்றதென க. அ. தெளிவுபடுத்தினார்.
7.	2007ஆம் ஆண்டு 11ஆம் இலக்க டெங்கு நுளம்புகள் பரவுவதைத் தடுக்கும் சட்டத்தில், டெங்கு பரிசீலனைக்காக குறிப்பிட்டதொரு வீட்டுக்குள் நுழைவதற்கான அனுமதியை அந்த வீட்டாரிடம் பெற்றுக்கொள்ளுதல், நுளம்பின் வாழ்க்கைச் சுற்றோட்டம் முழுமையடைவதற்கு இடமளித்து நுளம்பு பரவும் இடங்களை அகற்றுவதற்காக இரண்டு வாரங்களுக்கு மேற்படாத ஒரு காலப்பகுதியை வழங்குதல் ஆகிய குறைபாடுகள் காரணமாக குறித்த சட்டத்தை அடிப்படையாகக் கொண்டு	குறிப்பிட்ட திருத்தங்களுடனான சட்டமூலத்தின் இறுதி பிரதியானது சட்ட வரைஞரின் பொறுப்பில் உள்ளதாகவும், பின்னர் இது அவதானிப்புக்காக சட்ட மா அதிபரிடத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளதாகவும் க. அ. தெரிவித்ததுடன், இந்த சட்டமூலத்துக்கு முன்னுரிமை வழங்குமாறு கோரி சட்ட மா அதிபருக்கு கடிதமொன்றை முன்வைக்குமாறு பி..க.அலுவலருக்கு குழு பணிப்புரை விடுத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	குற்றவாளிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய முடியாதுள்ளது. வழக்குத் தாக்கல் செய்வதற்காக 1897 ஆம் ஆண்டின் இலங்கை தொற்றுநோய்த் தடுப்பு மற்றும் நோய்த்தடுப்பு சட்டம் பயன்படுத்தப்பட்டிருந்தது.	
	குடிநீர் போத்தல் செயலாற்றுகை பற்றிய கூட்டம் 2017 மார்ச் 08	
1.	2012 ஒக்றோபர் 12ஆந் திகதியில் குடிநீர் போத்தல்களின் உற்பத்திக்காக பதிவு செய்யப்பட்டிருந்த 69 நிறுவனங்களில் எழுமாறாக 8 நிறுவனங்களை தெரிவு செய்து மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது பின்வரும் குறைபாடுகள் காணப்பட்டுள்ளன. • கைத்தொழிற்சாலை ஊழியர்கள் கையுறை, சீருடை மற்றும் வாய்மறைப்பியை அணியாமை • சுகாதாரப் பாதுகாப்பு மற்றும் துப்பரவேற்பாடுகள் குறித்து ஊழியர்களுக்கு ஆலோசனை வழங்கப்படாமை. • நீர்தாங்கிகள் மாசடைந்து காணப்படுதல், நீர்த்தாங்கிகளில் தவளைகள் காணப்படுதல் மற்றும் நீர்த்தாங்கிகள் மூடப்படாதிருத்தல். • கைத்தொழிற்சாலையில் கழிவுப்பொருட்கள் அகற்றப்படாமை.	குறித்த அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்ட கைத்தொழிற்சாலைகள் தற்போது மூடப்பட்டுள்ளதாகவும், குறிப்பிட்ட குறைபாடுகளைக் கொண்ட கைத்தொழிற்சாலையானது அதுவரையில் உரிமப்பத்திரமின்றி முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
2.	1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டத்தின் பிரகாரம், தலைமை உணவு அதிகாரியின் உரிமப்பத்திரமின்றி எந்தவொரு நபரினாலும் கனிப்பொருட்களை உள்ளடக்கிய குடிநீர் போத்தல்களை இறக்குமதி செய்யவோ விநியோகிக்கவோ கூடாது என்பதுடன்,	‘பெரியர்’ எனப்படும் குடிநீர் போத்தல் வகையானது சுற்றுலாக் கைத்தொழிலுக்காகவும் ஸ்ரீ லங்கன் கேட்டரினால் விமான சேவைகளுக்காவும் மற்றும் தூதரகங்களுக்காகவும் கொண்டுவரப்படுவதாகவும் இதற்கான உரிமப் பத்திரங்களை வழங்குவதற்கான

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	2012.10.12 கணக்காய்வுக்கு அமைய, அரச மற்றும் தனியார் துறைக்குச் சொந்தமான 18 நிறுவனங்கள் உரிமப்பத்திரமின்றி நீரை இறக்குமதி செய்தல்.	நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் குழுவில் வெளிப்படுத்தப்பட்டது.
3.	இலங்கையில் உணவு நிருவாகம் தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளும் சுகாதார அமைச்சின் உணவு நிருவாகப் பிரிவில் அங்கிகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை 61ஆகக் காணப்படினும், தற்போது பணிப்பாளர் பதவி உள்ளிட்ட 40 வெற்றிடங்கள் காணப்படுகின்றமை.	பகிரங்க சேவைகள் ஆணைக்குழு இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும், குறிப்பிட்ட வெற்றிடங்களை நிரப்புவதற்காக தமது ஒத்துழைப்பினை தாராளமாக வழங்குவதாகவும் சுகாதார அமைச்சின் உத்தியோகத்தர்கள் தெரிவித்தார்கள்.
4.	பழங்களுக்கும் ஏனைய இறக்குமதி உணவுப் பொருட்களுக்கும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களைப் பாவிப்பது தொடர்பில் சுங்கத் திணைக்களத்தில் மாதிரிகளைப் பெற்றுக்கொண்டு பரிசோதிக்கப்படுகின்றன. இதன் நிமித்தம் ஆய்வுகூட வசதிகள் குறைந்தளவில் காணப்படுகின்றன.	உணவுகள் மீதான இரசாயனப்பயன்பாடு தொடர்பில் பரிசீலனை மேற்கொள்வதற்கான ஆய்வுகூட கருவிகளைக் கொள்வனவு செய்வதற்காக ரூ.40 மில்லியன் செலவு ஏற்படுவதுடன், தற்சமயம் அநுராதபுரம் ஆய்வுகூடத்தில் இத்தகைய ஒரு இயந்திரம் காணப்படுவதாகவும், கைத்தொழில் தொழிநுட்ப நிறுவனத்தின் ஊடாக (ITI) இந்த பரிசீலனைகளை மேற்கொள்ள முடியுமெனவும், ஒரு மாதிரிக்கான பரிசீலனையை ரூ.10,000/= இற்கு மேற்கொள்ள முடியுமெனவும், பிரதம க. அ. ./க. அ. மேலும் தெரிவித்தார். இதற்கான கிரயத்தினை வரவு - செலவு பிரேரணை வழியாக பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு ஆலோசனை வழங்கியது.
வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு **2017 மார்ச் 09**		
1.	2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளுக்கான மூலதன எற்பாடுகளில் முறையே 23% மற்றும் 51% பயன்படுத்தப்படாமை குறித்து குழு வினவியது.	வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்காக பத்தரமுல்லையில் ஒதுக்கப்பட்ட ஒரு காணியில் சுமார் ரூ.30 மில்லியன் பெறுமதியான அபிவிருத்தி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகையில்,

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		அரசாங்கத்தின் தீர்மானத்துக்கமைய அக்காணியானது நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கென சுவீகரிகக்கப்பட்டமையால், உத்தேச நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடுகள் எஞ்சியதாகவும், இதற்கு மாற்றீடாக, ஜாவத்தையில் சுமார் 2 ஏக்கர் காணி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், அதனை ஆராய்ந்து பார்த்து அமைச்சரவைக்கு அறிக்கையிடுவதற்காக அமைச்சின் செயலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
2.	2015ஆம் ஆண்டு இறுதியில் அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கணக்கில் ரூ.3,905,924/= நிலுவை மீதி மற்றும் ரூ.1,515,668/= அடையாளம் காணப்படாத மீதி காணப்படுவது தொடர்பில் குழு கவனம் செலுத்தியது.	இந்நிலைமை நீண்டகாலமாக நிலவுவதாகவும், சில கடன்பட்டோரின் தரவுகளைப் போன்றே பிணையாளர் களை கண்டு பிடிப்பதிலும் சிரமம் காணப்படுவதனால், நிலுவை கடன் மீதியை அறவிடுவது பிரச்சினையாக உள்ளதாகவும், ரூ.6.6 மில்லியன் நிலுவை மீதியை 2016ஆம் ஆண்டு இறுதியில் ரூ.3.9 மில்லியனாக குறைப்பதற்கு முடிந்ததாகவும், காணப்படுகின்ற மீதியானது மேலும் அதிகரிக்காத வண்ணம் நடவடிக்கை மேற்கொள்வ தாகவும் பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார். இது பெரும்பாலான அரசாங்க நிறுவனங்களில் காணப்படும் ஒரு பொதுப்பிரச்சினை ஆகையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் நிதி அமைச்சின் செயலாளரது தலையீட்டில் தகுந்த செயன்முறை யொன்றை உருவாக்குவது காலத்தின் தேவையாக உள்ளதாக குழு கருதியது.
3.	வெளிநாட்டு தூதுக்குழுக்களுக்கான 2016.12.31ஆந் திகதிக்கான பிரயாணச்	தூதுவர் சேவையில் வீட்டு வாடகை முற்பணக் கணக்கில் காணப்படும் சுமார்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	செலவு ரூ.326,472/=, வாடகை முற்பணம் ரூ.200,921,603/= மற்றும் ஏனைய முற்பணம் ரூ.109,559,890/= ஆகியவை தீர்க்கப்படாமை தொடர்பில் குழு வினவியது.	ரூ. 220 மில்லியன் மீதியை உத்தியோகத்தர்கள் தூதுக்குழுச் சேவையிலிருந்து விலகும்போது தீர்ப்பதாகவும், 2010ஆம் ஆண்டில் அப்போது காணப்பட்ட மீதியை திறைசேரி தலையிட்டு ரூ.92 மில்லியனாகக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும், இது தொடர்பில் விசாரிப்பதற்காக குழுவொன்றை நியமித்து வெளிநாட்டு நிருவாகப் பிரிவின் ஊடாக சுற்றறிக்கையொன்றை வெளியிடுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். வீடுகளுக்கு ஏற்படும் சேதங்கள் தொடர்பில் பொறுப்புக்கூறுவதிலிருந்து தூதுவர் அல்லது உயர்ஸ்தானிகர் விடுபட முடியாதெனவும், அவர்கள் நேரடி மேற்பார்வை மேற்கொண்டு செயற்பட வேண்டுமெனவும், இது தொடர்பில் பிறப்பிக்கப்படவுள்ள சுற்றறிக்கையின் பிரதியை குழுவுக்கு வழங்குமாறும் பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.
4.	இத்தாலியில் உரோம தூதரகத்தைச் சேர்ந்த ஐந்து உத்தியோகத்தர்களின் சேவை முடிவுறுத்தல் கொடுப்பனவானது இத்தாலி இன உத்தியோகத்தருக்கு மாத்திரம் வழங்கப்பட்டிருத்தல்.	இத்தாலி சட்டத்தின் பிரகாரம் குறைந்தமட்ட சம்பள வரையறைகள் தீர்மானிக்கப்பட்டுள்ளமையால், இதற்குக் குறைவான சம்பளம் பெறும் ஊழியர்கள் நஷ்ட ஈடு கோரி நீதிமன்றங்களை நாடும் நிலைமை அதிகரித்துள்ளதாகவும், ஆகவே, குறிப்பிட்ட 7 உத்தியோகத்தர்களில் இத்தாலி இன உத்தியோகத்தருக்கு ரூ.2.7மில்லியன் நஷ்டஈடு செலுத்தப்பட்டுள்ளபோதிலும், ஏனைய 6 உத்தியோகத்தர்களும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	2009ஆம் ஆண்டில் ரூ.16,141,919/= பணத் தொகையை தவறாகக் கையாண்ட உத்தியோகத்தருக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்.	இலங்கையர்கள் என்பதால், அவர்களுக்கு ஒப்பந்தச் சட்டத்தின் பிரகாரம் சம்பளம் தீர்மானிக்கப்படுவதன் காரணமாக பிறிதொரு செயற்பாட்டை மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். தற்போது நிதி மோசடியில் ஈடுபட்ட உத்தியோகத்தரது சேவை இடைநிறுத்தப்பட்டு, அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக க. அ. தெரிவித்தார்.
5.	2015.12.31ஆந் திகதியில் பொது வைப்புக் கணக்கில் 2 வருடங்களை விஞ்சிய ரூ.144,842,497/= மீதி காணப்படுதல்.	2 வருடங்களை விஞ்சிய மீதிகள் அனைத்தையும் தீர்ப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், சென்னை மற்றும் லண்டன் தூதரகங்களை நிர்மாணிப்பதற்காக மத்திய பொறியியல் உசாவுகை பணியகத்துக்கு செலுத்த வேண்டிய ரூ.27 மில்லியன் பணத்தொகை தக்கவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
6.	2012ஆம் ஆண்டு முதல் முன்னெடுக்கப்பட்டு வரும் இணங்காத பற்று மீதியானது 2016 ஏப்பிறலில் ரூ.49,602,783/= இணங்காத மீதியாகக் காணப்படுதல்.	அமைச்சின் கட்டுநிதிக் கணக்கு மீதியானது நீண்ட காலமாக தீர்க்கப்படாமை இதற்கு ஏதுவாக அமைந்துள்ளமையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் திறைசேரியுடன் பேச்சுவார்த்தை நடத்தி தற்போது காணப்படும் மீதிகளை பதிவழிப்புச் செய்து கணக்கை தீர்ப்பது மிகவும் பொருத்தமான செயன்முறையென்பது திறைசேரியின் பிரதிநிதியின் கருத்தாக அமைந்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
7.	2007ஆம் ஆண்டு 1.2மில்லியன் அமெரிக்க டொலர் செலவில் 1.681 ஏக்கர் பரப்பளவிலான காணி மலேசியாவின் உயர் ஸ்தானிகர் அலுவலகத்தை நிர்மாணிப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், இதுவரையில் எந்தவிதமான நிர்மாணப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	மலேசியாவின் முன்னாள் ஜனாதிபதி மஹதீர் மொஹமட்டின் கருத்துக்கமைய அதன் தலைநகரத்தை புத்ரஜயாவுக்கு கொண்டு போவதற்கு தீர்மானிக்கையில், இலங்கை தூதரகத்தையும் அங்கு தாபிக்கும் நோக்கில் இக்காணி கொள்ளவனவு செய்யப்பட்டபோதிலும் பின்னர் அரசாங்க தீர்மானங்களில் ஏற்பட்ட மாற்றம் காரணமாக இதுவரையில் எந்தவிதமான நிர்மாணப்பணிகளும் மேற்கொள்ளப்படவில்லை எனவும், எதிர்கால தேவையினைப் பொருத்து அதனை நிர்மாணிப்பது அல்லது பணத்தை மீளப்பெறுவது குறித்து தீர்மானிப்பதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
ஆயுர்வேத திணைக்களம் **2017 மார்ச் 09**		
1.	களனி பல்கலைக்கழகத்துடன் இணைந்த கம்பஹ விக்ரமாரச்சி ஆயுர்வேத வைத்தியசாலையை ஆயுர்வேத திணைக்களத்துக்கு சுவீகரிப்பதற்காக 2007ஆம் ஆண்டில் பாராளுமன்ற அங்கிகாரம் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், இதுவரையில் குறிப்பிட்ட சவீகரிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படாமை. இருக்கவில்லை.	குறிப்பிட்ட சுவீகரிப்புக்கான அடிப்படை விடயங்கள் தயார் செய்யப்பட் டுள்ளதாகவும், மருத்துவக் கல்லூரிக்காக 28ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட் டுள்ளதாகவும், ஆயுர்வேத வைத்திய சாலைக்காக 4 ஏக்கர் நிலப்பரப்பு ஒதுக்கப்பட்டுள்ளதாகவும், ஆனால், இந்நிலப்பரப்புகள் பொருத்தமற்றவை யாகக் காணப்படுவதன் காரணமாக பிறிதொரு நிலத்தை தேடுவதாகவும் க. அ. தெரிவித்தார். குறித்த சுவீகரிப்புச் செயன்முறையின் தற்போதைய முன்னேற்றம் பற்றிய அறிக்கையொன்றை 2 வாரங்களுக்குள் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு குழுவானது பிரதம கணக்கீட்டு அலவலருக்கு கட்டளையிட்டது.
2	நிலையான சொத்துக்கள் பற்றிய	தற்போது காணப்படுகின்ற

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	பதிவேடொன்றினைத் தயாரித்து கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு சமர்ப்பிக்க வேண்டுமென கட்டளை யிடப்பட்டிருந்த போதிலும் முறையாகவும் இற்றைப்படுத்தியும் நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை.	ஆவணமானது நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடொன்றல்ல என கணக்காய்வாளர் தலைமையதிபதி தெரிவித்ததோடு அதனை உரிய முறையில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் நிறுவனம் கொண்டுள்ள சகல சொத்துக்களையும் பொதுத் திறைசேறியின் ஆலோசனையின் அடிப்படையில் சிகாஸ் (CIGAS) நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கு வதாகவும் இவற்றுக்கு மேலதிகமாக உரிய மாதிரியின் பிரகாரம் தயாரிக்கப்பட்ட நிலையான சொத்துக்கள் பற்றிய பதிவேடொன்றைப் பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதம க. அ. . தெரிவித்தார்.
3	நாவின்ன பண்டாரநாயக்க ஆராய்ச்சி நிலையத்தின் வாயிற்கடவை மற்றும் அலுவலகம் என்பவற்றை நிர்மாணிக்கும் பணிகளுக்காக ICTAD நிறுவனத்தில் பதிவுசெய்துள்ள ஒரு ஒப்பந்தகாரரை தெரிவுசெய்யாதமைக்கான காரணத்தை விசாரித்த குழுவானது குறித்த பணி சம்பந்தமாக பொறுப்புக்கூற வேண்டிய தரப்பினரை இனங்கண்டு அறிக்கை யொன்றைச் சமர்ப்பிக்குமாறு விதப்புரை செய்திருந்த போதிலும் அவ்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.	குறித்த பணியின் நிமித்தம் ஒப்பந்தகாரரைத் தெரிவு செய்திருப்பது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் விதப்புரையின் அடிப்படையில் கொள்வனவுக் குழுவின் அங்கீகாரத்தின் பேரிலாகுமெனவும் குறிப்பிட்ட தெரிவு சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவிடம் விளக்கம் கோரப்பட்டுள்ள தெனவும் க. அ. தெரிவித்தார். இது தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு குழுவானது பிரதம க. அ. .க்கு கட்டளையிட்டது.
4	ஆயுர்வேதத் திணைக்களத்திலிருந்து வென்னப்புவ பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்றுச் சென்ற மருத்துவரொருவருக்கு 15 மாதங்களுக்கு 548,376/- ரூபா சம்பளமாக செலுத்தப்பட்டிருந்தது. அதில் 200,000/- ரூபா மட்டும் மீள அறவிட்டுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும்	இவ்வாறு சம்பளம் பெற்ற மருத்துவருக்கு எதிராக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குறிப்பிட்ட உத்தியோகத்தரை இடமாற்றம் செய்து குற்றப்பத்திரிக்கை ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் குறிப்பிட்ட சம்பளம் செலுத்திய உத்தியோகத்தருக்கு எதிராக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	எஞ்சிய 348,376/- ரூபா மற்றும் அரசாங்கக் கட்டணம் 137,094/- ரூபா உள்ளடங்கிய மொத்தத் தொகை 485,470/- ரூபா அறவிட்டுக்கொள்ள தவறியுள்ளமை மற்றும் பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படாதமை.	விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் குழுவின் கேள்விக்குப் பதிலளித்து க. அ. தெரிவித்தார்.
5	5 வருடம் முதல் 10 வருடங்கள் வரையான காலம் நிலுவையாக இருந்து வருகின்ற மொத்தம் 1,627,020.00 ரூபா அறவிடப்படாமை	இந்தக் கடன் நிலுவை 4 வகுதிகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது எனவும், அந்த 4 வகுதிகளின் கீழும் அறவிட வேண்டிய நிலுவை தனித்தனியாகக் குறிப்பிடப்பட்டுள்ளது எனவும், இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள அலுவலர்களிடமிருந்து அறவிட வேண்டிய 4.5 இலட்சம் ரூபா அறவிடப்பட வேண்டியுள்ளது எனவும், அந்த நிலுவைகளை அறவிடும் பொருட்டு அந்த அலுவலர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள நிறுவனங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது எனவும் பி.க.அ. / க.அ. குறிப்பிட்டார். அதே போன்று மரணித்த அலுவலர்களிடமிருந்து 2 இலட்சம் ரூபா அறவிடப்பட வேண்டியுள்ளது எனவும், ஓய்வுபெற்றுச் சென்ற ஊழியர்களுக்கு கிடைக்கும் அவர்களின் மரணப் பணிக்கொடைகளிலிருந்து நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் க.அ. குறிப்பிட்டார். கூடுமான விரைவில் இந்தக் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பி.க.அ. / க.அ. இற்கு குழு கட்டளையிட்டது.
6	தொற்றாத நோய்களுக்கான சிகிச்சை முகாமைத்துவ முறைமை பற்றிய	இக்கருத்திட்டத்திற்காக நிபுணத்துவ அறிவினைக்கொண்ட உத்தியோகத்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	ஆராய்ச்சிகளை மேம்படுத்துவதற்கான கருத்திட்டத்தின் பொருட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளபோதிலும் பணியாளர்கள் சேர்த்துக்கொள்ளப்படவில்லையென்பதால் கருத்திட்டம் தோல்வியடைதல்.	தர்களை ஆட்சேர்ப்பு செய்வது அத்தியாவசியமெனவும் அந்த ஆட் சேர்ப்புக்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கை முறைகள் தயாரிக்கப் பட்டுள்ளதாகவும் க. அ. தெரிவித்தார். தொற்றாத நோய்கள் சம்பந்தமாக மருந்து வகைகள் உற்பத்தி செய்யப்படுதல், மருந்து வகைகளின் தேவைப்பாடு, இறக்குமதி செய்யப்படு கின்ற அளவு பற்றிய விபரங்கள் உள்ளடங்கிய அறிக்கையொன்றை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு பிரதம க. அ. ./க. அ. க்கு கட்டளையிடப்பட்டது.
7	அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள மூலிகைப் பூங்காக்கள்	இது தொடர்பாக செயலாற்றுகை கணக்காய்வொன்றை மேற்கொள்ளுமாறு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு விதப்புரை செய்யப்பட்டது.
	கொழும்பு மாநகர சபை **2017 மார்ச் 10**	
1	மாநகர சபைக்கு மக்களின் முறைப்பாடுகள் கிடைக்கப்படுகின்ற விதமும் அளவும்	புதிய வரவேற்புக் கரும பீடமொன்று தாபிக்கப்படுவதன் மூலமும் மக்களது முறைப்பாடுகளை இடுவதற்காக பெட்டியொன்றை வைப்பதன் மூலமும் முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்வதற்கான முறையானது இலகுபடுத்தப்பட்டுள்ளதாகவும் க. அ. தெரிவித்தார். மக்களுக்குச் சேவைகளைப் பெற்றுக்கொடுப்பதற்காகவும் வருமானம் திரட்டிக் கொள்வதற்காகவும் தகவல் பரிமாற்றத்திற்காகவும் கொழும்பு மாநகர சபைக்கு முறையான கணனி நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்கும் பொருட்டு நடவடிக்கை எடுக்குமாறு குழுவானது பிரதம க. அ. ./க. அ. க்கு ஆலோசனை வழங்கியது. கணனி நிகழ்ச்சித்திட்டமொன்றை உருவாக்குவதற்காக ஏற்கனவே நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பிரதம க. அ. . தெரிவித்தார். குறிப்பிட்ட கணனி நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ள வசதிகள், தாபிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் மற்றும் எடுக்கப்படும் காலம் தொடர்பாக முழுமையான அறிக்கையொன்றைக் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. ./க. அ. க்கு கட்டளையிடப்பட்டது.
2	கொழும்பு மாநகர சபைக்கு 06 மிகை அறவீட்டுச் சான்றிதழ்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதுடன் அவற்றுள் 02 அமைச்சரினால் மேன்முறையீடுகள் கருத்திற்கொள்ளப்பட்டு விடுவிக்கப்பட்டுள்ளதெனவும், 04 மிகை அறவீட்டுச் சான்றிதழ்களுக்காக 2015 டிசெம்பர் 31 ஆம் திகதிக்கு 266,387.76/- ரூபா அறவிடப்பட வேண்டியுள்ளதெனவும் வெளிவந்தது.	விடுவிக்கப்பட்டுள்ள 02 மிகை அறவீட்டுச் சான்றிதழ்களுக்கு மேலதிகமாக மேலும் 02 சான்றிதழ்களின் புலனாய்வுகள் முடிவடையவில்லையென பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். சகல மிகை அறவீடுகளும் பற்றிய முழுமையான அறிக்கையொன்றை கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு வழங்குமாறும் அதன் பிரதியொன்றை குழுவிற்கு அனுப்பிவைக்குமாறும் பிரதம க. அ. ./க. அ. க்கு கட்டளையிடப்பட்டது.
3	நிலுவை வருமானங்களை ஒன்றுதிரட்டுதல் மற்றும் நிலுவை வரிப்பணத் தொகை அறவிடப்படுதல் என்பவற்றுக்கான முறையியல் பனவீனமாக இருப்பது மற்றும் மாநகர சபையின் இத்தகைய சீரற்ற அலுவல்களின் காரணமாக கிடைக்கப்பட வேண்டிய வரிப்பண வருமானம் இழக்கப்படுதல்.	பல வருடங்களாக நிலவி வருகின்ற நிலுவை வருமானங்கள் தொடர்பாக கவனம் செலுத்திய குழுவானது அவற்றை உரிய முறையில் அறவிட்டுக்கொள்வதற்கும் எஞ்சிய பகுதியை பொதுத் திறைசேரியின் ஆலோசனைகளுக்கு அமைவாக பதிவழிப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறும் எதிர்வரும் வருடங்களுக்காக செயற்பாட்டுத் திட்டங்களைத் தயாரிக்கும்போது அவற்றை முறையான மற்றும் சீரான தரநியமங்களுக்கேற்ப நடைமுறைச் சாத்தியமான முறையில் தயாரிக்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டது.
4	கட்டிட மற்றும் காணித் துண்டுகளுக்கான வரைபட அங்கீகாரம்	வரைபட அங்கீகாரச் செயன்முறையில் குறைபாடுகள் ஏற்பட்டுள்ளதெனவும், அவற்றைத் தவிர்த்துக்கொண்டு முறைசார்ந்த வகையில் நடவடிக்கைகளை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதெனவும் க. அ. தெரிவித்தார். அனுமதியற்ற ஆதனங்கள் மற்றும் நிர்மாணங்கள் சம்பந்தமாக நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் தயாரிக்கப்பட்டுள்ள பதிவேடொன்று மீது கவனம் செலுத்திய குழுவானது அந்த ஆவணத்தை நகர அபிவிருத்தி அதிகாரசபையிடமிருந்து பெற்றுக்கொண்டு அதில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் மற்றும் கொழும்பு மாநகர சபையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள தகவல்கள் என்பவற்றைப் புலனாய்வு செய்வதற்காக குழுவொன்றை நியமித்து குறித்த அனுமதியற்ற ஆதனங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் சம்பந்தமாக குறிபிட்ட குழு அறிக்கையினை ஒரு மாத காலப்பகுதிக்குள் குழுவிற்குச் சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. ./க. அ. க்கு கட்டளையிடப்பட்டது.
5	விளம்பரப் பலகைகளின் மூலம் பெற்றுக்கொள்ளப்படும் வருமானம் தொடர்பாக திருப்பதியடைய முடியாதமை மற்றும் கொழும்பு நகரம் பூராகவும் காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள விளம்பரப் பலகைகள் மற்றும் கென்றி என்பவை மூலம் பெற்றுக்கொள்ளக்கூடிய வருமானமானது தற்போது பெற்றுகொள்ளப்படும் வருமானத்தைவிட பல மில்லியன் கணக்கில் அதிகரிக்க வேண்டுமென்பது.	42 கென்றிக்களைப் பெற்றுக்கொடுப்பதற்காக தனியார் நிறுவனமொன்றுடன் பரிமாற்று ஒப்பந்தத்திற்கு வந்திருப்பதாக க. அ. தெரிவித்தார். குறிப்பிட்ட ஒப்பந்தத்தில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாக கவனம் செலுத்திய குழுவானது உரிய ஒப்பந்தத்திற்கு அடிப்படையாக அமைந்த தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினதும் கேள்விப்பத்திரக் குழுவினதும் விதப்புரைகளுடனான ஒப்பந்தம் பற்றிய அறிக்கையொன்றை மாகாண சபையின் விதப்புரைகளுடன் குழுவிற்குப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதம க. அ. ./க. அ. க்கு கட்டளையிட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
மத்திய மாகாண சபை 2017 மார்ச் 10		
1	பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்திற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள கணக்குகள் தொடர்பாக திருப்தியடைய முடியாதமை மற்றும் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி நிறுவனத்தைத் தவிர கணக்குகள் முன்வைக்கப்பட்டுள்ள 02 நிறுவனங்க ளுக்காக 2011 தொடக்கம் 2015 வரை கருத்தானது நிராகரிக்கப்பட்டுள்ளது.	இக்கருத்திட்டமானது ஜேர்மன் உதவியோடு மேற்கொள்ளப்பட்டு வந்ததோடு 2008 ஆம் ஆண்டு நியதிச் சட்டமாக கூட்டிணைக்கப்பட்டுள்ளது எனவும், அதன் ஆரம்ப நிலுவை சம்பந்தமாக பொறுப்பு ஏற்றுக்கொள்ளப்படுகின்றதெனவும் 2008 ஆம் ஆண்டுக்காக கணக்குத் தகவல்களைப் பெற்றுத்தருவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதம க. அ. /க. அ. தெரிவித்தார்.
2	மாகாண சபைக்கு ஆற்றுப்படுத்தப்பட்டாலும் பதில் கிடைக்கப்பெறாத கணக்காய்வு விசாரணைகள் காணப்படுகின்றமை.	2016 ஆம் ஆண்டு 205 கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்கப்படவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளதுடன் 2017.03.10 ஆம் திகதிக்கு அவ்வெண்ணிக்கையானது 60 வரை குறைவடைந்துள்ளதெனவும், கணக்காய்வு முகாமைத்துவ குழுக் கூட்ட அறிக்கைகளின் மூலமும் அதிகளவான கணக்காய்வு விசாரணைகளுக்கு பதில் வழங்கப்பட்டுள்ளதெனவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
3	2016 ஆம் ஆண்டு உள்ளகக் கணக்காய்வு தொடர்பாக வெளியிடப்பட்ட 593 கணக்காய்வு விசாரணைகளில் 143 க்கு பதில் கிடைக்கப்படவில்லையென்பது.	தலைமைச் செயலகத்தின் சகல கணக்காய்வு விசாரணைகளுக்கும் பதிலளிக்கப்பட்டுள்ளதெனவும் எஞ்சிய அனைத்துக்கும் எதிர்காலத்தில் பதிலளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
4	2000.06.12 ஆம் திகதிய 1A1/2000/1 திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் ஆகக் குறைந்தது காலாண்டுக்கு ஒன்று வீதம் வருடமொன்றுக்கு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டங்கள் 4 நடத்தப்பட வேண்டுமெனவும், 2016 ஆம்	இது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு பிரதம க. அ. ./க. அ. க்கு ஆலோசனை வழங்கப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	ஆண்டு ஆளுநர் செயலகம், வீடமைப்புத், திணைக்களம், விலங்கின உற்பத்தித் திணைக்களம், விவசாயத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், போக்குவரத்துத் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டிருக்காதமை.	
5	2009 தொடக்கம் 2011 வரை 62 மின் கருத்திட்டங்களுக்காக 15 மில்லியன் ரூபா இலங்கை மின்சார சபைக்குச் செலுத்தப்பட்டுள்ள போதிலும் இற்றைவரை குறிப்பிட்ட கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்படவில்லை.	குறிப்பிட்ட கருத்திட்டங்களின் எண்ணிக்கையானது 62 எனவும் அவற்றுள் 34 பூர்த்தி செய்யப்படவில்லையெனவும் மின்சார நீடிப்புக்களைப் பெற்றுக்கொடுப்பதில் சில தாமதங்கள் காணப்படுவதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். பூர்த்தி செய்யப்படாத கருத்திட்டங்கள் பற்றிய அறிக்கையொன்றை 2017 மார்ச் 25 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு குழு கட்டளையிட்டது.
6	மாகாண சபையின் நிருவாகக் கட்டிடத்தில் KB 400 மற்றும் KB 300 ஆகிய வகைகளிலான இரண்டு மின்பிறப்பாக்கிகள் பொருத்தப்பட்டுள்ளதோடு அதில் 14,806,951/- ரூபா செலவிடப்பட்ட KB 300 இயந்திரமானது பயன்படுத்தப்படாத நிலைமை காணப்படுவதாக குழு அவதானித்தது. 2016.02.01 ஆம் திகதி அதன் செயற்பாட்டினை பரிசோதிக்காமல் பொறுப்பேற்கப்பட்டிருந்ததோடு அதனை மாகாண சபை நிருவாகக் கட்டிடத் தொகுதியில் பொருத்தாமல் 2017.02.09 ஆம் திகதி தெல்தனிய வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டிருத்தல்.	இக்கட்டிடம் நிர்மாணிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் நாட்டில் மின்சார நெருக்கடி உருவாகியிருந்ததெனவும் குறித்த இரண்டு இயந்திரங்களின் மூலம் மாகாண சபைக்கான கூட்ட மண்டபத்திற்கும் கேட்போர் கூடத்திற்கும் மின்சாரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்ததெனவும் தற்போது மின்சாரம் வழங்கப்படுதல் திருப்திகரமான மட்டத்தில் காணப்படுவதனால் மற்றும் மேலதிக சூரிய மின்கலம் பொருத்தப்பட்டுள்ளதனால் KB 300 வகையிலான மின் பிறப்பாக்க இயந்திரத்தினை தெல்தெனிய வைத்தியசாலைக்கு அன்பளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் பிரதம க. அ.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		./க. அ. தெரிவித்தார்.
7	2005 ஆம் ஆண்டு சுழற்சி முறைக் கடன் நிதியமொன்றைத் தாபிப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட இக்கடன் நிதியத்தின் பணம் குறைபயன்பாட்டுடன் இருந்தமையினால் 3,150,000/- ரூபாவிலான வட்டி வருமானம் இழக்கப்படுதல்.	இந்த நிதியமானது வீடமைப்பு திணைக்களத்தினால் 11.25 மில்லியன் ரூபா மற்றும் மலைநாட்டு அபிவிருத்தி வங்கியினால் 3.7 மில்லியன் ரூபா வீதம் மொத்தம் 15 மில்லியன் ரூபா பெறுமதியுடன்கூடியது எனவும் இந்நிதியம் தொடர்பான கடன் ஒப்பந்தமானது குறைபாடுகளைக் கொண்டுள்ளமையினால் செயலிழந்து இருந்ததாகவும் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு கடன் வழங்கும் நோக்கத்துடன் தாபிக்கப்பட்ட இந்நிதியத்திற்கான கடன் ஒப்பந்தத்தைத் திருத்தி குறைபாடுகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. /க. அ. தெரிவித்தார். இந்நிதியத்தினை உயிர்ப்பூட்ட முடியாதெனில் வேலைத்திட்டத்தை இடைநிறுத்தி பணத்தை மீண்டும் மீளளிப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் குழு கட்டளையிட்டது.
8	மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் மாகாண பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை என்பவற்றுக்கு 2007, 2008 மற்றும் 2009 ஆகிய ஆண்டுகளில் 35 கணக்காய்வு பந்திகள் தொடர்பாக மாகாண கணக்குக் குழுவினால் வழங்கப்பட்ட கட்டளைகள் நடைமுறைபடுத்தப்படவில்லையெனவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் காணப்படுகின்ற அம்பதென்ன இயந்திரப் பொறியியல் அலகின் 15,200,000/- ரூபாவிலான எரிபொருள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பான கணக்காய்வு பந்திகளுக்குரிய புலனாய்வு நடவடிக்கைகள் 2008 ஆம் ஆண்டு	வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் கிடைக்கப்பட்டுள்ள 12 கணக்காய்வு விசாரணைகள் தொடர்பாக அறிக்கை யிடப்பட்டுள்ளதெனவும் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபையினால் எஞ்சிய 23 கணக்காய்வு விசாரணைகளில் 8 க்கு தற்போது பதிலளிக்கப்பட்டுள்ள தெனவும் பிரதம க. அ. /க. அ. தெரிவித்தார். வழங்கப்பட்டுள்ள பதில் களுக்கு மத்தியில் கணக்காய்வு குழுக்களினால் ஏற்றுக்கொள்ளப்பட முடியாதவாறு தெரிவிக்கப்பட்டுள்ள பதில்கள் மீண்டும் மீளாய்வு செய்யப்பட்டு வருவதாகவும் எரிபொருள் தவறாகப் பயன்படுத்தப்படுதல் தொடர்பாக விசாரணை செய்வதற்கு குழுவொன்றை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	தொடக்கம் மந்தகதியில் இடம்பெறுதல்.	நியமித்து கணக்காய்வு உத்தியோகத்தர் ஒருவர் அதற்கு நியமிக்கப்பட்டுள்ளார் எனவும் பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார்.
9	தலைமைச் செயலகத்தில் விடுதி வழங்கல் அலகின் நிர்மாணப் பணிகளுக்குப் பொறுப்பான ஒப்பந்தகாரருக்கு 8.5மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ளபோதிலும் நிர்மாணப் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை.	முதலாவது ஒப்பந்தகாரரின் செயலாற்றுகை போதுமானதாக அமைய வில்லையென்பதால் முற்பணமாக செலுத்தப்பட்ட தொகை மற்றும் பிணைத் தொகையாகிய 3,745,019/- ரூபா பிணையாளரான செலிங்கோ காப்புறுதி நிறுவனத்திடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற் கொள்ளப்பட்டுள்ளதெனவும், பிணை செலுத்தலானது மேற்கொள்ளப்பட வில்லை என்பதால் காப்புறுதிக் கம்பனிக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதெனவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
10	பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகளில் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்கள்.	தமிழ் மொழி மூல ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றதெனவும் அதற்கான மாற்று நடவடிக்கையாக ஒப்பந்த அடிப்படையில் ஓய்வுபெற்ற ஆசிரியர்களை இணைத்துக்கொள்வதற்கு சுற்றறிக்கையின் மூலம் அனுமதியளிக்கப்பட்டுள்ளதெனவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
11	மத்திய மாகாண கல்வித் திணைக்களத்தின் மின்சார முறைமையை நவீனமயப்படுத்துவதற்காக 2015 ஆம் ஆண்டு 3 தனியார் ஒப்பந்தகாரர்களுக்கு 3 கட்டங்களின் கீழ் 10.7 மில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ள போதிலும் அதன் பராமரிப்புக் காலம் முடிவடைவதற்கு முன்னர் மேற்படி முறைமையில் ஏற்பட்ட குறைபாடு காரணமாக திணைக்களத்திற்குச் சொந்தமான 38 மின் உபகரண அலகுகளுக்கு சேதம்	குறிப்பிட்ட குறைபாடானது மின்சார சபையினால் பிரதான கம்பி உரிய முறையில் பொருத்தப்படாததன் காரண மாக ஏற்பட்டுள்ளதெனவும் அதன் மூலம் உபகரணங்களுக்கும் மின் கம்பிகளுக்கும் சுமார் 435,000/- ரூபா நட்டம் ஏற் பட்டுள்ளதெனவும் உரிய தொகையினை மின்சார சபையிடமிருந்து அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படு மெனவும் பிரதம க. அ. ./ க. அ.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	ஏற்பட்டிருப்பது மற்றும் பொறுப்புக் காலப்பகுதியில் உரிய நட்டத்தினை பொறுப்புவாய்ந்தவர்களிடமிருந்து அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காதமை.	தெரிவித்தார்.
	களுத்துறை மாவட்டச் செயலகம் **2017 மார்ச் 21**	
1	2012 ஆம் ஆண்டு தொடக்கம் 2016 ஆண்டு வரை மதிப்பீடு செய்யப்பட்ட மற்றும் உண்மையான செலவினங்களுக்கிடையிலான வித்தியாசத்தின் பிரகாரம் தேறிய ஒதுக்கீடுகள் எஞ்சியிருத்தல்.	களுத்துறை பிரதேச செயலகத்தினதும் மாவட்டச் செயலகத்தினதும் நிர்மாணப் பணிகளுக்காக பணம் ஒதுக்கப்பட்டுள்ள போதிலும் அத்தொகையினைச் செலவிடுவதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சரவைப் பத்திரம் தாமதம் அடைந்தமையினால் கருத்திட்டம் தாமதித்து ஆரம்பிக்கப்படுதலானது 2016 ஆம் ஆண்டு 22 % மாகிய தேறிய ஒதுக்கீடுகள் எஞ்சுவதற்குக் காரணமென க. அ. தெரிவித்தார்.
2	2015.12.31 ஆம் திகதியில் அரச காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள்/ கொடைப் பத்திரங்கள் விநியோகிக்கப்படுதலின் முன்னேற்றம்.	1995.06.01 ஆம் திகதிக்கு முன்பிருந்து அரச காணிகளில் அனுமதியின்றி குடியிருப்பவர்களுக்கு அக்காணிகளுக்கான அனுமதிப்பத்திரங்கள்/ கொடைப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடிந்தாலும் அத்தேதிக்குப் பின்னர் குடியேறுபவர்களுக்கு அவ்வுரிமை கிடைக்க மாட்டாதென க. அ. தெளிவுபடுத்தினார். அதேவேளை, காணிகளுக்கான ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகளைத் துரிதப்படுத்துவதற்காக திட்டமொன்று தயாரிக்கப்பட்டுள்ளதெனவும் க. அ. தெரிவித்தார். ஒழுங்குபடுத்தவுள்ள அனுமதியற்ற காணித் துண்டுகளின் எண்ணிக்கை, அவற்றுள் ஒழுங்குபடுத்தல் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
		காணித்துண்டுகளின் எண்ணிக்கை, ஒழுங்குபடுத்தும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ள காணித் துண்டுகளின் எண்ணிக்கை தொடர்பாக ஒட்டுமொத்த நாட்டினதும் களுத்துறை மாவட்டச் செயலகத்தினதுமாக தனித்தனி 2 அறிக்கைகளை 2017 ஏப்ரல் 07 ஆந் திகதிக்கு முன்னர் குழுவிற்குப் பெற்றுத்தருமாறு குழு பிரதம க. அ. ./க. அ. க்கு கட்டளையிட்டது.
3	23,000,000/-ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டு 2012 ஆம் ஆண்டு முடிவடையும் வரையும் பயன்படுத்தப்படாத கிராம சேவகர்/மருத்துவ உத்தியோகத்தர் அலுவலகமானது சுகாதார அமைச்சுக்கு ஒப்படைப்பதற்கு முன்னைய குழுவினால் வழங்கப்பட்ட கட்டளை நடைமுறைப்படுத்தப்பட்டிருக்காமை	குறித்த கட்டிடமானது தாய்மார்களுக்கான கிளினிக் நிலையமொன்றைப் பேணிச் செல்வதற்காக நிர்மாணிக்கப்பட்டிருந்தது எனவும், அது பிறிதொரு இடத்தில் பேணப்பட்டு வருவதனால் குறித்த கட்டிடமானது குடும்ப நல சுகாதார சேவை நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்படுகின்றதெனவும் அதேவேளை, அதன் செலவினம் 23,000,000/- ரூபாவல்ல மாறாக 2,300,000/- ரூபாவாக அமைய வேண்டுமெனவும் க. அ. தெரிவித்தார். அது தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிற்குப் பெற்றுத்தருமாறு க. அ. க்கு கட்டளையிடப்பட்டது.
4	மாலம்பே பட்டகலேயில் 980,000/- ரூபா செலவிட்டு நிர்மாணிக்கப்பட்ட இரவு - பகல் கரப்பந்தாட்ட மைத்தானதில் மேற்கொள்ளப்படாத வேலைகளுக்காக 551,700/-ரூபா செலுத்தப்படுதல், இதுவரை மின்சாரம் வழங்கப்படாதமையின் காரணமாக இரவு நேரங்களில் விளையாட முடியாதமை மற்றும் பகல் அல்லது இரவு நேரங்களில் குறிப்பிட்ட மைதானத்தில் விளையாட்டுக்களை நடத்த முடியாதமை.	இதில் முரண்பாடு காணப்படுவதனால் அடிப்படை புலனாய்வொன்றை மேற்கொள்வதற்கு குழுவொன்றை நியமித்து அதன்படி இப்பணத் தொகையை மீள அறவிட்டுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக க. அ. தெரிவித்தார். இது தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிற்கு அனுப்புமாறு க. அ. க்கு கட்டளையிடப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
5	04 பிரதேச செயலகங்களுக்குச் சொந்தமான 17421 ஏக்கர் அரச காணிகளுக்கு மத்தியில் 5960 ஏக்கர் காணிகள் வெளித் தரப்பினரொருவரால் அனுமதியின்றி அனுபவித்து வருவதாக தெரியவருதல்.	இது தொடர்பாக அறிக்கையொன்றை குழுவிற்கு அனுப்புமாறு க. அ. க்கு கட்டளையிடப்பட்டது.
	கலாசார அலுவல்கள் பற்றிய திணைக்களம் 2017 மார்ச் 22	
1	2016 ஆம் ஆண்டுக்கான செயற்பாட்டுத் திட்டத்திற்குரியதாக வருடத்தின் இறுதியில் மகாவம்சம் vi ஆம் தொகுதியை (1978 – 2010) தொகுப்பதன் பொருட்டு ஒதுக்கப்பட்டுள்ள 5.32 மில்லியன் ரூபா எஞ்சியிருத்தல் மற்றும் அதன் பௌதீக முன்னேற்றம் நூற்றுக்கு 47 வீதத்திற்கு குறைவான மட்டத்தில் காணப்படுதல்.	கலைக்களஞ்சியத்தை சிங்கள மொழியில் எழுதிமுடித்து அச்சு நடவடிக்கைகளுக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளதெனவும் எழுத்திலான பாளி மொழி மற்றும் பாளி மொழியிலிருந்து தேவாரங்களை சிங்கள மொழிக்கு மொழிமாற்றம் செய்யக்கூடிய ஐந்து நபர்கள் மட்டுமே நாட்டில் இருப்பதால் கலைக்களஞ்சியத்தை பாளி மொழிக்கு மொழிமாற்றம் செய்வதில் ஓரளவு தாமதம் காணப்படுவதாக க. அ. தெரிவித்தார். நாட்டில் பாளி மொழியை வாசிக்கக்கூடிய மற்றும் எழுதக்கூடிய ஐந்து பேர் மட்டுமே இருப்பதும் அவர்களது மரணத்தின் பின்னர் பாளி மொழி தெரிந்தவர்கள் இலங்கையில் இல்லாமல் செல்வது தொடர்பாகவும் குழு தீவிர கவனம் செலுத்தியது. இது சம்பந்தமாக எடுக்கப்பட வேண்டிய எதிரகால நடவடிக்கைகள் தொடர்பாக அறிக்கையொன்றை ஒரு மாதத்திற்குள் குழுவிற்கு அனுப்பிவைக்குமாறு பி.கஅ.க்கு கட்டளையிடப்பட்டது.
2	2008 ஆம் ஆண்டு 465 மில்லியன் ரூபா மதிப்பீட்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட குண்டசாலை தேசிய கலை கேந்திர நிலையத்தின் நிர்மாணப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாடு பயன்படுத்தப்படாமை.	யூன் மாதமாகும்போது இதன் ஒரு பகுதியை திறந்து வைக்க முடியுமென க. அ. அறிவித்தார். அதே போன்று இவ்வாண்டில் இந்த பணியை நிறைவு செய்வதற்காக 150 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் அந்த நிதி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
		ஏற்பாட்டைப் பயன்படுத்தி இவ்வாண்டில் திசெம்பர் மாதமாகும்போது நிர்மாணப் பணிகளை பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுவதாகவும் க. அ. தெரிவித்தார்.
3.	2013 ஆம் ஆண்டு சகல பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் தலா ஒரு கலைஞருக்காக வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கான கருத்திட்டம் திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2016 வரை எந்தவொரு வீடும் நிர்மாணிக்கப்படாமை	இந்த கருத்திட்டத்திற்கான பணம் கொடி விற்பனை மூலம் பெறப்பட்டதுடன் அந்த பணத்தில் ஒரு இலட்சம் ரூபா வீதம் செலவழித்து 2 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது என்றும் மீதிப் பணத்தை பொதுத் திறைசேரிக்கு வழங்கி உரிய தேவையான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் கலைஞர்களின் சுகவீனத்திற்காக இந்தப் பணம் விடுவிக்கப்பட்டுள்ளதாக க. அ. அறிவித்தார் .
4	ஜோன் டி சில்வா ஞாபகார்த்த கலையரங்கத்தை நவீனமயப்படுத்தும் பணிகள் 2011 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட போதிலும் கலையரங்கம் நவீனமயப்படுத்தும் பணிகளில் ஏற்பட்ட கடும் தாமதம் மற்றும் இதனால் அரசுக்கு கிடைக்கும் வருமானம் குறைவடைதல்	2011 இல் இந்தக் கருத்திட்டம் ஆரம்பமானவுடன் 322 மில்லியன் ரூபா செலவு மதிப்பீட்டுக்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தாலும் உண்மையான செலவு 422 மில்லியன் ரூபா என்றும் முதலாவது கட்டத்தை பூர்த்தி செய்ய மேலும் 90 மில்லியன் ரூபாவுக்கான மதிப்பீடொன்று தயார் செய்யப்பட்டுள்ளதென்றும் இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதென்றும் பிரதம க. அ. அறிவித்தார். அதேபோன்று நிதி ஒதுக்கங்களுக்கான தாமதம் மற்றும் வேறு பணிகள் தாமதம் காரணமாக இந்த நவீனமயமாக்கல் பணிகள் தாமதமடைந்திருப்பதாலும் இரண்டாவது கட்டத்துக்கு 1 பில்லியன் ரூபா நிதி ஏற்பாடு தேவை என்றும் அதனைப் பெற்றுக்கொள்வதற்காக அமைச்சரவைப் பத்திரமொன்றை சமர்ப்பிக்க எதிர்பாாப்பதாகவும் பிரதம க. அ. அறிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		கலாசார அலுவல்கள் அமைச்சு மற்றும் திணைக்களத்தின் கீழ் இருக்க வேண்டிய பல்வேறு நிறுவனங்கள் வேறு அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங் களின் கீழ் இருப்பதனால் கலாசார விடயங்களை முகாமைத்துவம் செய்வதில் பல்வேறு பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாக அவதானித்த குழுவானது, தற்போது கலாசார அலுவல்கள் அமைச்சுக்கு / திணைக்களத்திற்கு கீழுள்ள நிறுவனங்கள் யாவை, இதற்கு முன்னர் கலாசார அலுவல்கள் அமைச்சின் / திணைக்களத்தின் கீழ் இருந்த, எனினும் வேறு அமைச்சுக்களின் கீழ் வந்துள்ள நிறுவனங்கள் யாவை என்பது தொடர்பான அறிக்கையொன்றை குழுவிற்கு அனுப்பி வைக்குமாறு பிரதம கணக்கீட்டு/ கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.
05	கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் சிபாரிசை பெற்றுக்கொள்ளும் கலைஞர்களுக்காக 2008 இல் அனுமதிக்கப்பட்ட 'சரஸ்வதி' ஓய்வூதிய திட்டத்துக்காக 2011 ஆம் ஆண்டு முடிவடையும்போது தகைமை பெற்ற 984 கலைஞர்கள் விண்ணப்பித்திருந்த போதிலும் இத்திட்டத்தில் சேர்வதற்கு 84 பேர் மாத்திரமே தமது பங்களிப்பினை வழங்கியிருந்தார்கள்	இந்தக் கருத்திட்டம் தற்போது நடைமுறையில் இல்லை என்றும் இதற்கு பதிலாக வேறொரு ஓய்வூதிய முறையொன்று கலைஞர்களுக்காக நடைமுறையில் உள்ளதென்றும் க. அ. தெரிவித்தார்
06	தாபன பணிப்பாளர் நாயகத்தின் முழுமையான அனுமதியைப் பெற்றுக் கொள்ளாமல் திணைக்களத்தின் நிரந்தர பதவியணியிலுள்ள நடனக் கலைஞர்கள் ஐந்துபேர் நடனக் கலைஞர்கள் குழாமில் போதனாசிரியர்களாக சேவையில் ஈடுபடுத்தப்பட்டு பணம் செலுத்தப்படுகின்றது.	இந்த பணத் தொகையானது நடனக் கலைஞர்கள் 45 வயதை பூர்த்தி செய்ததன் பின்னர் தொடர்ந்தும் நடனக் கலைஞர்களாக சேவையில் ஈடுபடுத்தப்படுவதிலுள்ள சிரமங்கள் காரணமாக அவர்களை பேதனாசிரியர் சேவையில் ஈடுபடுத்தி வளவாளர் கொடுப்பனவாகவே செலுத்தப்படு கின்றதென க. அ. தெரிவித்தார்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
தேசிய நூதனசாலைத் திணைக்களம் 2017 மார்ச் 22		
01	லக்சலையினால் 25,000 ரூபா மாதாந்த வாடகையில் குத்தகைக்கு பெறப்பட்ட 8000 சதுர அடியினைக் கொண்ட நூதனசாலை உணவக கட்டடத்தின் 500 சதுர அடி உடன்படிக்கையின் நிபந்தனைகளுக்கு முரணாக பரிஸ்டா கொபி லங்கா தனியார் கம்பனிக்கு லக்சலவினால் குத்தகைக்கு வழங்கப்பட்டிருத்தல்	நூதனசாலை திணைக்களத்தினால் லக்சலவுக்கு இந்த கட்டிடத்தை வாடகைக்கு வழங்கும் போது அறிவிக்கப்பட்ட மதிப்பீட்டு அடிப்படையில் வாடகையை தீர்மானிக்காமல் மிகவும் குறைந்த விலைக்கு வழங்கப்பட்டிருப்பதை குழு அனுமதிக்கவில்லை என்பதுடன் லக்சலவுடன் கலந்தாலோசித்து நியாயமான தீர்வொன்றுக்கு வருமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது.
02	பாதுகாப்பு பிரிவில் வெற்றிடங்கள் காணப்பட்டமை மற்றும் பாதுகாப்பு கெமராக்களை இயக்குவதில் காணப்பட்ட குறைபாடுகள் காரணமாக தொல்பொருள்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் காணப்படல்	2013 மே மாதம் 23 ஆம் திகதி அனுமதிக்கப்பட்ட பிரதம பாதுகாப்பு அலுவலர் பதவி நூதனசாலை பாதுகாப்பு அலுவலர் 10 பதவிகளில் 06 பதவிகளும் பாதுகாப்பு உதவி உத்தியோத்தர் பதவிகள் 06 உம் 2016 திசெம்பர் 31 ஆம் திகதி ஆகும் போது வெற்றிடமாக உள்ளமை மற்றும் 05 வருடங்கள் கடந்தும் நூதனசாலைகளில் இடம்பெற்ற களவினை அடுத்து உரியவாறு பாதுகாப்பு கெமரா ஒன்று கூட பொறுத்தப்படாமை தொடர்பாக குழுவானது தனது கடும் அதிருப்தியை தெரிவித்தது. தற்போதுள்ள கெமரா கட்டமைப்பில் காணப்படும் குறைபாடுகள் அதாவது இரவு நேரத்தில் காட்சிகளைப் பெற்றுக் கொள்ள முடியாமை போன்ற பல பிரச்சினைகள் கெமரா கட்டமைப்பில் காணப்படுவதாக குழுவினால் அவதானிக்கப்பட்டது. வேறு நாடுகளில் தேசிய நூதனசாலைகளில் கள்வர்கள் மற்றும் தீ அனர்த்தங்கள் தொடர்பாக இயங்கும் பாதுகாப்பு கட்டமைப்புக்கள் தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டு அது தொடர்பாக விசேட

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		குழுவொன்றின் ஆலோசனைகள் பெறப்பட்டு தேசிய நூதனசாலையின் பாதுகாப்பினை உறுதிசெய்வதற்கு வேலைத்திட்டமொன்றை வகுக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு / கணக்கீட்டு அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது. முப்படையினர் மற்றும் பொலிசாரின் பாதுகாப்பை பெற்றுக்கொள்வது தொடர்பாக முறையான வேலைத்திட்டமொன்றை வகுக்குமாறும் அது தொடர்பான அறிக்கையொன்றை மே மாதத்திற்கு முன்னர் அனுப்பிவைக்குமாறும் பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு / கணக்கீட்டு அலுவலருக்கு உத்தரவிடப்பட்டது.
03	இரத்தினபுரி நூதனசாலை கட்டிடம் புதுப்பித்தலின் மொத்த மதிப்பீடான 5,771,000/= ரூபா பணத் தொகை 2015 இல் சபரகமுவ மாகாண பொறியிலாளர் சேவைகள் அலுவலகத்திற்கு செலுத்தப்பட்ட போதிலும் 2017 மார்ச் மாதம் ஆகும்போது கூட திருத்த வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.	மாகாண பொறியிலாளர் அலுவலகத்தினால் ஒப்பந்தக்காரரொருவருக்கு அந்த பணிகள் கையளிக்கப்பட்ட போதிலும் அந்த ஒப்பந்தகாரர் தனது பணியை செவ்வனே மேற்கொள்ளவில்லை என க. அ. தெரிவித்தார். இது தொடர்பாக கணக்குக் குழுவின் கவனம் ஈக்கப் பட்டுள்ளதாக சபரகமுவ பிரதம செயலாளருக்கு அறிவித்து நூதனசாலை திணைக்களத்துடன் இணைந்து பொறியியலாளர் சேவை அலுவலகம் தொடர்பாக முறையான விசாரணையினை நடத்தி தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு குறிப்பிட்ட பணியை நிறைவு செய்யுமாறு பொறியியலாளர் அலுவலகத்திற்கு அறிவிக்குமாறு குழுவானது பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு அறிவித்துள்ளது
04	இரத்தினபுரி நூதனசாலையில் புதிதாக மலசலகூட தொகுதியொன்றை நிர்மாணிப்பதற்கு மாகாண பிரதேச பொறியியலாளர் அலுவலகத்திற்கு 1,858,000/- ரூபா செலுத்தப்பட்ட போதிலும் 2017 ஆண்டு மார்ச்	2017 மே மாதம் 01 ஆம் திகதிக்கு முன்னர் இது தொடர்பான அறிக்கையொன்று பிரதம செயலாளரிடமிருந்து கோரப்பட்டு குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு குழுவானது அறிவித்துள்ளது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	மாதமாகும்போது அதன் அரைப்பகுதி மாத்திரமே நிர்மாணிக்கப்பட்டிருந்தது.	
05	1942 ஆம் ஆண்டின் 31 ஆம் இலக்க தேசிய நூதனசாலை கட்டளைச் சட்டத்தை நீக்கி புதிய சட்டமூலமொன்றை தயாரிக்கும் பணிகள் 2015 யூன் மாதம் 07 ஆம் திகதியாகும்போது நிறைவு பெற்றிருந்தாலும் 2017 மார்ச் மாதம் ஆகும் போது சட்டமூலத்தை நிறைவேற்றும் பணிகள் பூர்த்தியடையாமையினால் திணைக்களத்தின் மீள் கட்டமைப்புப் பணிகள் தாமதமடைந்திருத்தல்.	இங்கு மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தங்கள் சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு எதிர்வரும் மாதத்திற்குள் சமர்ப்பிக்கப்படுமென பிரதம க. அ. / க. அ. அறிவித்தார். 2014 தொடக்கம் இது வரையிலான மாற்றல்களையும் சட்டத்தில் உள்ளடக்குவது தொடர்பாக கவனத்தில் கொள்ளுமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு / கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது.
06	நூலகத்தில் 03 வெற்றிடங்களை நிரப்புவதற்கு பல வருடங்கள் தொடக்கம் நடவடிக்கை எடுக்காமை மற்றும் ஆவணங்கள் பேணல் திணைக்களத்தில் பாதுகாப்பதற்காக கிடைக்கும் புத்தகங்கள் அணுகல் ஆவணங்களில் உள்ளடக்கப்படுதல் 02 வருடங்களாக தாமதமடைந்துள்ளன.	கிடைக்கும் புத்தகங்களை விடயத்துக்கமைய தெரிவு செய்ய நேரிட்டுள்ளதனால் அவற்றை அணுகல் ஆவணத்தில் உள்ளடக்க அதிக காலம் எடுப்பதாக க. அ. அறிவித்தார். நூலகத்தில் வெற்றிடங்களை நிரப்பக் கூடிய காலகட்டத்துடன் கூடிய அறிக்கையொன்றை அனுப்பிவைக்குமாறு பொது நிருவாக அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்குமாறு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிடப்பட்டது.
07	2015 ஆம் ஆண்டு பண்டங்கள் ஆய்வு அறிக்கைகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கொழும்பு மற்றும் பிரதேச நூதனசாலை 8 இன் தொல்பொருள்கள் பண்டங்கள் கணக்கெடுப்பு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை.	தொல்பொருள்கள் வருடாந்த பண்டங்கள் கணக்கெடுப்பில் உள்வாங்கப்படுவதில்லை என்றும் எதிர்வரும் நாட்களில் இது தொடர்பாக குறித்துரைக்கப்படும் காலவரையறையுடன் கூடிய தொல்பொருள்கள் தெடர்பான பண்டங்கள் கணக்கெடுப்பொன்றை மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளதாகவும் க. அ. அறிவித்துள்ளார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
ஊவா மாகாண சபை **2017 மார்ச் 23**		
01	2010 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும் போது 2011 ஆம் ஆண்டு வரி வருமானம் குறைந்துள்ளமை.	காணிச் சட்டத்தின் கீழ் மாகாண சபைகளுக்கு கிடைத்த முத்திரைத் தீர்வை குறைந்தமை இதற்கு காரணமாகும் என்பதுடன் ஒட்டுமொத்தமாக நோக்கும்போது மாகாண சபை 85% – 90% வரையிலான பௌதீக முன்னேற்றத்தையும் 55% – 60% வரையிலான மூலதன முன்னேற்றத்தையும் அடைந்திருப்பதாக பிரதம க. அ. / க. அ. அறிவித்தார்.
02	2002 இல் மாகாண விவசாய அமைச்சினால் விதை உருளைக்கிழங்கு இறக்குமதி செய்து விநியோகிக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் ரூபா 67,000,000/= க்கான தொகையில் 40,661,012/= ரூபா தொகை 2015.12.31 ஆம் திகதி தீர்த்து வைக்கப்படாமை.	விதை உருளைக்கிழங்குகள் பழுதடைந்ததன் காணமாக 29.8 மில்லியன் ரூபா செயற்படு நட்டமும் 10.8 மில்லியன் ரூபாவுக்கான கடன் மீதியும் காணப்பட்டதுடன் உருளைக்கிழங்கு இறக்குமதி கம்பினியினால் அறவிடப்பட வேண்டிய 11 மில்லியன் ரூபாவுக்காக அதன் காப்புறுதி முகாமையாளர் 6 மில்லியன் ரூபாவினை செலுத்தியிருப்பதுடன் மீதிப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்காக வழக்கு தொடர்வது பயனற்ற விடயமென சட்ட மாஅதிபர் அறிவித்துள்ளதாக குறிப்பிட்ட பிரதம க. அ. / கண்கீட்டு அலுவலர் 10.8 மில்லியன் ரூபாவுக்கான மீதியை குறிப்பிட்ட அலுவலர்களின் சம்பளத்திலிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறிவித்தார். குறிப்பிட்ட பணத்தை அறவிட நடவடிக்கை எடுத்து அது தொடர்பான அறிக்கையொன்றை குழுவுக்கு வழங்குமாறு பிரதம க. அ. / கணக்கீட்டு அலுவருக்கு கட்டளையிடப்பட்டது.
03	ஊவா மாகாண சபையினால் 2.5 கிலோ வோட்ஸ் டிரான்ஸ் மீற்றறொன்றை கொள்வனவு செய்வதற்காக 5 மில்லியன் ரூபா ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு	ஊவா சமுக ஒலிபரப்பு சேவையின் ஒலிபரப்பு ஆற்றலை மேம்படுத்தும் பொருட்டு 2.5 கிலோவோட் டிரான்ஸ் மீற்றறொன்றைப் பெற்றுக்கொள்ள

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	செலுத்தப்பட்ட போதிலும் குறிப்பிட்ட டிரான்ஸ் மீற்றரை பெற்றுக்கொடுக்க அல்லது பணத்தை திருப்பிக் கொடுக்க கூட்டுத்தாபனம் நடடிவக்கை எடுக்கவில்லை.	ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்திற்கு 5 மில்லியன் ரூபா செலுத்தப்பட்ட போதிலும் அது நிறைவேற்றப்படாமையினால் சமுக ஒலிபரப்பு சேவையின் அலைவரிசை அதிர்வெண்களை பயன்படுத்துவதற்காக கூட்டுத்தாபனத்திற்கு செலுத்த வேண்டிய 17.3 மில்லியன் ரூபா பணத்துக்காக அதனை ஈடு செய்து கொள்வதற்கு நடவடிக்கை எடுத்ததாக பிரதம க. அ. / க. அ. அறிவித்தார்.
04	வெலிமடை பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்திற்குரிய 9 ஏக்கர் 13 பர்சஸ் காணி விவசாய நடவடிக்கைகளுக்காக குருதலாவ செந்தோமஸ் கல்லாரிக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் 1996 ஆம் ஆண்டு தொடக்கம் அதன் குத்தகை செலுத்தல் தட்டிக் கழிக்கப்பட்டு மாகாண சபைக்கு 5 மில்லியன் ரூபா நட்டம் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் அந்த காணியின் சுமார் 01 ஏக்கர் பரப்பளவு அத்துமீறி பிடிக்கப்பட்டுள்ளது.	குத்தகை பணத்தைச் செலுத்துமாறு வழங்கிய கட்டளைக்கமைய காணி அமைச்சுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மேன்முறையீடு ஆராயப்பட்டதுடன் 10,000/= ரூபாவுக்கான பெயரளவிலான குத்தகை செலுத்தப்பட்டு காணியை மீண்டும் அரசுக்கு செலுத்த விருப்பம் தெரிவிக்கப்பட்டுள்ளதனால் அந்தக் காணி தற்போது வெலிமடை பிரதேச செயலாளரின் பொறுப்பில் இருப்பதுடன் இந்த வருட இறுதிக்குள் அல்லது அத்துமீறி குடியிருப்பவர்களையும் வெளியேற்ற நடவடிக்கை எடுத்து அது பற்றிய விபரமான அறிக்கையொன்றை பெற்றுக் கொடுக்குமாறு குழு பிரதம கணக்கீட்டு அலுவலருக்கு / கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளையிட்டது.
05	பண்டாரவளை பிரதேச செயலாளர் பிரிவில், கஹகொல்ல விவசாய ஆராய்ச்சி நிலையத்துக்குரிய 1.117 ஹெக்டயர் அரச காணி 2009 ஆம் ஆண்டு தொடக்கம் வருடமொன்றுக்கு தலா 220,000/=ரூபாவுக்கான குத்தகை கட்டணத்தில் தனியார் கம்பனியொன்றுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்ட போதிலம் 2004 – 2013 வரை நிலுவை குத்தகை அல்லது நிலுவை	1998 ஆம் ஆண்டில் குத்தகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இந்த காணியில் டிரைஸ்டார் எபரல் நிறுவனத்தினால் ஆடைத் தொழிற்சாலையொன்று நடத்தப்பட்டு 2004 தொடக்கம் குத்தகைக்கு செலுத்தல் தட்டிக் கழிக்கப்பட்டு சுவீகரிக்கப்பட்ட விதிமுறைகளுக்கு அப்பாற்பட்ட வகையில் அதன் வர்த்தக உரிமையை வேறு தரப்பினருக்கு (வெராசோ) கையயளிக்க நடவடிக்கை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	வட்டி என்பவற்றை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை	எடுக்கப்பட்டுள்ளது. காணிச் சட்டத்தின் 66வது பிரிவிற்கு ஏற்ப அந்த உடன்படிக்கை இரத்து செய்யப்பட்டுள்ள போதிலும் நிலுவை குத்தகையை அறவிட நடவடிக்கை எடுக்கப்படாமையினால் டிரைஸ்டார் நிறுவனத்திடமிருந்து அத்தகைய நிலுவைப் பணத்தை அறவிட்டுக் கொள்வது மற்றும் புதிய நிறுவனத்துடன் குத்தகை உடன்படிக்கையொன்றை கைச்சாத்திடுவதற்காக காணி ஆணையாளர் நாயகத்தின் கவனத்திற்கு ஈர்க்கப்பட்டிருப்பதாக பிரதம க. அ. / க. அ. தெரிவித்தார்.
06	தாபனவிதிக் கோவையின் XIX அத்தியாயத்தின் 5.3.1 ஆம் பிரிவிற்கு முரணாக 2008 ஆகஸ்ட் 01 ஆம் திகதி தொடக்கம் ஊவா மாகாண சபையின் செயலாளர்கள், பிரிதி பிரதமச் செயலாளர்களிடமிருந்து பெயரளவில் 500/= ரூபா மாதாந்தம் அறவிடப்பட்டு உத்தியோகபூர்வ குடிமனைகள் வழங்கப்பட்டிருத்தல்.	ஊவா மாகாண சபை அலுவலர்களை அதே மாகாணத்தில் வைத்திருக்கும் நோக்கத்துடன் ஆளுநரின் எழுத்துமூல அனுமதிக்கிணங்க இந்த சலுகை வழங்கப்பட்டதாக பிரதம க. அ. / க. அ. அறிவித்துள்ளார். இது தொடர்பாக விசேட கவனம் செலுத்தியுள்ள குழுவானது தெரிவுசெய்யப்பட்ட அலுவலர்களுக்கு மாதாந்தம் சலுகையினை வழங்குவது தார்மீக மற்றதோர் செயலென்பதனால் ஏனைய அலுவலர்களுக்கும் இந்த சலுகையை வழங்க முடியுமா என்பது தொடர்பாக ஆராயுமாறும் இது தொடர்பாக ஆளுநர் வழங்கிய எழுத்துமூல அனுமதியின் பிரதியை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் அறிவிக்கப்பட்டது.
07	2011.05.11 ஆம் திகதிய உள்ளூரதிகாரசபை மற்றும் மாகாணசபைகள், அமைச்சின் செயலாளரது PL/6/11/3/ டு1 ஆம் இலக்க கடிதம் மற்றும் 1987ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாணசபைகள் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக அனுமதிக்கப்படாத பதவிகள் மூன்றுக்காக	சகல மாகாண சபைகளுக்கும் பொதுவான பதவிகள் என்பதனால் வழங்கப்பட்டுள்ள கொடுப்பனவுகள் மற்றும் சலுகைகளை சட்டமுறையாக்குமாறு சகல மாகாணசபைகளும் அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ள போதிலும் சட்ட மாஅதிபர் இதற்கான அனுமதியை வழங்காமையினால் சகல மாகாண

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	2014 செப்டெம்பர் தொடக்கம் 2015 திசெம்பர் மாதம் வரை கொடுப்பனவாக ரூபா 6,992,258/= தொகை சபைச் செயலகத்தினால் செலுத்தப்பட்டுள்ளது.	சபைகளுக்கும் பொதுவான விதிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதற்கு பிரேரித்து அதிமேதகு ஜனாதிபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கு அமைச்சு தனது அவதானிப்புக்களை வழங்கியுள்ளதாக பிரதம க. அ. / க. அ. அறிவித்தார்.
08	பண்டாரவளை மாவட்ட வைத்திய சாலைக்குரிய காணியில் 2.66 பார்ச்சஸில் அனுமதியில்லாமல் வீடொன்று நிர்மாணிக்கப்பட்டிருத்தல் மற்றும் வெலிமடை ஆரம்ப பாடசாலை அமைந்துள்ள நியதகல பத்தன 1 ஏக்கர் 0.8 பர்ச்சஸ் காணியில் அத்துமீறியோர் நிரந்தர கட்டிடங்களை நிர்மாணித்திருத்தல் மற்றும் குறிப்பிட்ட வைத்தியசாலைக் காணிகளின் உரிமையை தீர்த்து வைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படாமை.	வெலிமடை பிரதேச செயலாளர் பொறுப்பில் உள்ள இந்த காணியில் அத்துமீறி குடியேறியுள்ளவர்களை அதிலிருந்து வெளியேற்றி அதனை துரிதமாக சுகாதார திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கும் பண்டாரவளை மாவட்ட வைத்தியசாலையில் அனுமதியற்ற கட்டடங்களை அகற்றுவதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச செயலாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டதாக பிரதம கணக்கீட்டு / க. அ. அறிவித்துள்ளார்.
09	வெலிமடை பிரதேச செயலாளர் அதிகாரப் பிரதேசத்தில் மீபிலிமானவில் அமைந்துள்ள 11.056 ஹெக்டயர் காணி 30 வருடங்களுக்கு குத்தகை உறுதிப்பத்திரம் இல்லாமல் ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்துக்கு குத்தகைக்கு வழங்குதல், அந்த காணியில் 19 ஏக்கர் வருடமொன்றுக்கு 2,755,000/= ரூபா பணத்துக்கு தனியார் துறையினருக்கு குத்தகைக்கு வழங்குதல் மற்றும் மாகாண சபைக்கு 8,680,000/= ரூபாவுக்கான வருமானம் இல்லாமல் போனமை தொடர்பாக குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.	ஒரு மூன்றாம் தரப்புடன் ஒரு ஒப்பந்தத்தைச் செய்துகொள்வதற்கு முன்னர் கூட்டுத்தாபனத்தினால் சகல நிலுவைத் தொகைகளும் தீர்ப்பனவு செய்யப்பட்டு முறிகளை சட்டமுறைப்படுத்திக் கொள்ளப்படுதல் வேண்டும் எனவும், சட்டமுறையற்ற ரீதியில் இருக்கின்ற நபர்களை அகற்றுவதற்கு அறிவித்தல் ஒன்று அனுப்பப்பட்டுள்ளது எனவும், காணிகள் ஆணையாளர் நாயகத்தின் அறிவுரைகளின் பிரகாரம் மேல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் எனவும் பி.க.அ. / க.அ. குறிப்பிட்டார். இது தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட சட்டநடவடிக்கைகள் தொடர்பில் கால வரைறயைகள் அடங்கலாக தயாரிக்கப்பட்ட ஒரு அறிக்கையை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		ஏப்பரல் மாதம் 10 ஆம் திகதிற்கு முன்னர் குழுவுக்குப் பெற்றுத் தருமாறு குழு பி.க.அ. / க.அ. இற்கு கட்டளையிட்டது.
10	2016.01.10 - 2016.01.24 வரை பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்தில் நடைபெற்ற பாடசாலை அடிப்படையிலான முகாமைத்துவ செயலமர்வுக்கு மாகாண சபையின் 30 அலுவலர்கள் கலந்து கொண்டமைக்காக 30,879,834/= ரூபா செலவிடப்பட்டிருந்ததுடன் கருத்திட்ட பெறுகைகள் திட்டத்துக்கு முரணாக 10,674,565/= ரூபாவினை செலவிட்டு கல்வித்துறையுடன் சம்பந்தப்படாத 10 அலுவலர்களை அதில் கலந்து கொள்ளச் செய்தல் மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அலுவலர்கள் வெளிநாடு செல்லல் தொடர்பாக தயாரிக்கப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறையியலின் தேவைப்பாடு	இது தொடர்பாக அதிமேதகு ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய அமைச்சினால் தயாரிக்கப்பட்ட வழிகாட்டல் ஜனாதிபதியின் செயலாளரின் அனுமதிக்காக அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி சுற்று நிருபமொன்றை அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதம கணக்கீட்டு/ க. அ. அறிவித்துள்ளார். பயிற்சி வழங்கும் நிறுவனங்களை தெரிவு செய்யும் வழிமுறை தொடர்பாக கருத்திட்ட பணிப்பாளரிடம் கேட்டு குழுவிற்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பிரதம கணக்கீட்டு / கணக்கீட்டு அலுவலருக்கு கட்டளை பிறப்பிக்கப்பட்டது.
11	போலி கொடுப்பனவுச் சிட்டைகள் தயாரிக்கப்பட்டு மொனராகலை பிரதி மாகாண சுகாதார சேவையின் பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெற்றுள்ள நிதி மோசடியினால் மாகாண சபைக்கு 4,537,640/= ரூபா நட்டம் ஏற்படல்	குற்றஞ் சாட்டப்பட்ட அலுவலரின் சேவையை இடைநிறுத்தம் செய்து அவரிடமிருந்து 3,361,000/= ரூபாவினை அறிவிட்டுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மீதிப் பணத்தை அறிவிட்டுக் கொள்வதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அறிவிக்கப்பட்டதாகவும் குறிப்பிட்ட அலுவலருக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடைபெறுவதாகவும் பிரதம கணக்கீட்டு / கணக்கீட்டு உத்ததியோகத்தர் அறிவித்தார்.
12	சட்ட ரீதியான அதிகாரம் இல்லாமல் மாகாண ஆளுநரால் 7 ஆலோசகர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.	முதலமைச்சரின் வேண்டுகோளுக்கமைய ஆளுநரினால் குறிப்பிட்ட நியமனத்தை செய்து கொடுப்பனவும் ஊதியமும் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் மாகாண சபைகளுக்கு ஆலோசகர்களை நியமிப்பதற்காக அமைச்சரவை அனுமதி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
		கிடைக்காமையினால் இந்த நியமனங்கள் சட்ட ரீதியானவை அல்ல என்பது ஆளுநருக்கும், முதலமைச்சருக்கும் எழுத்து மூலம் அறிவிக்கப்பட்டதன் பின்னர் 2016.12.08 ஆம் திகதிய கடிதம் மூலம் அந்த பதவியினை இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2016.12.18 ஆம் திகதிய கடிதம் மூலம் அந்த பதவிகள் மீண்டும் வலுவூட்டப்பட்டுள்ளதாக பிரதம கணக்கீட்டு / கணக்கீட்டு உத்தியோகத்தர் அறிவித்தார் ஆளுநருடன் கலந்துரையாடி இது தொடர்பாக எடுக்கும் நடவடிக்கைகள் சம்பந்தமாக 2017 ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன்னர் குழுவுக்கு அறிவிக்குமாறு கட்டளையிடப்பட்டது.
வடமத்திய மாகாண சபை 2017 மார்ச் 23		
01	மாகாண சபையின் மேலதிக நிதியங்களை நிலையான வைப்புகளில் முதலீடு செய்திருத்தல் குழுவின் கவனத்திற்கு உட்படுத்தப்பட்டது.	இந்தப் பணம் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஒதுக்கியவை என்பதுடன் பொது வைப்புக் கணக்குகளில் இதனை வைப்பிலிட்டுள்ளதை விட நிலையான வைப்புக்களில் முதலீகளை செய்வதன் மூலம் மேலதிக வருமானத்தைப் பெற்று அவற்றை பயனுள்ள விடயங்களுக்காக ஈடுபடுத்துதல் பாதுகாப்பானதென க. அ. தெரிவித்தார். இது தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை ஒன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு பணிப்புரை விடுத்ததுடன், அதற்கான ஒத்துழைப்பை வழங்குமாறு குழு க.அலுவலருக்கு பணிப்புரை விடுத்தது.
2	மாகாண சபை ஆரம்பிக்கப்பட்டு 26 வருடங்கள் கழிந்துள்ளபோதிலும், மாகாணத்திலுள்ள அடகு பிடிக்கும் நிலையங்களை பதிவு செய்தல், வருடாந்த	மாகாண அரசிறை ஆணையாளரால் இன்றளவில் அதற்கான நியதிச் சட்டமொன்று வரையப்படுவதாகவும், அதன்படி, வருடாந்த உரிமக் கட்டணமாக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	உரிமம் வழங்கல் மற்றும் அதற்குரிய கட்டணங்களை அறவிடுதல் பற்றிய அறிவுறுத்தல்கள் அடங்கிய நியதிச் சட்டமொன்று 2017 மார்ச்சு 10 திகதி வரையிலும் மாகாண சபையால் அங்கீகரிக்கப்படாமை.	ரூபா10,000/- யும், பதிவுக் கட்டணமாக ரூபா 100,000/- யும் பிணையாக ரூபா 100,000/- யும் அறவிட உத்தேசிக்கப் பட்டுள்ளதாகவும் வெகு விரைவில் அதை அங்கீகரிக்க நடவடிக்கை எடுக்கப்படு மெனவும் க. அ. தெரிவித்தார். நியதிச் சட்டம் அங்கீ கரிக்கப்படும் வரை வலுவிலுள்ள சட்டத்தின் கீழ் உரிய வருமானத்தை அறவிட பிரதேச அலுவலர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குமாறு நிதி அமைச்சின் அலுவலர்களுக்கு பணிப்புரை விடுத்த குழு, அதன்படி ஏனைய மாகாணங்களிலும் அடகு பிடிக்கும் நிலையங்கள் தொடர்பாக காணப்படும் வழிமுறையை ஆராய்ந்து அவற்றில் குறைபாடுகள் காணப்படின், அவற்றை நிவர்த்தி செய்ய தகுந்த நடவடிக்கைகளை எடுக்குமாறு பிரதம க. அ. . / க. அலுவலருக்கு பணிப்புரை விடுத்தது.
3	மின்சார வசதி இல்லாத பிரதேசங்களில் பயனாளிக் குடும்பங்களுக்கு விநியோகிப்பதற்காக 22800 சூரிய சக்தி விளக்குகளைக் கொள்வனவு செய்ய மத்திய அரசாங்க அமைச்சு ரூபா 337,011,880/- ஐ செலவிட்டிருந்தது. விற்பனையின் பின்னர் உரிய சேவைகளை வழங்காத காரணத்தால் உலர் மின்கலங்கள் செயலற்றிருந்த சூரிய சக்தி விளக்குகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தன.	2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செயற்படுத்தப்பட்ட "தேசத்திற்கு மகுடம்" கருத்திட்டத்தின் மூலம் மின்சாரம் இல்லாத பல பிரதேசங்களுக்கு மின்சார வசதி கிடைத்ததாகவும், அதனால் சூரிய சக்தி விளக்குகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டமை உண்மை எனவும் க. அ. விளக்கமளித்தார்.
4	மாகாண சபையால் 2010 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு விநியோகிப்பதற்காக ரூபா 80,640,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த 7500 நீர் வடிகட்டிகளில், விநியோகிக்கப்பட்டிருந்த	வட மத்திய மாகாணம் முழுவதுமாக பரவியுள்ள சிறுநீரக நோய்க்குத் தீர்வாக மக்களுக்கு குடிநீரை வழங்கும் ஒரு கருத்திட்டமாக இக்கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தாகவும், தொழில்நுட்ப மாற்றத்தைத் தொடர்ந்து

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	3268 நீர் வடிகட்டிகள் துருப்பிடித்தல், தொழிற்பாட்டுக் குறைபாடு மற்றும் வழங்குநர் உடன்பட்டிருந்த சேவைகளை வழங்காமை போன்ற காரணங்களால் பாவனையிலிருந்து அகற்றப்பட்டிருந்தமை மற்றும் 2012 ஆண்டிலும் மீண்டும் அதே தரத்திலான 5000 நீர் வடிகட்டிகள் ரூபா 53,480,000 செலவில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த அதேவேளை, 2016 திசெம்பர் 31 திகதியளவில் குறித்த நீர் வடிகட்டிகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளன.	உள்ளூராட்சி நிறுவனங்கள் “Aro Plant” மூலம் கிராமத்திற்கு சுத்தமான குடிநீரை வினியோகிப்பதால் நீர் வடிகட்டிகள் பாவனையிலிருந்து அகற்றப்பட்டுள்ளதாகவும் க. அ. தெரிவித்தார்.
5	அனுராதபுரம் புதிய பஸ் தரிப்பு நிலையத்திலும், தூர சேவை பஸ் தரிப்பு நிலையத்திலும் டிஜிட்டல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி ஓட்ட விபரங்களைக் காட்சிப்படுத்தல் மற்றும் முகாமை செய்தல் கருத்திட்டத்திற்காக பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை 2012 ஆண்டில் ரூபா 3,157,700/- ஐ செலவிட்டுள்ளபோதிலும், டிஜிட்டல் தொழில்நுட்ப சாதனங்கள் உரிய முறையில் பொருத்தப்படாத காரணத்தினால் அந்த சாதனங்கள் இயங்காத நிலையில் காணப்படுவதோடு ஒரு சில காலாவதியாகியிருப்பதாக கணக்காய்வாளர் தலைமையதிபதி அறிவித்துள்ளார்.	பஸ் தரிப்பு நிலையத்தினதும் தூர சேவை பஸ் தரிப்பு நிலையத்தினதும் நிர்மாணப் பணிகள் இதுவரை நிறைவடையாததால் உரிய சாதனங்களைப் பொருத்த முடியாதுபோனதாக க. அ. தெரிவித்தார். சாதனங்களைப் பொருத்த தவறியதற்கான காரணங்கள் மற்றும் அவற்றின் தற்போதைய நிலை பற்றிய அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு க. அ. க்கு பணிப்புரை விடுத்தது.
6	தம்புத்தேகம கல்வி வலய பாடசாலை ஒன்றில் இணைக்கப்பட்டு பணியாற்றிய ஆசிரிய பிக்கு ஒருவர் 2005 தொடக்கம் 2010 வரை பாராளுமன்ற உறுப்பினரான பிக்கு ஒருவரின் பிரத்தியேக பணியாட்டொகுதியில் பணியாற்றியதாகத் தெரிவித்து சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 1,039,357/- செலுத்தப் பட்டிருந்தபோதிலும், குறித்த	குறித்த பிக்குவிடமிருந்து இரண்டு தடவைகளில் ரூபா 125,000/- அறவிடப்பட்டுள்ளதாகவும், எஞ்சிய தொகை செலுத்தப்படுவதை அவர் தவிர்த்து வருவதால் சட்ட ஆலோசனை பெற்று வழக்குத் தொடர எதிர்பார்ப்பதாகவும் க. அ. தெரிவித்தார். அது தொடர்பான அறிக்கையொன்றை குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு குழு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	காலப்பகுதியில் உரிய மேற்பார்வை இன்றி சம்பளம் செலுத்துதல் மற்றும் முறையற்ற விதமாக சேவையிலிருந்து விடுவித்தல் பற்றி நடவடிக்கை எடுக்கப்படாமை.	க.அலுவலருக்கு பணிப்புரை விடுத்தது.
7	2008 ஆம் ஆண்டில் மாகாணங்களின் திட்டவட்டமான அபிவிருத்தி அளிப்புகளின் கீழ் வட மத்திய மாகாணத்தில் பால் பண்ணை நிருவாகம் மற்றும் அபிவிருத்திக்கான ஒதுக்கீடான ரூபா 34,000,000/- தொகை குறித்த நிதியத்திற்கு முரணாக 60 பால் விற்பனை நிலையங்களை நிர்மாணித்தல் மற்றும் அதற்குத் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக மாகாண சபையால் ரூபா 36,143,850/- தொகை மாகாண சபையால் செலுத்தப்பட்டிருந்தது. 2016 திசெம்பர் 31 ஆம் திகதியன்று அநேகமான பால் விற்பனை நிலையங்கள் மூடப்பட்டிருந்ததோடு ஒரு சில விற்பனை நிலையங்கள் அகற்றப்பட்டிருந்தன. தற்போது நடத்தப்படும் பால் விற்பனை நிலையங்களில் பாலுக்குப் பதிலாக வேறு உணவுப் பொருட்களை விற்பனை செய்யும் சாதாரண வியாபார நிலையங்களாக மாறியிருப்பதாக குழு அவதானித்தது.	இது உண்மையென ஏற்றுக்கொண்ட க. அ. தற்போது மூடப்பட்டுள்ள பால் விற்பனை நிலையங்களை உள்ளூராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைத்து, உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு வருமானத்தை பெற்றுக்கொள்ளக் கூடிய வழிமுறையொன்றை தயாரிக்குமாறு சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு அறிவித்துள்ளதாக தெரிவித்தார். இது தொடர்பில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழு உள்ளூராட்சி ஆணையாளருக்கு பணிப்புரை விடுத்தது.
8	வட மத்திய மாகாணத்தில் மின்சார வசதி இல்லாத கிராமங்களுக்கு மின்சாரத்தை வழங்கும் பொருட்டு விறகு எரிபொருள் மின் உற்பத்தி கருத்திட்டம் ஒன்றுக்கென 2009 ஆண்டில் மின் பிறப்பாக்கி இயந்திரம் ஒன்றை கொள்வனவு செய்ய ரூபா 2,396,800/- வும், 2011 ஆண்டில் ஏனைய உதிரிப் பாகங்களுக்கென ரூபா 2,198,536/- வும் என ரூபா 4,595,336/-	“தேசத்திற்கு மகுடம்” கருத்திட்டம் ஊடாக இக்கிராமங்களுக்கு மின்சார வசதி கிடைத்ததால் மின் பிறப்பாக்கி இயந்திரமும் உதிரிப் பாகங்களும் பயன்படாத நிலையில் உள்ளதாகவும், பொலனறுவை கல்லேல்ல தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்களின் உபயோகத்திற்காக இந்த உபகணங்களை வழங்க முன்மொழியப்பட்டுள்ளதாகவும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	மாகாண சபையால் செலவிடப்பட்டிருந்தபோதிலும், குறித்த மின் பிறப்பாக்கி இயந்திரம் குறைபாடு உடைய பழைய இயந்திரம் என்பதால் கருத்திட்டம் முற்றாக தோல்வி அடைந்திருத்தல் மற்றும் இந்த மின் பிறப்பாக்கியும் ஏனைய உதிரிப் பாகங்களும் வெலிகந்த பிரதேச செயலாளர் பிரிவில் மின்சார வசதியற்ற ஒரு கிராமத்தில் நிறுவுவதற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளபோதிலும், 2017 மார்ச்சு 10 திகதியளவிலும் தொழிற்படாத நிலையில் காணப்படல்.	க. அலுவலரால் தெரிவிக்கப்பட்டதுடன், அதற்கு குழு அனுமதியளித்தது.
9	மாகாண சபையால் ராஜாங்கணை உயர்த்து நீர்ப்பாசன கருத்திட்டங்கள் 10 இற்கென 2007 மற்றும் 2008 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்து கமநல அமைப்புகளுக்கு விநியோகித்திருந்த ரூபா 17,876,144 பெறுமதியான 23 நீர் இயந்திரங்கள் மின்சாரம் இல்லாத காரணத்தால் செயலற்றிருந்ததுடன், தற்போது அதில் 06 இயந்திரங்களை இயக்க முடியாத காரணத்தால் 03 கருத்திட்டங்கள் செயற்படவில்லை.	தொழில்நுட்ப உத்தியோகத்தர்களின் உபகரணங்களுக்கான தேவை குறித்து வினவாது அவற்றைக் கொள்வனவு செய்தல் ஒரு குறைபாடு என்பதையும், எதிர் காலத்தில் இவ்வாறான குறைபாடுகள் நிகழாத வகையில் செயற்படுதல் க.அலுவலரின் பொறுப்பு என்பதையும் குழு சுட்டிக்காட்டியது.
10	ரூபா 3,592 மில்லினுக்கு மதிப்பீடு செய்யப்பட்டிருந்த, வெள்ளத்தால் சேதமான 53 வீதிகளைப் புனரமைப்பதற்காக பகிரங்க கேள்விப் பத்திரங்கள் கோராது மதிப்பீட்டுப் பெறுமதி 05 மில்லியன் ரூபாவுக்கு குறைவான 741 கருத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்து மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான விலைகள் கோரப்பட்டு வழங்குநர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். மேலும் ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு குறித்த	இது தொடர்பாக விசாரணையொன்று நடைபெறுவதாக க. அ. தெரிவித்தார். இதனுடன் சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரருக்கு பணம் செலுத்துவதை நிறுத்தி விசாரணை அறிக்கைபடி செயற்படுமாறும், குறித்த கேள்விப்பத்திர சபை அலுவலர்களின் பெயர் பட்டியலுடன் கருத்திட்டத்தின் தற்போதைய நிலை பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறும் பணித்த குழு வெளிப்படைத்தன்மை இன்றி கருத்திட்டத்தை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	கருத்திட்டங்களில் ரூபா 2,934 மில்லியன் பெறுமதியான 629 கருத்திட்டங்கள் வழங்கப்பட்டிருந்தன. 741 கருத்திட்டங்களுக்கு பிரிக்கப்பட்டதன் காரணமாக கேள்விப்பத்திர சபைக்கு ரூபா 3.58 மில்லினைச் செலுத்த நேரிட்டமை மற்றும் 2013 ஆண்டில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட பொறியியலாளர்களை ஈடுபடுத்தி மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது இந்த வீதி புனரமைப்புக்கு ஏற்புடையதாக ரூபா 1,170 மில்லியனுக்கு அண்ணளவான மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாக கண்டுபிடிக்கப்பட்டமை.	நடைமுறைப்படுத்தியதால் ஏற்பட்டுள்ள இந்த கொடுக்கல் வாக்கல் தொடர்பாக தன்னுடைய அதிருப்தியைத் தெரிவித்தது.
11	தேசத்தைக் கட்டியெழுப்பும் அமைச்சு மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியினைக் கொண்டு நடைமுறைப்படுத்திய, கைவிடப்பட்டிந்த குளங்களைப் புனரமைக்கும் கருத்திட்டங்கள் மேற்பார்வையில் காணப்பட்ட குறைபாடுகளால் தோல்வி அடைந்திருத்தல் மற்றும் குறித்த கருத்திட்டத்துடன் தொடர்புடைய ஒரு சில நடவடிக்கைகளை நிறைவேற்றாது போலியான விலைப்பட்டியல்களைத் தயாரித்து கொடுப்பனவுகள் செய்யப்பட்ட காரணத்தால் அரசாங்கத்திற்கு ரூபா 78.7 மில்லியன் நட்டம் ஏற்பட்டமை மற்றும் உரிய அதிகாரமின்றி செலுத்தப்பட்டிருந்த வேலையை ஆரம்பிப்பதற்கான 31.25 மில்லியன் ரூபாவில் இன்றளவில் 26.4 மில்லியன் ரூபா அறவிடப்படாமை.	பொறியியலாளர்கள் மற்றும் தொழில்நுட்ப அலுவலர்களின் பொறுப்பற்ற நடவடிக்கை முறை தொடர்பில் கடுமையான அதிருப்தியை வெளியிட்ட குழு அதன் தற்போதைய நிலைமை தொடர்பான அறிக்கை ஒன்றை குழுவுக்கு வெகு விரைவில் வழங்குமாறு க. அ. பணிப்புரை விடுத்தது.
12	மாகாண சபைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் எதிர்க் கட்சித் தலைவர், அரசாங்கக் கட்சியின் முதற்கோலாசான், எதிர்க்	இது ஒவ்வொரு மாகாண சபையிலும் காணப்படுகின்ற பொதுவான ஒரு பிரச்சினை என்பதைச் சுட்டிக்காட்டிய குழு, மத்திய அரசாங்கத்தின் அமைச்சு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	கட்சியின் முதற்கோலாசான் ஆகிய பதவிகளை உருவாக்கி மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்குரிய சிறப்புரிமைகளை விஞ்சும் வகையில் சலுகைகள் வழங்கப்பட்டிருந்ததோடு உரிய பதவிகளை வகித்தவர்களுக்கு வழங்கப்பட்டிருந்த மேலதிக வரப்பிரசாதங்களுக்காக 2014 ஆம் ஆண்டில் ரூபா 6,461,136/- வும், கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபா 11,056,750/- வும் மற்றும் 2016 ஆண்டில் ரூபா 5,595,459/- வும் செலுத்தப்பட்டிருந்தது.	இடையீடு செய்து சுற்றறிக்கை ஒன்றைத் தயாரித்து இப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்குமாறும் அத்துடன் மாகாண சபை ஒவ்வொன்றுக்கும் ஏற்புடையதாக வெளிநாட்டுப் பயணங்கள் தொடர்பான வழிமுறையை சீர்செய்யுமாறும், சுற்றறிக்கை ஒன்றைத் தயாரிக்குமாறும் பிரதம க. அ. . / க.அலுவலருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.
13	முதலமைச்சரதும் மாகாண சபை அமைச்சர்களதும் கொடுப்பனவுகள் மற்றும் அவர்களது பிரத்தியேக பணியாட்டொகுதிகுதியின் கொடுப்பனவுக்காக ஒவ்வோர் அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் வழங்கப்பட்டிருந்த நிதியிலிருந்து குறித்த கொடுப்பனவுகள் முழுமையாக செலுத்தப்பட்டிருந்த நிலையில், அதற்கு மேலதிகமாக முதலமைச்சர் மற்றும் மாகாண சபை அமைச்சர்களை மாகாண சபை உறுப்பினர்களாகக் கருதி மாகாண சபை மற்றும் மாகாண செயலக செலவுத் தலைப்பின் கீழும் 2014 ஆண்டில் ரூபா 4,877,400/- வும், கடந்த மூன்று ஆண்டுகளில் ரூபா 12,933,600/- வும், 2016 ஆண்டில் ரூபா 6,677,400/- வும் சாரதிகளுக்கான கொடுப்பனவுகள் மற்றும் பிரத்தியேக பணியாட்டொகுதிக்கான கொடுப்பனவாக செலுத்தப்பட்டிருந்தது.	சகல மாகாண சபைகளிலும் இக்கொடுப்பனவு செலுத்தப்படும் விதம் பற்றிய தகவல்களைப் பெற்று, மாகாண சபைகளுக்கிடையில் காணப்படுகின்ற வேறுபாடுகளை ஆராய்ந்து தான் அறிக்கையொன்றை தயாரித்துள்ளதாகவும், இதற்கான ஒரு பொதுவான வழிமுறையை தயாரிக்க வேண்டிய தேவை காணப்படுவதால் அதுபற்றி சனாதிபதி செயலாளருக்கு முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளதாகவும் பிரதம க. அ. . தெரிவித்தார்.
14	கௌரவ முதலமைச்சரின் பிரத்தியேக பணியாட்டொகுதி 15 இற்கு வரையறை செய்யப்படவேண்டிய போதிலும் அந்த	கொளரவ முதலமைச்சரின் பணியாட்டொகுதி காலத்திற்குக் காலம் மாறுமென்பதால் பணியாட்டொகுதி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	எல்லையைத் தாண்டி 2013 ஆண்டில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 30 அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 8,652,550/- வும், 2016 ஆண்டில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த 10 அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 2,884,285/- வும் செலுத்தப்பட்டிருந்தது.	தொடர்பான மிகை கணக்கெடுப்பொன்று இடம்பெற்றுள்ளதாக தான் கருதுவதாக க. அ. தெரிவித்தார். இந்த நிலைமையைத் தெளிவுப்படுத்தி அறிக்கையொன்றைச் சமர்ப்பிக்குமாறு குழு க. அ. க்கு பணிப்புரை விடுத்தது.
15	பிந்திய ஆண்டுகளில் கணக்குப் பதிவு வைக்கப்பட்ட பல மாடிகளைக் கொண்ட கட்டடங்களின் முதல் கட்டத்தைப் பூர்த்தி செய்த 19 ஒப்பந்தக்காரர்களுக்கு பெறுகை வழிகாட்டி கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணான வகையில் எஞ்சிய வேலைகளை நிறைவு செய்வதற்கான முழுமொத்த பெறுமதியான ரூபா 237,242,603/- தொகை பொறியியல் மதிப்பீட்டின் அடிப்படையில் 31 ஒப்பந்தங்களுக்கு வழங்கப்பட்டிருந்தன.	இக்கட்டடங்களில் இரண்டாம் மாடியை நிர்மாணிப்பதற்கு பின்னர் முடிவெடுக்கப்பட்டதாகவும், அதற்கமைய அமைச்சரவை பத்திரமொன்றின் அடிப்படையில் உரிய ஒப்பந்தகாரர்களுக்கு ஒப்பந்தங்கள் கையளிக்கப்பட்டதாகவும் க. அ. விளக்கமளித்ததுடன், ஆளுநர் அங்கீகரித்த குறித்த அமைச்சரவைப் பத்திரத்தை குழுவுக்குச் சமர்ப்பிப்பதாகவும் க. அ. வாக்குறுதியளித்தார்.
16	வட மத்திய மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை நியதிச் சட்டத்தின் 15(3) பிரிவு, வட மத்திய மாகாணத்தின் வீதி அபிவிருத்தி அதிகாரசபை ஆட்சேர்ப்பு நடைமுறை மற்றும் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைமுறை விதி 412 இற்கு முரணான வகையில் மாகாண அரச முகாமைத்துவ உதவியாளர் சேவையின் மேற்றர வகுப்பு அலுவலர் ஒருவரை மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையில் நிருவாக உத்தியோகத்தர் பதவியில் நியமித்து குறித்த அலுவலருக்கு கிடைக்க வேண்டிய அளவை விஞ்சி சம்பளம் மற்றும் கொடுப்பனவாக ரூபா 2,197,350/- வும்,	மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள தொகையை குறித்த அலுவலர்களிடமிருந்து மீள அறவிட நடவடிக்கை எடுக்கப்படுமென க. அ. தெரிவித்தார். குறித்த தொகையை மீள அறவிட நடவடிக்கை மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கை ஒன்றை குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு பிரதம க. அ. . / க. அ. க்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	2011 திசெம்பர் தொடக்கம் 2016 யூன் வரை அதிகமாக செலுத்தப்பட்டிருந்தது.	
17	09 வருடங்களுக்கும் மேலாக நிர்மாணிக்கப்பட்டு வந்த மதவாச்சி விசேட பொருளாதார மத்திய நிலையத்தின் நிர்மாணப் பணிகள் 2016 ஓகத்து மாதம் நிறைவு செய்யப்பட்டுள்ளபோதிலும், 2017 மார்ச்சு 10 திகதியளவிலும் திறந்து வைக்கப்படவில்லை. அதன் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 25,397,680 ஆக இருப்பதுடன், வேலைகளை நிறைவு செய்யும் செலவு ரூபா 47,297,258/- ஆக இருந்ததுடன் ஒப்பந்தக்காரருக்கு வழங்கப்பட்டிருந்த முற்பணத்தில் ரூபா 1,072,848/- அறவிடப்படவில்லை.	இன்றளவில் பொருளாதார மத்திய நிலையத்தின் பணிகள் நிறைவடைந்துள்ளதாகவும், மாகாண சபைக்கு வருமானம் கிடைக்கக் கூடிய வகையில் அதை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், கணக்குகள் மற்றும் செலவுகள் தொடர்பாக திருப்திபட முடியாமை உண்மை எனவும் க. அ. தெரிவித்தார்.
18	தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக பிரதம செயலாளர், அமைச்சின் செயலாளர்கள் உட்பட 17 அலுவலர்கள் உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியேறியமைக்காக மாதாந்தம் ரூபா 500/- உச்சவரம்புக்கு உட்பட்டதாக வீட்டுக் கூலி அறிவிடப்பட்டிருந்ததுடன், குறித்த வீடுகளின் நீர் மற்றும் மின்சார பட்டியல் பெறுமதியில் 70% குறித்த நிறுவனங்களின் செலவுத் தலைப்புகளுக்கு பற்று வைத்து செலவிடப்பட்டிருந்தது. இதன் காரணமாக 2015 ஆண்டில் அரசாங்கத்திற்கு ரூபா 1,199,338/- நட்டம் ஏற்பட்டிருந்தது.	வட மத்திய மாகாணத்தைப் போன்ற பின்தங்கிய ஒரு மாகாணத்தில் கடமை புரிவதற்கு பணியாளர்கள் காட்டிவரும் அசமந்தப் போக்கு காரணமாக அவர்களை ஊக்குவிப்பதற்காக ஆளுநரின் அங்கீகாரத்துடன் இவ்வாறான உத்தியோகபூர்வ இல்லங்களில் குடியிருப்பவர்களிடம் நிவாரண அறவீடு இடம்பெறுவதாக க. அ. தெரிவித்தார். இது தொடர்பாக ஆராய்ந்து சகல மாகாண சபைகளுக்கும் பொதுவாக சம்பந்தப்பட்டதாக, செலயாளர்களுக்கு மட்டுமன்றி ஏனைய பணியாளர்களுக்கும் பொருந்தக் கூடிய நியாயமான வழிமுறை ஒன்றை தயாரிக்குமாறு குழு பிரதம க. அ. லுவலருக்கு பணிப்புரை விடுத்தது.
19	கலென்பிந்துனுவெவ பிரதேச சபையினால் 2012 ஆண்டில் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 4.8 பில்லியன் மதிப்பிடப்பட்ட பெறுமதியான	நீதிமன்ற உத்தரவின்படி ஒப்பந்தக்காரர் ஒருவருக்கு கொடுப்பனவொன்றை மேற்கொள்ள கலென்பிந்துனுவெவ பிரதேச சபையின் ஆதனங்களை ஏலத்தில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	கலென்பிந்துனுவெவ நகர நீர் வழங்கல் திட்டத்திற்காக 2013 ஆண்டில் ரூபா 3,452,403 பெறுமதியான பீ.வி.சீ. குழாய்கள் கொள்வனவு செய்யப்பட்டு பிரதேச சபை வளாகத்தில் களுஞ்சியப்படுத்தி வைத்தல் தவிர 2017 சனவரி 22 திகதியளவிலும் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளப் படவில்லை.	விற்றொழித்துள்ள காரணத்தால் இந்நிலை ஏற்பட்டதாகவும், இன்றளவில் குறித்த நீர் வழங்கல் திட்டத்தை மாகாண சபையின் நிதியில் முன்னெடுக்க எதிர்பார்ப்பதாகவும் க. அ. தெளிவுபடுத்தினார்.
20	2008 ஆண்டில் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த மானன்கட்டிய நீர் வழங்கல் திட்டத்திற்கு ஏற்புடையதாக மாகாண சபையால் 15 மீற்றர் உயரமான தூண்களுடனான நீர்த்தாங்கி ஒன்று நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன் அதற்கான கிரயத்தைக் கண்டுபிடிக்க முடியவில்லை. 2011 ஆண்டில் இயந்திர அறையொன்றை நிர்மாணிப்பதற்கும், இரண்டு நீர்ப்பம்பிகளை கொள்வனவு செய்வதற்கும் ரூபா 450,000/- செலுத்தப்பட்டிருந்ததுடன், குறித்த நீர்ப்பம்பிகள் இரண்டும், நீர் வழங்கல் திட்டத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 1,610,340 பெறுமதியான பீ.வி.சி குழாய்களும் மானன்கட்டிய பிரதேசத்தில் கைவிடப்பட்டுள்ளன.	இக்கருத்திட்டத்திற்கான பீ.வி.சி குழாய்கள் மாகாண சபை உறுப்பினர் ஒருவரின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளன என்பதையும், கருத்திட்டத்தின் எஞ்சிய பணிகளை மேற்கொள்ள மாகாண சபையால் நிதி ரீதியான பங்களிப்பை வழங்க முடியாதுள்ளதால் குறித்த கருத்திட்டம் நின்றுவிட்டதாகவும், இந்த ஆண்டில் மத்திய அமைச்சின் நிதியைக் கொண்டு கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாகவும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார்.
புத்த சாசன அமைச்சு மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களம் 2017 மார்ச்சு 24		
1	புத்த சாசன அமைச்சின் 2011.10.18 திகதிய குழுக் கூட்டத்திலும், பௌத்த அலுவல்கள் திணைக்களத்தின் 2012.05.23 திகதிய கூட்டத்திலும் வழங்கப்பட்ட பணிப்புரைகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பான முன்னேற்றம்.	

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	(i) புத்த சாசள அமைச்சினால் 2004 பெப்புருவரி 01 திகதி விபத்து காரணமாக 58-7622 இலக்க வாகனத்திற்கு ஏற்பட்ட ரூபா 212,683/- நட்டத்தை காப்பீடு செய்ய எடுக்கப்பட்ட நடவடிக்கை.	(i) புத்த சாகன அமைச்சுக்கு அமைய அடிப்படையில் அமைச்சரின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக ஆட்சேர்ப்பு செய்யப்பட்டிருந்த சாரதியொருவரினால் இந்த விபத்து சம்பவித்ததாகவும், குறித்த தொகையை அறவிட வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. . தெரிவித்தார்.
	(ii) புத்த சாசன அமைச்சினால் 2008 தொடக்கம் 2010 வரை புண்ணியாராம நிகழ்ச்சித்திட்டத்திற்காக ரூபா 3,578,500 செலவில் நூல்களை அச்சிடுவதற்காக அரசாங்கத்தின் பெறுகை நடவடிக்கையை கடைப்பிடிக்காமை தொடர்பாக பொது நிருவாக அமைச்சுக்கு அறிவித்து முறையான விசாரணை ஒன்றை நடத்த பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் தகவல்கள் இல்லாத காரணத்தால் விசாரணை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.	(ii) உரிய கோப்புகளைச் சமர்ப்பிக்க தவறியுள்ளதால் இந்த விசாரணையை தற்காலிகமாக இடைநிறுத்துவதாக பொது நிருவாக அமைச்சின் விசாரணைப் பிரிவால் அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், அப்போதைய பணியாளர்கள் பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. /க.அலுவலர் தெரிவித்தார். இது தொடர்பான அறிக்கையொன்றை 2017 ஏப்பிறல் மாதம் 10 திகதிக்கு முன்னர் குழுவுக்குச் சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது.
	(iii) பௌத்த அலுவல்கள் திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்டுள்ள சகல வழிபாட்டிடங்களையும் 03 பகுதிகளாகப் பிரித்து அதன்படி உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்ள வேண்டுமென குழு பணிப்புரை விடுத்துள்ளதோடு அதனுடைய முன்னேற்றம்.	(iii) இந்த நடவடிக்கை சில கட்டங்களாக மேற்கொள்ளப்படுவதாகவும், அவையனைத்தும் பிரதான வழிபாட்டிடங்கள் என்பதால் கணக்காய்வை அவதானமாக மேற்கொள்ள வேண்டும் எனவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். தற்போது உள்ளகக் கணக்காய்வுப் பிரிவுக்கு உள்ளகக் கணக்காய்வு அலுவலர் ஒருவரும், மட்டுப்படுத்தப்பட்ட பணியாட்டொகுதியும் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் காணப்படுகின்ற நடைமுறைச் சிக்கல்கள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	(iv) பௌத்த அலுவல்கள் திணைக்களத்தால் தமிழ் மொழிமூல அறநெறிப் பாடசாலைகளின் நூல் தேவையை சரியான முறையில் மதிப்பீடு செய்து தேவையான நூல்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென முந்திய குழுவில் பணிப்புரை விடுக்கப்பட்டிருந்தபோதிலும் குறித்த கருத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படாமை. (v) பௌத்த அலுவல்கள் திணைக்களத்தால் 1931 ஆண்டின் பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்திற்கான திருத்தங்களை மேற்கொண்டு மாநாயக்க நிலமேமார்களுக்குச் சமர்ப்பிக்க வேண்டுமென முந்திய குழுவில் விடுக்கப்பட்ட பணிப்புரையின் முன்னேற்றம்.	காரணமாக ஓரளவுக்கு காலதாமதம் ஏற்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். 41 வழிபாட்டிடங்கள் மட்டுமே தற்போது கணக்காய்வு செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். (iv) இன்றளவில் யாழ்ப்பாணத்தில் ஒரு தமிழ் மொழிமூல அறநெறி பாடசாலை மட்டும் நடத்திச் செல்லப்படுவதால் நூல்களை அச்சிடுதல் பயனற்றது எனவும், எதிர் காலத்தில் தேவை ஏற்படின் குறித்த கருத்திட்டத்தை மீண்டும் ஆரம்பிக்க முடியும் எனவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். (v) இப்பணி ஏற்கெனவே நிறைவேற்றப்பட்டுள்ளதாகவும், சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த பின்னர் அதற்கெதிராக உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதாகவும், வழக்குத் தீர்ப்பின்படி முன்மொழியப்படும் திருத்தங்களை மேற்கொண்டு மாநாயக்க தேரர்களின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள சமர்ப்பிக்க உள்ளதாகவும் அனுமதி கிடைத்த பின்னர் மீண்டும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார்.
2	2016 மற்றும் 2017 ஆண்டில் வெளியிடப்பட்டுள்ள மொத்தப் பெறுமதி ரூபா 205 மில்லியனுக்கான 07 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு	தாமதித்துள்ள ஐயவினாக்களுக்கு விடையளிக்க இன்றளவில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும், அவற்றை ஒரு வாரத்தினுள் கணக்காய்வாளர்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	விடையளிப்பதில் தாமதம்	தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிப்பதாகவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார்.
3	பொருளாதார ரீதியாக சிரமங்களை எதிர்நோக்கியுள்ள பின்தங்கிய விகாரைகளின் அபிவிருத்தி.	இலங்கையிலுள்ள சகல விகாரைகள் தொடர்பான பட்டியலொன்று திணைக்களத்தின் வசமுள்ளதாக பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார்.
	இலங்கையிலுள்ள சகல விகாரைகள் தொடர்பான பட்டியலொன்று திணைக்களத்தின் வசமிருத்தலின் தேவைப்பாடு	மாதிரிப் படிவம் ஒன்றின் மூலம் தகவல்களைப் பெற்று அவற்றை கொழும்புப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப நிறுவகத்துடன் இணைந்து கணினிமயப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். 12229 விகாரைகளின் தகல்கள் கிடைத்துள்ளதாகவும், இன்றளவில் 8912 விகாரைகளின் தகவல்கள் கணினிமயப்படுத்தப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். மேலும் விகாரைகளில் தங்கியிருக்கும் தேரர்கள் தொடர்பான தகவல்களும் இவ்வாறு பெறப்பட்டுள்ளதாக பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். சகல தகவல்களையும் திணைக்களத்தின் ஊடாக உள்வாங்குவதற்குப் பதிலாக தகவல் முகாமைத்துவ கட்டமைப்பு ஊடாக பிரதேச செயலகங்களினால் தகவல்களை உள்வாங்கக் கூடிய வழிமுறை ஒன்றைத் தயாரித்தல் பொருத்தமானதென குழு தெரிவித்தது. இக்கருத்திட்டத்தை 02 மாத காலத்தினுள் நிறைவு செய்ய முடியுமென பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பணியாட்டொகுதி போதாத காரணத்தால் உரிய காலத்தினுள் கருத்திட்டத்தை நிறைவு செய்ய முடியாதெனின், திணைக்களத்திற்குத் தேவையான பணியாட்டொகுதியை வழங்குமாறு குழு பிரதம க. அ. . /க.அலுவலருக்கு பணிப்புரை விடுத்தது. இப்பணியை யூன் மாதமளவில் நிறைவு செய்து பெற்றுக்கொண்ட தகவல்களைப் பயன்படுத்தி குழுவின் முன்னிலையில் இலங்கையிலுள்ள விகாரைகள் தொடர்பான முன்னிலைப்படுத்தல் (Presentation) ஒன்றைச் செய்யுமாறு குழு பிரதம க. அ. . /க.அலுவலருக்கு பணிப்புரை விடுத்தது.
4	பின்தங்கிய விகாரைகளை இனம் காணும் வழிமுறையொன்றைத் தயாரித்தல்.	பின்தங்கிய விகாரைகளை இனம் காணுதலுடன் சம்பந்தப்பட்ட நியதிகள் தயாரிக்கப்பட்டுள்ளன எனவும், தற்போதைய கட்டடங்கள் துப்பரவேற்பாட்டு வசதிகள், பிக்குமாரின் எண்ணிக்கை, முன்னெடுக்கப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்,, பங்கேற்பு மற்றும் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ள உதவிகளை அடிப்படையாகக் கொண்டு புள்ளியிடப்பட்ட ஒழுங்கின்படி விகாரைகள் தெரிவு செய்யப்படுமெனவும், அதன்படி இந்த ஆண்டில் 260 விகாரைகள் இனம் காணப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். விகாரைகளால் சாசனத்திற்கு ஆற்றப்படும் சேவையையும் புள்ளிவழங்கலின்போது கவனத்தில் கொள்ளுமாறு குழு பிரதம க. அ. . /க.அலுவலருக்கு பணிப்புரை விடுத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
5	2016 ஆண்டில் தேசிய போதைப்பொருள் தடுப்பு அலகானது போதைப்பொருள் உற்பத்தி, கொண்டு செல்லல் மற்றும் விற்பனையை 80% வரை குறைப்பதற்கும், தனிநபர் மது நுகர்வை 50% வரை குறைப்பதற்கும், புகையிலை உற்பத்தி மற்றும் நுகர்வை 50% வரை குறைப்பதையும் நோக்கமாக குறிப்பிட்டுள்ளபோதிலும், இந்த நிறுவனம் இலங்கை பொலிஸ் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களத்துடன் இணைப்பாக்கம் இல்லை என்பதையும், மதுவரித் திணைக்களத்தின் புள்ளிவிபரங்களின்படி மதுபான நுகர்வு அதிகரித்துள்ளதை சுட்டிக்காட்டல்.	இந்த அலகு ஆரம்பத்தில் சனாதிபதி அலுவலகத்தின் கீழ் தாபிக்கப்பட்டிருந்த போதிலும், தற்போது இந்த அலகு புத்த சாசன அமைச்சின் கீழ் தாபிக்கப்பட்டுள்ளதாகவும், இதற்கு புத்த சாசன அமைச்சின் செலவுத் தலைப்பின் கீழ் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார். புண்ணியாராம நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சட்டவிரோதமாக மதுபானம் மற்றும் போதைப்பொருள்களை உற்பத்தி செய்யும் 50 பிரதேசங்களில் அவற்றை தடுக்க எதிர்பார்ப்பதாக பிரதம க. அ. . /க.அலுவலர் தெரிவித்தார்.
6	அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு முரணாக தஹம்பாய கட்டடத்திற்காக ரூபா 27,198,047 பெறுமதியான மரத் தளபாடங்களும், அலுவலக உபகரணங்கள் கொள்வனவு செய்யப்பட்டதோடு அவற்றில் ரூபா 4,561,696/- பெறுமதியான பொருட்கள் உரிய தரத்தை கொண்டிராத நீண்ட கால பாவனைக்கு உகந்ததாக இல்லாமை	பழுதுபார்ப்பு நடவடிக்கைகளுக்காக செலவு மதிப்பீடு ஒன்றைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் ஒப்பந்தக்காரருக்கு ரூபா 6.8 மில்லியன் தீர்க்கப்படாத எனவும் அவற்றில் ஒரு தொகை நிறுத்தி வைக்கப்பட்டதாகவும் அத் தொகையில் பழுது பார்க்கும் பணியை மேற்கொள்வதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். இது தொடர்பான அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிடப்பட்டது
7.	அமைச்சு வளாகத்துக்கு CCTV கமராத் தொகுதியொன்றை பொருத்துவதற்கு ரூபா 1,111,500/- செலவிடப்பட்ட போதிலும் இத் தொகுதி உரிய தரத்துடன் இல்லாமை	2015 திசெம்பர் மாதம் வரை இத் தொகுதியின் அனைத்து கமராக்களும் இயங்கியுள்ளதோடு 2015 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் அதன் கம்பிகளுக்கு எலிகளால் சேதம் ஏற்பட்ட காரணத்தினால் சில கமராக்கள் செயலிழந்து காணப்படுவதாக பிரதம க. அ. ./க. அ. இனால் தெரிவிக்கப்பட்டது. சேதமடைந்த மேற்படி கம்பிகளை ஒப்பந்த அடிப்படையில் இந்த ஆண்டில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பழுதுபார்ப்பதற்கு எதிர்பார்த்துள்ளதாக பிரதம க. அ. ./க. அ. இனால் தெரிவிக்கப்பட்டது
8	ரூபா 5,648,048 செலவிடப்பட்டு "2600 ஆம் சம்புத்தத்வ ஜெயந்தி" எனப்படும் நூலின் 1622 பிரதிகள் அச்சிடப்பட்டுள்ள அதேவேளை பிரதியொன்றின் விலை ரூபா 5000 ஆக உள்ள இந் நூலின் பெரும் எண்ணிக்கையிலான பிரதிகள் விற்பனையாகாமல் இருத்தல்	இந்த நூலை சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்தின் பேரில் ஐக்கிய நாடுகள் சபையின் வெசாக் பண்டிகையில் கலந்து கொள்ளும் வெளிநாட்டு விருந்தினர் களுக்கு அன்பளிப்பு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென பிரதம க. அ. ./க. அ. இனால் தெரிவிக்கப்பட்டது அத்தோடு இந் நூல்களை சந்தைப்படுத்து வதற்கு முறையான வேத்திட்டமொன்றை செயற்படுத்துமாறு குழுவினால் பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்தரவிடப்பட்டது.
9	இப் பணிக்கு 2011 ஆம் ஆண்டில் ரூபா 15 மில்லியன் செலவிடப்பட்டு ரூபா 7,500/- பெறுமதியான 2000 நாணயக் குற்றிகள் உருவாக்கப்பட்டதோடு ஏற்புடைய செலவை அமைச்சு செலவின தலைப்புக்கு தண்டக் கட்டணமாக்கியதன் மூலம் இதற்கு நிதி பெறப்பட்டமை மற்றும் 2017 சனவரி மாதம் 30 ஆந் திகதியளவில் மத்திய வங்கியின் பொறுப்பில் 904 நாணயக் குற்றிகள் எஞ்சியுள்ளமை	இவற்றில் வரலாற்று சிறப்புமிக்க பெறுமதி இருப்பதாகவும் இந் நாணயங்கள் மத்திய வங்கியினால் விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் பிரதம க. அ. ./க. அ. இனால் தெரிவிக்கப்பட்டது பிரதான விஹாரைகளின் நூதனசாலைகளில் வைப்பதற்கு நாணயக் குற்றிகளை வழங்குமாறும், புத்த சாசன அமைச்சு மூலம், எஞ்சிய குற்றிகளை விநியோகிப்பதற்கு வேலைத்திட்டமொன்றை உருவாக்குமாறும் இது தொடர்பாக அறிக்கையொன்றை தயாரித்து குழுவின் அடுத்த அமர்வின் போது சமர்ப்பிக்குமாறும் பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்தரவிடப்பட்டது
10	அமைச்சின் பொறுப்பில் இருந்த KE – 3284 ஆம் இலக்க மைக்ரோ ரெக்ஸ்ரன் வகை வாகனமொன்றை அப்போதைய பிரதி அமைச்சர் தமது பதவிக் காலம் நிறைவடைந்த 2010 ஏப்பிறல் 21 ஆந் திகதியிலிருந்து முறையாக சுவீகரிக்காத	இந்த வாகனம் தொடர்பாக சுகாதாரம், போசனை மற்றும் சுதேச மருத்துவ அமைச்சுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளதோடு, அந்த வாகனத்தை மீள புத்தசாசன அமைச்சுக்கு அளிப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	நிலையில் கொண்டு சென்றுள்ளமை	அறிவிக்கப்பட்டுள்ளதென பிரதம க. அ. ./க. அ. இனால் தெரிவிக்கப்பட்டது. இரண்டு வாரங்களுக்குள் இந்த வாகனத்தை சுவீகரிக்க முடியுமென பிரதம க. அ. ./க. அ. இனால் தெரிவிக்கப்பட்டது.
11	ரூபா 22,540,288/-செலவிடப்பட்டு “சிங்கள ப்ரேத்த வஸ்துவ மற்றும் சிங்கள விமான வஸ்துவ” எனப்படும் இரண்டு நூல்களின் முறையே 1999 மற்றும் 2000 பிரதிகள் அச்சிடப்பட்டதோடு, 2016.12.31 ஆந் திகதியளவில் மேற்படி இரண்டு நூல்களினதும் 3,562 பிரதிகள் களஞ்சியத்தில் எஞ்சியிருந்ததோடு, திணைக்களத்தினால் பல்வேறு நோக்கங்கள் கருதி அச்சிடப்பட்ட நூல்களின் 21,519 பிரதிகளும் களஞ்சியத்தில் எஞ்சியுள்ளமை	நூல்களை அச்சிடுவதற்கு முன்னதாக விற்கக் கூடிய அளவை தீர்மானித்து அதனை கருத்தில் கொண்டு அச்சிட வேண்டுமென்றும் எஞ்சியுள்ள நூல்களை பாடசாலை நூலகங்கள் மற்றும் அறநெறி பாடசாலை நூலகங்களுக்கு விநியோகித்து எஞ்சியுள்ளவற்றை விற்பனை செய்வதற்கு வேலைத்திட்டமொன்றை வகுக்குமாறும் குழுவினால் பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்தரவிடப்பட்டது. அவ் வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் தொடர்பான அறிக்கையொன்றை அடுத்த கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு குழு பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்திரவிட்டது.
12	பௌத்த கலைக்களஞ்சியத்தை இயற்றும் பணி சுமார் 20 ஆண்டுகளாக மேற்கொள்ளப்படுவதோடு, அதன் இறுதி தொகுதி முழுமை பெறாதுள்ளமை	இந்த நூலின் 08 தொகுதிகள் நிறைவு செய்யப்பட்டுள்ளதாகவும் சூசிகைத் தொகுதியை இயற்றும் பணி எஞ்சியுள்ளதாகவும் கொடுப்பனவுகளை ஏற்புடைய நியமங்களுக்கு உயர்த்தி வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு அமைச்சரவை பத்திரமொன்றை சமர்ப்பிப்பதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். இப் பணியை நிறைவு செய்வதற்கு பௌத்த பிக்குமார்களை கொண்ட குழுவொன்றை அமைத்து இது தொடர்பாக அவர்களுடைய ஆலோசனைகளையும் பெற்றுக் கொள்ளுமாறு குழுவினால் பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்திரவிடப்பட்டதோடு, இந்த ஆண்டுக்குள் மேற்படி பணியை நிறைவு செய்ய முடியுமென பிரதம க. அ. ./க. அ. இனால் தெரிவிக்கப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
13	வித்தியாலங்கார பிரிவெனவின் கட்டடங்களை நிர்மாணிக்கும் பணியின் முன்னேற்றம்.	இக் கட்டட நிர்மாணப் பணிகள் சில காலங்களாக மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதன் ஆரம்ப மதிப்பீடுகள் காலங் கடந்துள்ளதால் அதன் செலவு மேற்படி மதிப்பீடுகளை விஞ்சி செல்கின்ற நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவித்த பிரதம க. அ. ./க. அ. இப் பணிக்கென 2017 ஆம் ஆண்டுக்கு 200 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் மேலும் 45 மில்லியன் ரூபாய் கோரப்பட்டுள்ளதாகவும் முழு மதிப்பீட்டுத் தொகை 1384 மில்லியன் ரூபாய் எனவும் தெரிவித்தார்.
ஊழியர் சேமலாப நிதியம் 2017 மார்ச் 24		
1	2013 ஆம் ஆண்டுக்கு பின்னர் நிதியத்தின் வருடாந்த அறிக்கைகள் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்படாமை	2014 ஆம் ஆண்டுக்கான வருடாந்த அறிக்கை தயாரிக்கப்பட்டு அமைச்சரவை அங்கீகாரத்துக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் 2015 ஆம் ஆண்டுக்கான அறிக்கை தயாரிக்கப்பட்டு வருவதாகவும், பிரதம க. அ. ./க. அ. இனால் தெரிவிக்கப்பட்டது. 2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த அறிக்கைகள் தயாரிக்கும் செயற்பாடு தொடர்பாக காலப்பகுதியுடன் கூடிய அறிக்கை 2017 ஏப்பிறல் 10 ஆந் திகதிக்கு முன்னதாக குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென குழுவினால் பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்திரவிடப்பட்டது.
2	உள்ளக கணக்காய்வு	57 பிராந்திய அலுவலகங்களை கொண்ட நிதியத்தின் உள்ளக கணக்காய்வு பிரிவின் பணியாட்டொகுதி போதுமானதாக இல்லை எனவும், அப் பணிகளுக்கு வெறும் 08 உத்தியோகத்தர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டுள்ளதை அவதானித்த குழு நிதியத்தின் உள்ளக கணக்காய்வினை வலுப்படுத்த

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		வேண்டுமெனவும் தேவையான பணியாட்டொகுதியை ஆட்சேர்ப்பு செய்யுமாறும் பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்திரவிட்டது. சுமார் 1.8 டிரிலியன் ரூபாய் அளவில் உள்ள இந் நிதியத்தின் நிதி சார்ந்த நிருவாகத்துக்கு ஏற்புடைய உள்ளக கணக்காய்வு நடவடிக்கைகளை மத்திய வங்கி தனியார் நிறுவனமொன்றின் ஊடாக மேற்கொள்வதாகவும், அதற்கு மாதாந்தம் சுமார் 06 மில்லியன் ரூபாய் செலவிடப்படுவதாகவும், நிதியம் தொடர்பான முழுப் பொறுப்பும் மத்திய வங்கி வசமுள்ளதாகவும், நிதிய முதலீட்டின் போது 93% அரசாங்க பிணைப் பத்திரங்களிலும் எஞ்சிய 7% அதற்கு வெளியிலும் முதலீடு செய்துள்ளதாகவும் மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டார். அத்தோடு நிதியத்தின் முதலீடுகள் தொடர்பாகவும் கணக்காய்வுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் தற்போதைய முதலீட்டுக் குழு தினமும் கூடுவதாகவும், நிதிச் சபையின் தீர்மானமொன்றுக்கு அமைய 2016 ஆம் ஆண்டு மே மாதம் தொடக்கம் இரண்டாம் நிலை சந்தை ஊடாக மேற்கொள்ளப்படும் முதலீடுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
3.	2016 ஆம் ஆண்டில் ஊழியர் சேமலாப நிதியம், அதிக பயன் தரக்கூடிய ஆரம்ப சந்தையில் குறைந்த அளவிலான பிணை முறிகளை கொள்வனவு செய்து குறைந்த பயன் உள்ள இரண்டாம் நிலை சந்தையில் அதிகளவிலான பிணை முறிகளை கொள்வனவு செய்ததன் மூலம் நிதியத்தின் அங்கத்தவர்களுக்கு பெறக்கூடியதாக	நிதியத்தின் முதலீடுகள் தொடர்பாக உள்ளக விசாரணையொன்று நடைபெறுவதாக மத்திய வங்கியின் ஆளுநரால் தெரிவிக்கப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியத்தில் 2016 ஆம் ஆண்டில் இடம்பெற்ற பிணை முறி கொள்வனவு தொடர்பான ஏற்புடைய விசாரணை அறிக்கையின் பிரதியொன்றை குழுவிற்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	இருந்த பெருமளவு நிதி வாய்ப்பினை இழக்கச் செய்தமை	அளிக்குமாறு மத்திய வங்கியின் ஆளுநருக்கு குழு உத்தரவிட்டது.
4	2010 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் விமானச் சேவைகள் நிறுவனமொன்றில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 500,000,000/- முதலீடு மூலமாகவும், 2010 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதியளவில் ஹோட்டல் நிறுவனமொன்றின் பங்குகளை கொள்வனவு செய்யும் பொருட்டு மேற்கொள்ளப்பட்ட ரூபா 810,321,610/- முதலீடு மூலமாகவும் புதிய ஹோட்டல் கட்டடத் தொகுதியொன்றுக்கு 2013 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,000,000,000/- முதலீடு மூலமாகவும் நிதியத்துக்கு எவ்வித அனுகூலங்களும் கிடைக்காமை மற்றும் அத் தொகை நிதிக் கூற்றுகளில் சேதம் விளைவிக்கவல்ல இழப்புகளாக கருதி பதிவழிப்புச் செய்யப்படல்.	நிதியத்தின் முதலீடுகள் தொடர்பான பூரண அதிகாரம் சட்டத்தின் மூலம் இலங்கை மத்திய வங்கியின் நிதிச் சபையிடம் அளிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் பிரகாரம் நிதியத்தின் நிருவாக நடவடிக்கைகள் தொழில் அமைச்சுக்கு அளிக்கப்பட்டுள்ளதால் அந் நடவடிக்கைகள் கூட்டாக மேற்கொள்ளப்படுவதாகவும் நிதியத்தின் நடவடிக்கைகளை மறுசீரமைப்பதற்கு தயாரிக்கப்பட்ட எண்ணக்கரு சார்ந்த அறிக்கைக்கு அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்துள்ளதாகவும், அதன் பிரகாரம் அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும் பிரதம க. அ. . தெரிவித்தார். அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்த மேற்படி அறிக்கையின் பிரதியொன்றை குழுவிற்கு வழங்குமாறு பிரதம க. அ. . இற்கு உத்தரவிடப்பட்டது. அரசாங்கத்தின் எண்ணக்கரு ஒன்றுக்கமைய சுற்றுலாத் துறையை மேம்படுத்தும் நோக்கத்தில், தேசிய விமானச் சேவைக்கும் உல்லாச ஹோட்டல்களுக்கும் நிதிச் சபையின் தீர்மானமொன்றின் பிரகாரம் இந் நிதி முதலீடு செய்யப்பட்டுள்ளதாக மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார்.
5	நிதியத்துக்கு பங்களிப்புத் தொகையாக பல்வேறு நிறுவனங்களிலிருந்து பெற்ற, பயனாளிகளின் கணக்குகளில் வரவு வைக்காமல் பொது வைப்புக் கணக்கில் 2011 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த ரூபா 346,697,934/- நிலுவைத் தொகையை துரிதமாக தீர்க்குமாறு 2013.02.06 மற்றும் 2016.02.26 ஆந் திகதிகளில் நடைபெற்ற	2015 ஆம் ஆண்டளவில் இந்த நிலுவை 325 மில்லியன் ரூபாவாக காணப்பட்ட போதிலும் இன்றளவில் அதனை 45 மில்லியன் ரூபாய் என்ற அளவுக்கு செலுத்தி தீர்க்க முடிந்துள்ளதாகவும், இது தொடர்ச்சியான உள்ளக கணக்கு செயற்பாடு என்பதால் சமகாலத்தில் செலுத்தி தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பிரதம க. அ. .

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	கூட்டங்களின்போது உத்தரவிடப்பட்ட போதிலும் ரூபா 356,422,000/- நிலுவைத் தொகை காணப்படல்.	தெரிவித்தார்.
6	2011.12.31 ஆந் திகதிக்கு, உரிமை கோரப்படாத நலவுரிமைகள் கணக்கின் நிலுவையான ரூபா 120,476,638/- மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட நலவுரிமைகள் கணக்கின் நிலுவையான ரூபா 13,160,611/- ஐ செலுத்தி தீர்ப்பதற்கு துரிதமாக வினைத்திறன் மிக்க செயன்முறையொன்றை அறிமுகப்படுத்துமாறு 2014.08.19 ஆந் திகதியன்று நடைபெற்ற குழுக் கூட்டத்தின் போது உத்தரவிடப்பட்ட போதிலும் 2015.12.31 ஆந் திகதியளவில் உரிமை கோரப்படாத நலவுரிமைகள் கணக்கின் நிலுவை ரூபா 448,909,000/- மற்றும் நிறுத்தி வைக்கப்பட்ட நலவுரிமைகள் கணக்கின் நிலுவையாக ரூபா 78,091,000/- ஆக காணப்படல்.	அந்தந்த நபர்களின் பெயர்களில் காணப்படுகின்ற சுமார் 16 மில்லியன் கணக்குகள் உள்ளதாகவும், அவற்றை செலுத்தி தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். அக் கணக்குகளில் உள்ள மொத்த நிதி எவ்வளவு என்பது தொடர்பாக குழுவினால் வினவப்பட்டதற்கு பதில் கிடைக்காத அதேவேளை, முன்னைய குழுக்களினால் வழங்கப்பட்ட உத்தரவுக்கமைய நடவடிக்கை எடுக்குமாறும், குறைந்த பட்சம் ஆண்டுக்கொரு முறையேனும் தமது கணக்கு விபரங்களை ஏற்புடைய கணக்கு உரித்துடையோருக்கு எழுத்து மூலமாக அறிவிக்கும் செயன்முறையை தயாரிக்குமாறும் தொழில் புரிவோர்கள் தொடர்பான இற்றைப்படுத்தப்பட்டதும் சீரானதுமான தகவல்களை பெற்றுக்கொள்ளும் வகையில் நடவடிக்கை எடுக்குமாறும் குழு பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்திரவிட்டது.
7	நிதியத்தின் தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டை மேம்படுத்துவதற்கு தொழில் திணைக்களமும் மத்திய வங்கியும் இணைந்து ஒரு கணினி வேலைத்திட்டமொன்றை தயாரிப்பது தொடர்பாக 2016.02.26 ஆந் திகதி நடைபெற்ற குழுக் கூட்டத்தின் உத்தரவின் பிரகாரம் அறிக்கை கிடைக்காமை	நடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளதோடு 2016.02.26 ஆந் திகதி நடைபெற்ற குழுக் கூட்ட குறிப்புகளுக்கு ஏற்புடைய பதில் அறிக்கையை 2017 ஏப்பிறல் 10 ஆந் திகதிக்கு முன்னதாக குழுவிடம் சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்திரவிடப்பட்டது.
8	நிதியத்தின் முதலீடுகளின் நிதிக் கூற்றுகளில் பாதகமான இழப்புகள் என பதிவழிப்புச் செய்யப்படல்	2015 ஆம் ஆண்டில் ரூபா 2.5 பில்லியன்களும், 2016 ஆம் ஆண்டில் ரூபா 5.2 பில்லியன்களும் அவ்வாறு கணக்குகளிலிருந்து பதிவழிப்புச் செய்யப்பட்டுள்ளதாகவும், இச்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		செயன்முறை 2015 ஆம் ஆண்டிலிருந்து பின்பற்றப்படுவதாகவும், பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். இவ்வாறு பதிவழிப்பு செய்யப்பட்டமை தொடர்பான அறிக்கையொன்றை, அதாவது முழு இழப்புகள் மற்றும் பெறுமதி குறைவின் பேரில் ஏற்பட்ட இழப்புகளாக வகைப்படுத்தலின் பிரகாரம் தயாரித்து குழுவிற்கு அனுப்புமாறு பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்திரவிடப்பட்டது. நிதியத்தின் முதலீட்டு இழப்புகள் தொடர்பாக அவதானித்த குழுவானது, இனிமேல் மேற்கொள்ளப்படும் முதலீடுகளுக்கு தீர்மானம் எடுப்பதற்கு முன்னதாக அம் முதலீடுகளின் சாத்தியக்கூறுகள் தொடர்பாக ஆய்வு செய்யுமாறும் அதன் பொருட்டு வெளிப்படைத் தன்மையுடன் கூடிய தரம்மிக்க செயன்முறையொன்றை நிறுவுமாறும் பிரதம க. அ. ./க. அ. இற்கு அறிவுறுத்தப்பட்டது.
9.	நிதியத்தின் முதலீடுகள் தொடர்பான விபரங்கள்	குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு பின்வரும் விசாரணைகளுக்கான பதில்கள் மற்றும் அறிக்கைகள் அரசாங்க கணக்கு குழுவிற்கு எப்போது வழங்க முடியும் என்பது தொடர்பான விபரங்களை குறிப்பிட்டு 2017 ஏப்பிறல் 10 ஆந் திகதிக்கு முன்னதாக ஆரம்ப அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்தரவிடப்பட்டது. ஊழியர் சேமலாப நிதியத்தின் முதலீடுகள் தொடர்பாக மத்திய வங்கியின் நிதிச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட விசாரணை அறிக்கை ஊழியர் சேமலாப நிதியத்தின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		நடவடிக்கைகளை மறுசீரமைக்கும் பொருட்டு இயற்றப்பட்ட வரைவு அறிக்கை அரசாங்க கணக்கு குழுவினால் முன்மொழியப்பட்ட, 2010 சனவரி மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் 2016 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான 07 வருட காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்தில் நிகழ்ந்துள்ள நம்பிக்கைப் பொறுப்பு பங்கு முதலீடுகள் தொடர்பாக விசாரிப்பதற்கு பின்வரும் விடயங்கள் தொடர்பான பதில் அறிக்கை பொது மக்களிடமிருந்து விலை கோரப்பட்ட நம்பிக்கைப் பொறுப்பு பங்குகள் கொள்வனவின் போதோ அல்லது விற்பனையின் போதோ ஊழியர் சேமலாப நிதியத்தினால் பின்பற்றபட்ட பிரமாணங்கள் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு செயல் நடைமுறைகள் யாவை? கொழும்பு பங்கு பரிவர்த்தனையிலும் இதர தனியார் மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனங்களின் விலை கோரப்பட்ட நம்பிக்கை பொறுப்பு பங்குகள் விற்பனையின் போதோ அல்லது கொள்வனவின் போது அங்கீகரிக்கப்பட்ட தொழிற்பாட்டு செயல் நடைமுறைகளை உருவாக்கிய நபர்/நபர்கள் யாவர்? 2010 சனவரி முதலாந் திகதியிலிருந்து 2016 திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதியில் ஊழியர் சேமலாப நிதியத்தின் சகல கொடுக்கல் வாங்கல் கட்டங்களினதும் பெறுமதிகள் யாவை? சகல ஆண்டுகளினதும் நிறைவில் சகல கொடுக்கல் வாங்கல்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		கட்டங்களின் போதும் நிதியத்துக்கு ஏற்படும் செலவு தீர்மானிக்கப்பட்டிருக்கிறதா? 10,000 இற்கும் மேற்பட்ட பங்குகளின் கொடுக்கல் வாங்கல்களை மேற்கொண்ட கொள்வனவாளர்கள்/விற்பனையாளர்கள் யாவர்? அக் கொடுக்கல் வாங்கல்களின் உண்மை பெறுமதி தீர்மானிக்கப்பட்டுள்ளதா? அக் கொள்வனவு/ விற்பனை தரகர்கள் இனங்காணப்பட்டுள்ளார்களா? இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கும் ஊழியர் சேமலாப நிதியத்துக்குமிடையே பங்குகள் கொடுக்கல் வாங்கல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா? ஆமெனில் அதன் அளவு எவ்வளவு? குறித்த காலப்பகுதியில் பங்குகள் கொடுக்கல் வாங்கல்களின் போது மேற்படி அங்கீகரிக்கப்பட்ட தொழில்பாட்டு செயல் நடைமுறைகள் மீறப்பட்ட அல்லது தட்டிக்கழிக்கப்பட்ட சந்தர்ப்பங்கள் காணப்பட்டனவா? ஊழியர் சேமலாப நிதியத்தின் பங்குகள் கொடுக்கல் வாங்கல்களை முகாமைத்துவம் செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்ட தொழில்பாட்டு செயல் நடைமுறைகள் இல்லாத பட்சத்தில் இதை ஒத்த நிதியங்களின் சீரான நடைமுறைகளுக்கு புறம்பாக செல்லும் வகையிலான கொடுக்கல் வாங்கல்கள் ஏதும் காணப்பட்டதா? ஊழியர் சேமலாப நிதியம் சார்பாக கொள்வனவு மற்றும் விற்பனை நடவடிக்கைகளை மேற்கொண்ட பங்குச் சந்தை தரகர்களை இனங்காணல் மற்றும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		மேற்படி தரகு நிறுவனம்/நிறுவனங்கள் ஊடாக மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் அளவு மற்றும் பெறுமதி எவ்வளவு? மேற்படி கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு உத்தரவிட்டமைக்கு பொறுப்பு கூற வேண்டிய ஊழியர் சேமலாப நிதியத்தின் உத்தியோகத்தர்கள் யாவர்? ஊழியர் சேமலாப நிதியத்தின் உத்தியோகத்தர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் சார்பாக பங்குகளை கொள்வனவு செய்யக்கூடிய பெறுமதி/அளவு தொடர்பாக கட்டுப்பாடுகள் காணப்பட்டனவா? அவ்வாறு கட்டுப்பாடுகள் இல்லாதிருப்பின் அது ஏன்? அவ்வாறு கட்டுப்பாடுகள் இருப்பின் அவற்றை மீறிய சந்தர்ப்பங்கள் உள்ளனவா? அக் காலப்பகுதியில் பங்குச் சந்தை விலை நிலவரத்தை கட்டுப்படுத்துவதற்கு ஊழியர் சேமலாப நிதியம் பயன்படுத்தப்பட்டதா? சிலோன் க்ரேன் எலிவேட்டர்ஸ், வலிபல் க்ரேன், சென்ரல் பினான்ஸ், கலதாரி ஹோட்டல், லைட் ஹவுஸ் ஹோட்டல், லாப்ஸ் எரிவாயு, டிமோ, ப்ரவுன்ஸ், LOLC, ஸ்ரீ லங்கா கெப்பிடல் ஹோல்டிங்ஸ், மற்றும் டி பினான்ஸ் ஆகிய நிறுவனங்களினதும் வேறு நிறுவனங்களினதும் பங்குகள் விற்பனை மற்றும் கொள்வனவு தொடர்பான அடிப்படை விபரங்கள் யாவை? ஊழியர் சேமலாப நிதியத்தினால் பங்குகள் கொடுக்கல் வாங்கல்களின் போது குறிப்பாக வணிக வங்கிகளின் பங்குகள் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பாக கொழும்பு பங்குப்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பரிவர்த்தனை/பிணையங்கள் மற்றும் செலாவணி ஆணைக்குழுவின் யாதேனும் விதி மீறப்பட்டுள்ளதா?
மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் 2017 ஏப்பிறல் 04		
1	மோட்டர் வாகன போக்குவரத்து திணைக்களத்தின் இடமாற்றங்கள் தொடர்பாக முன்னைய குழுக்களினால் வழங்கப்பட்ட சிபார்சுகள் நடைமுறைப்படுத்தப்படாமை	குறிப்பாக ஊடகங்கள் மூலமும் முன்னைய குழு அமர்வுகளின் போதும் வெளிக்கொணரப்பட்ட விடயங்களின் பிரகாரம், கடிதக் கோப்புகள் காணாமல் போதல், வாகனங்களை போலியாக பதிவு செய்தல் உள்ளிட்ட பல்வேறு ஊழல், மோசடிகள் காரணமாக அரச வருமானத்துக்கு குறிப்பிடத்தக்க இழப்புகள் ஏற்படுவதாக வெளிக்கொணரப்பட்டதோடு, இத் திணைக்களம் தொடர்பாக மக்கள் மத்தியில் உள்ள மனப்பாங்கு மிகவும் மோசமானதாகவே உள்ளமை குழுவினால் வலியுறுத்தப்பட்டது. இந் நிலைமை ஏற்பட பிரதான காரணம், இத் திணைக்களத்தில் மிக நீண்ட காலமாக இடமாற்றங்களின்றி தொடர்ச்சியாக சேவையாற்றுகின்ற திணைக்கள மற்றும் ஒருங்கிணைந்த உத்தியோக்கத்தர்கள் உள்ளமையே என தெளிவாக தெரிவதால், 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சேவைக்காலத்தை கொண்ட சகல உத்தியோகத்தர்களுக்கும் வெளி இடங்களுக்கு இடமாற்றங்கள் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென குழுவினால் பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்தரவிடப்பட்டது. தேவையேற்படின் இது தொடர்பாக விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		அறிவுறுத்தி, அமைச்சரவை அங்கீகாரத்துடன் மேற்படி இடமாற்றங்களை நடைமுறைப்படுத்துமாறும், மீண்டும் இத் திணைக்களத்தை குழுவிற்கு முன்னால் அழைக்கும் போது இச் சகல இடமாற்றங்களையும் மேற்கொண்டு அது தொடர்பான அறிக்கையை சமர்ப்பிக்குமாறும் பிரதம க. அ. ./க. அ. இற்கு உத்தரவிடப்பட்டது
2	2008 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இ – மோட்டரின் கருத்திட்டத்தினதும் கணினிமயமாக்கப்பட்ட சாரதி உரிமங்களை வழங்கும் புதிய செயன்முறையினதும் தற்போதைய நிலைமை மற்றும் இலங்கை சுங்கத் திணைக்களத்துடன் இணைந்ததாக மேற்கொள்ளப்படுகின்ற வலையமைப்புடன் கூடிய தகவல் பரிமாற்றல் செயன்முறை	2009 ஆம் ஆண்டு புதிய ஒரு கருத்திட்டமாக மின்-மோட்டரிங் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டாலும், பல காரணங்களினால் அதனை செயன்முறை ரீதியில் நடைமுறைப்படுத்த முடியவில்லை எனவும், 2016 ஏப்ரல் மாதம் இது புதிய கொள்வனவு வேலைத்திட்டத்தின் கீழ் ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும், 2018 இறுதிப் பகுதியில் இந்தக் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த இயலும் எனவும் பி.க.அ. / க.அ. குறிப்பிட்டார். இந்தப் புதிய கருத்திட்டம் பற்றி இலங்கை சுங்கத்திற்கு எந்தவிதமான அறிவும் இல்லை என குழு முன்னிலையில் தெரிய வந்ததால், இந்தப் புதிய மின்-மோட்டரிங் கருத்திட்டத்தை அறிமுகப்படுத்த முன்னர் அந்தக் கருத்திட்டத்துடன் நேரடியாக சம்பந்தப்படுகின்ற அதாவது நிதி அமைச்சு, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், இலங்கை சுங்கத் திணைக்களம், ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், மாகாண சபைகள் என்பன போன்ற சகல நிறுவனங்களுடனும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		இணைந்து ஒரு இயக்கச்செயற்பாட்டுக் குழுவைத் தாபித்து உரிய சகல பிரச்சினைகளையும் தீர்த்துக் கொள்ளுமாறு குழுவினால் பி.க.அ. / க.அ. இற்கு அறிவுரை வழங்கப்பட்டது. இந்த உத்தேச மின்-மோட்டரிங் கருத்திட்டத்தின் ஆரம்பம் செயற்படுத்தும் திகதி வரையான நிகழ்ச்சித்திட்டத்தின் கால வரையறை அடங்கிய ஒரு அறிக்கையை ஒரு மாத காலத்திற்கு குழுவுக்கு பெற்றுத் தருமாறு பி.க.அ. / க.அ. இற்கு கட்டளையிடப்பட்டது. மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தில் நிகழ்ந்துள்ள முறைகேடுகளையும் மோசடிகளையும் தவிர்த்துக் கொண்டு பயனுள்ள சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு கட்டாயமாக நவீன தொழில்நுட்ப முறையியல் பின்பற்றப்படுதல் வேண்டும் எனவும், நவீன தொழில்நுட்பப் பிரயோகம் தொடர்பில் திணைக்களத்தினால் இது வரை பின்பற்ற நடவடிக்கைகள் மற்றும் அதன் நிமித்தம் நுகரப்பட்ட காலம், நிதிகள் என்பன தொடர்பில் திருப்திகொள்ள முடியாது எனவும் குழு சுட்டிக்காட்டியது.
3	முழுமையாக கணினி மயப்படுத்தப்பட்ட முறையியலுக்கு அமைய சாரதி அனுமதிப் பத்திரம் வழங்கும் செயன்முறை 2008இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தபோதிலும், தற்போது செயற்படுவதில்லை என்பது அவதானிக்கப்பட்டது.	குறிப்பிட்ட புதிய செயன்முறை குறித்து பிரதம க. அ. ./க. அ. மற்றும் மெட்ரோபொலிட்டன் (தனியார்) நிறுவன முகவரினால் விளக்கமளிக்கப்பட்டதுடன், 2008ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இந்த வேலைத்திட்டத்தை 2018இல் முழுமையாகப் பூர்த்தி செய்து நடைமுறைப்படுத்த முடியுமென தெரிவிக்கப்பட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		வேரஹர அலுவலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ள இப்புதிய வேலைத்திட்டத்தை 25 மாவட்டங்களிலும் செயற்படுத்துமாறும், சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கு குறைகாண் புள்ளி வழங்கும் செயன்முறை தொடர்பில் இலங்கை பொலிஸாருடன் தொடர்புகொண்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும், சாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்கும் புதிய வேலைத்திட்டம் பற்றிய விபரமான அறிக்கையினை இரண்டு வார காலப்பகுதிக்குள் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும் பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது.
உணவு ஆணையாளர் திணைக்களம் **2017 ஏப்பிறல் 05**		
1.	16வது சார்க் மாநாட்டின் கொழும்பு சமவாயத்துக்கு ஏற்ப 8000 மெற்றிக் தொன் அரிசி ஒதுக்கத்தை பேணுதல், 2008.08.27ஆம் திகதிய அமைச்சரவை தீர்மானத்துக்கு அமைய 100,000 மெற்றிக் தொன் அரிசியை பாதுகாப்பு ஒதுக்கமாக பேணுதல் மற்றும் சந்தையில் அரிசியின் கிடைப்பனவை உறுதிப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்கையில் திணைக்களம் அடைந்துள்ள முன்னேற்றம்.	2008.80.27 ஆந் திகதி 100,000 மெற்றிக் தொன் அரிசியை பாதுகாப்பு ஒதுக்கீடாக பேணுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ள போதிலும் இதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் திறைசேரியிலிருந்து கிடைக்கப்பெறாமையால் கூட்டிணைந்த திட்டத்துக்கு ஏற்ப செயற்படுவது சிரமமாக உள்ளதாகவும் சதொச நிறுவனத்தின் ஊடாக இந்தியாவிலிருந்து 100,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்வதற்கு தயாராக உள்ளதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். திணைக்களத்தின் பணியை நிறைவேற்றும் வகையில்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		கொள்கைரீதியான தீர்மானமொன்றை மேற்கொள்வதற்கான நிருபமொன்றைத் தயார் செய்து அமைச்சரவைக்கு முன்வைக்குமாறு குழுவானது பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை விடுத்தது.
2.	தான்யகம வீடமைப்புத் திட்டத்தின் 366 வீடுகள் மற்றும் அந்த நிலத்தின் உரிமையை உணவு ஆணையாளர் சுவீகரிக்காமை.	2015ஆம் ஆண்டில் காணி ஆணையாளரினால் இந்த வீடமைப்புத் திட்டத்தின் உரிமையை உணவு ஆணையாளருக்கு கையளிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், அத்துமீறிய குடியிருப்பாளர்களை இந்த இடத்திலிருந்து அகற்றுவதற்காக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது. முத்தரப்பு ஒப்பந்தத்தின் வாயிலாக இந்த வீடுகளை அரசாங்க ஊழியர்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதம க. அ. ./க. அ. குழுவுக்கு தெரிவித்தார்.
3.	களஞ்சியப் பொறுப்பாளர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய நிலுவை கடன்பட்டோர் மீதியான ரூபா 46,313,442/= பணத்தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள செயன்முறைகளிலான முன்னேற்றம்	இக்கடன்பட்டோரில் ஓய்வுபெற்றவர்கள் 102 பேர், உயிரிழந்தவர்கள் 31 பேர், இடமாற்றம் பெற்றவர்கள் 42 பேர் மற்றும் பணி இடைநிறுத்தப்பட்டவர்கள் 53பேர் காணப்படுவதுடன், ஓய்வுபெற்றவர்களிடமிருந்து 2 மில்லியன் ரூபா பணம் தற்போது அறவிடப்பட்டுள்ளதுடன், மீதிப் பணத்தை அவர்களது ஓய்வுப் பணிக்கொடையிலிருந்து அறவிடுவதாகவும், தரவுகள் கண்டறியப்படாத 53பேரினது மீதிக்கடனை பதிவழிப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		ஒரு குழுவின் ஊடாக விடயங்களை ஆராய்ந்தறிந்து நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கு அல்லது பதிவழிப்புச் செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளுமாறு குழுவானது பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை விடுத்தது.
4	2012ஆம் ஆண்டில் கட்டப்பட்ட விஞ்ஞானரீதியான களஞ்சியங்கள் பற்றிய அறிக்கை தயார் செய்யப்பட்டு அமைச்சரவைக்கு முன்வைக்கப்படாமை.	விஞ்ஞானரீதியான களஞ்சியங்கள் தொடர்பில் தயார் செய்யப்பட்ட அறிக்கையொன்று அப்போது காணப்பட்ட உணவு மற்றும் உணவுப் பாதுகாப்பு பற்றிய அமைச்சுக்கு வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட பிரதம க. அ. /க. அ. , முற்பணக் கணக்குகளில் காணப்படும் சொத்துக்கள் தற்போது பயன்படுத்தப்படுவதனால் அவற்றை ஒழிப்புச் செய்தல் சாத்தியமில்லை என்பதால், சொத்து மற்றும் ஆதனம் பற்றிய தரவுகள் சேகரிக்கப்பட்டு ஆவணப்படுத்தப்படுவதாகவும் தெரிவித்தார். நாடு பூராகவும் காணப்படும் திணைக்களத்துக்குச் சொந்தமான சொத்து மற்றும் ஆதனம் பற்றிய தரவுகளை மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர்கள் வாயிலாகப் பெற்றுக்கொண்டு சொத்து மற்றும் பொறுப்புக்கள் பற்றிய பட்டியலைத் தயார் செய்து யூலை 31ஆந் திகதிக்கு முன்னதாக குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுக்கப்பட்டது.
5.	2008ஆம் ஆண்டு கூட்டுறவு மற்றும் உள்ளக வர்த்தக அமைச்சினால் மியன்மார் அரசாங்கத்திடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 1,603,450 மெற்றிக் தொன்	குறிப்பிட்ட அரிசியானது 03 கூட்டுறவு நுகர்வோர் சங்கங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன், 2 சங்கங்கள் உரிய முறையில் பணம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	அரிசியை கடன் அடிப்படையில் 03 நிறுவனங்களுக்கு விற்பனை செய்தமையால் கிடைக்கப்பெற வேண்டிய ரூ.1,942,300/= பணத்தொகையை 2017.03.20 ஆந் திகதி வரையிலும் அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை.	செலுத்தியுள்ளபோதிலும் கோப்பெட் நிறுவனத்திடமிருந்து கிடைக்கப்பெற வேண்டிய நிலுவைப் பணத்தை அறவிடுவதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
6.	2012ஆம் ஆண்டில் வேயன்கொடை களஞ்சியத்தின் நெல் அரிசியாக்குவதற்காக இரண்டு நெல் ஆலை உரிமையாளர்களுக்கு பெறுகைகள் செயன்முறைக்கு புறம்பாக வழங்கப்பட்டமையும் மீளளிக்கப்படாத அரிசிக்காக ரூ.7,190,700/= அறவிடப்படாமையும்.	இரண்டு நெல் ஆலை உரிமையாளர்களுக்கு நெல் வழங்கப்பட்டிருந்ததுடன், பொலனறுவை மாவட்டத்தைப் பாதித்த வெள்ள அனர்த்தம் காரணமாக அரிசியை நிரம்பல் செய்ய முடியாதென எழுத்துமூலமாக அறிவிக்கப்பட்டிருந்தது. உரிய காலப்பகுதியில் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்குத் தவறியமைக்காக ஒரு நபருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளதுடன், மற்றைய நபருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். இது தொடர்பிலான விபரமான அறிக்கையை முன்வைக்குமாறு பணிப்புரை விடுத்த குழுவானது அமுலில் உள்ள காலப்பகுதியினுள் செயலாற்றுகை முறியை இடைநிறுத்தி ஒப்பந்தத்தின் பிரகாரம் செயற்படுவது நிறுவனத்தின் கணக்காளரின் பொறுப்பு எனத் தெரிவிக்கப்பட்டது.
7.	2015.12.31ஆந் திகதியில் ஒரு வருடம் முதல் பத்து வருட காலப்பகுதியை விஞ்சிய ரூ.3,217,808/= நிலுவைக் கடனை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள்	பெரும்பாலான நிலுவைக் கடன்கள் ரூ.10,000/=இற்கு குறைந்தவை எனவும், ஓய்வுபெற்ற 83பேரிடம் அறவிடப்பட வேண்டிய கடனை அவர்களது ஓய்வுப் பணிக்கொடையிலிருந்து அறவிடுவதற்கும், இடம்பெற்றுள்ள

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		கணக்கீட்டுத் தவறுகளை நிவர்த்தி செய்வதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதாக பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். இது பற்றிய அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு பணிப்புரை விடுத்த குழுவானது பெரும்பாலான நிறுவனங்களில் பொதுவான ஒரு பிரச்சினையாகக் காணப்படும் இத்தகைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக திறைசேரியின் தலையீட்டில் கொள்கைரீதியான செயன்முறையொன்றை மேற்கொள்வதிலான தேவைப்பாட்டை வலுவாக வலியுறுத்தினார்.
8.	உணவகத்தை குத்தகைக்கு விடுவதன் மூலம் திணைக்களத்துக்கு கிடைக்க வேண்டிய ரூ.862,354/= நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாமை தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.	நலன்புரிச் சங்கத்துக்கு ரூ.2000/= மாதாந்த வாடகைக்கு வழங்கப்பட்டிருந்த இந்த உணவகத்தின் மாதாந்த வாடகையை அண்மையில் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டுக்குப் பின்னர், ரூ.40000/=ஆக அதிகரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமையால், குறிப்பிட்ட சங்கமானது அதிலிருந்து விலகிச் சென்றிருப்பதாகவும், பெறுகைகள் வழிகாட்டிக்கு அமைய அதனை பிறிதொருவருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதுடன், நிலுவைப் பணத்தை அறவிடுவதற்கான சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார்.
9.	அரச மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு வாடகை அடிப்படையில் வழங்கிய களஞ்சியங்களிலிருந்து 2017.03.20 ஆந் திகதி ரூ.71,735,722/= அறவிடப்படவேண்டி உள்ளமை, வாடகை செலுத்தாத 25 களஞ்சியசாலைகளிலிருந்து	அரசாங்கத்தின் தேவைகளுக்கு களஞ்சிய வசதிகளை வழங்குதல், அவசர நிலமைகளின்போது பன்பாட்டுக்கு உகந்த வித்தில் தயார் செய்தல், உணவுப் பொருட்களின் நீண்டகால பாதுகாப்பினைக் கருத்தில் கொண்டு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	ரூ.23,132,890/= நிலுவைப் பணம் அறவிடப்படாமை மற்றும் நவீனமயப்படுத்தப்பட்ட களஞ்சியங்கள் முறையாக பயன்படுத்தப்படாமை.	காணப்படும் களஞ்சியங்களை விஞ்ஞானரீதியாக நவீனமயப்படுத்துவதற்காக 2016 இல் ஒதுக்கிய 214 மில்லியன் ரூபாயில் 50 மில்லியன் ரூபா கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், மீதிப் பணத்தின் மூலம் திணைக்களத்துக்குச் சொந்தமான சகல களஞ்சியசாலைகளையும் நவீனமயப்படுத்துவது பிரதான நோக்கம் என்பதையும் தெரிவித்த பிரதம க. அ. ./க. அ. உத்தேச 100,000 மெற்றிக் தொன் அரிசி நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துகையில் இந்த களஞ்சியசாலையைப் பயன்படுத்த முடியுமெனவும் வலியுறுத்தினார். திணைக்களத்துக்குச் சொந்தமான களஞ்சியசாலைகள் அமைந்துள்ள இடங்கள் குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருப்பின், குறிப்பிட்ட நபர்கள்கள் பற்றிய விபரம், குத்தகை காலம், வாடகை செலுத்தப்படாதிருப்பின், எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் உள்ளிட்ட அறிக்கையை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறும், கொள்கைரீதியான தீர்மானமொன்றை மேற்கொள்ளக்கூடியவாறு அதன் பிரதியை கௌரவ அமைச்சரது கவனத்துக்குக் கொண்டுவருமாறும் குழுவானது பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை விடுத்தது.
கிழக்கு மாகாண சபை **2017 ஏப்பிறல் 05**		
1.	ஆளுநரின் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் கணக்குகள் 2013ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டு வரையில் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு	இந்த நிதியமானது ஆளுநரின் நிருப மொன்றின் மூலம் தாபிக்கப்பட்டுள்ள துடன், குறிப்பிட்ட நிருபத்தின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	சமர்ப்பிக்கப்படாமை.	கணக்குகள் முன்வைக்கப்பட்டபோதிலும், பின்னர் ஆளுநரின் பிறிதொரு நிருபத்தின் மூலம், குறிப்பிட்ட நிதியத்தில் பொதுக்களின் பணம் காணப் படாமையால், கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடத்தில் கணக்குகளை சமர்ப்பிக்கத் தேவையில்லையென நிறை வேற்றப்பட்டுள்ளதாக பிரதம க. அ. /க. அ. தெரிவித்தார். 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின 23(1) வது பிரிவின் பிரகாரம் மாகாண சபைகளின் அனைத்து கணக்காய்வுகளும் கணக்காய் வாளர் தலைமை அதிபதியால் மேற்கொள்ளப்பட வேண்டும் என குழு கருதியது. தற்போதைய ஆளுநருடன் பேச்சுவார்த்தை நடத்தி, ஆளுநரது நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் கணக்காய்வு தொடர்பில் தகுந்த நடவடிக்கை மேற்கொண்டு குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழுவானது பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை விடுத்தது.
2.	கிழக்கு மாகாண முன்பள்ளி கல்விப் பணியகத்தின் 2013, 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளுக்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வுகளுக்காக கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கையளிக்கப்படாமை.	குறிப்பிட்ட நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமையதிபதி யிடத்தில் கையளிக்கப்பட வில்லையாயின், அவற்றை ஒப்படைத்து விட்டு அது தொடர்பிலான அறிக்கையை குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. மேலும், அனைத்து நிறுவனங்களும் கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு கணக்குகள் / நிதிக் கூற்றுகளை சமர்ப்பித்துள்ளனவா/

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		சமர்ப்பிக்கவில்லையா என்ற விடயத்தை கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவில் கலந்தாலோசிப்பதற்கும் அதனை விடயக் குறிப்புகளில் உள்ளடக்குவதற்கும் குழுவானது பணிப்புரை விடுத்தது.
3.	மாகாண சபைக்குச் சொந்தமான இரண்டு அமைச்சுகள் 6 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் 03 திணைக்களங்கள் 16 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் இரண்டு உள்ளூராட்சி நிறுவனங்கள் 02 கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் விடையளிக்காமை.	குறித்த கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பில் பரிசீலனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாகவும், அவை நிறைவு செய்யப்பட்டதன் பின்னர் அது தொடர்பில் விடையளிக்க முடியுமெனவும் பிரதம க. அ. . தெரிவித்தார்.
4.	உள்ளக கணக்காய்வுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட விடையளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்	விடையளிக்கப்படாத 516 கணக்காய்வு ஐயவினாக்கள் காணப்படுவதை அவதானித்த குழுவானது அவற்றுக்கு விரைவில் விடையளிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதம க. அ. . இற்கு பணிப்புரை விடுத்தார்.
5.	2016 ஆம் ஆண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக் கூட்டங்கள் எதனையும் நடத்தாத நிறுவனங்களின் எண்ணிக்கை 10 ஆகக் காணப்படுதல்.	குறிப்பிட்ட 10 நிறுவனங்களில் 04 மாத்திரம் 2016இல் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் ஒன்றையேனும் நடத்தவில்லையெனவும், எஞ்சிய ஏனைய நிறுவனங்கள் அனைத்தும் பிரதி தலைமை செயலகங்களின் கூட்டாகக் காணப்படுவதாகவும், அந்த நிறுவனங்கள் அனைத்தும் ஒன்றாக இக்கூட்டங்களை நடத்துவதாகவும் பிரதம க. அ. . தெரிவித்தார். இவ்வாறு கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		நடத்தாமை, மாகாண சபையின் நிதி முகாமைத்துவம் தொடர்பில் திருப்தியின்மையை ஏற்படுத்துவதை வலியுறுத்திய குழுவானது, எதிர்காலத்தில் உரிய வகையில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பிரதம க. அ. . இற்கு பணிப்புரை விடுத்தது.
6.	2016 இல் மாகாண சபைக்குச் சொந்தமான 10 நிறுவனங்கள் செயலாற்றுகைத் திட்டங்களைத் தயார் செய்யாமை மற்றும் 09 நிறுவனங்கள் பெறுகைகள் திட்டத்தை தயார் செய்யாமை.	இத்தகைய திருப்தியற்ற நிலமைகளை எதிர்காலத்தில் திருத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு குழுவானது பிரதம க. அ. . இற்கு பணிப்புரை விடுத்தது.
7.	2008இல் மட்டக்களப்பில் வேலைவாய்ப்பற்ற 250 இளைஞர்களுக்கு கொரியன் மொழியைக் கற்பிப்பதற்கான வகுப்புகளை நடத்துவதற்காக முன்னாள் முதலமைச்சரின் செயலாளருக்கு ரூ. 2,000,000/- பணத்தொகை வழங்கப்பட்டுள்ளபோதிலும், வகுப்புகள் எதிர்பார்க்கப்பட்டவாறு நடத்தப்படாமை.	மாகாண கணக்குகள் பற்றிய குழுவில் இது தொடர்பில் கலந்துரையாடி, இது தொடர்பில் பரிசீலிப்பதற்காக நியமிக்கப்பட்டுள்ள குழுவானது இரண்டு கூட்டங்களை நடத்தியுள்ளதாகவும், இதன்போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்களுக்கு அமைவாக சில கடிதக் கோப்புகள் காணாமற்போயுள்ளதாகவும், குழு அறிக்கையை எதிர்வரும் மாதத்தினுள் சமர்ப்பிப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும், இந்த அறிக்கையின் விதப்புரைகளின் பிரகாரம் இந்த விடயம் தொடர்பில் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு எதிர்பார்ப்பதாகவும் பிரதம க. அ. . தெரிவித்தார். குறிப்பிட்ட அறிக்கையின் பிரதியை குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு குழுவானது பிரதம க. அ. . இற்கு பணிப்புரை விடுத்தது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
8.	கமத்தொழில் அமைச்சினால் ஒன்று ரூ.104,750 வீதம் 10 சூரியசக்தி விளக்குகளைப் பொருத்துவதற்காக கம்பனியொன்றுக்கு ஒப்பந்தமொன்றை வழங்கியிருந்ததுடன், மாகாண நிச்சயிக்கப்பட்ட அபிவிருத்தி வழங்கலின் கீழ் ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து 2014இல் மொத்தமாக ரூ.1,047,500 பணத்தொகை இதற்காக செலவிடப்பட்டுள்ளதாகவும், வீதி அபிவிருத்தி அமைச்சினால் ஒன்று ரூ.165,000/- வீதம் அதே வகையிலான 21 சூரியசக்தி விளக்குகளை அக்காலப்பகுதியிலேயே வழங்கி பொருத்துவதற்கு இக்கம்பனிக்கு ஒப்பந்தமொன்று வழங்கியுள்ளமையும் அவதானிக்கப்பட்டது. இந்த இரண்டு ஒப்பந்தங்களிலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் அங்கத்தவராக ஒரே உத்தியோகத்தர் செயற்படாமை.	ஒரே வகையான விளக்குகளுக்கு இரண்டு விதமாக விலை தீர்மானிக்கப்பட்டமைக்கான காரணங்கள் குறித்து தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு உத்தியோகத்தரிடமிருந்து அறிக்கையொன்றைக் கோரி, ஒரு மாத காலப்பகுதிக்குள் குழுவுக்கு சமர்ப்பிக்குமாறு குழுவானது பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்புரை விடுத்தது.
9.	மாகாண வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான எக்ஸ்கவேட்டர் இயந்திரமொன்று 2011 ஏப்பிறல் 01 முதல் நவெம்பர் 30திகதி வரையில் 569 மணித்தியாலங்கள் பயன்படுத்தப்பட்டிருந்தபோதிலும், இதற்கான ரூ.1,991,500 வாடகைப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு திணைக்களம் நடவடிக்கை மேற்கொள்ளாமை.	இது பற்றிய அறிக்கையை நீர்ப்பாசன செயலாளரிடமிருந்து கோரி கூடிய விரைவில் இந்த அறிக்கையை குழுவுக்கு அனுப்பி வைக்குமாறு பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்பரை விடுக்கப்பட்டது.
10.	கிழக்கு மாகணத்தின் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் அமைந்துள்ள சில பாடசாலைகளின் தரத்தைப் பேணும் முகமாக 2014 மற்றும் 2015ஆம் ஆண்டுகளில் கல்விப் பொதுத் தராதர சதாரண தரப் பரீட்சையில் தோற்றுவதற்கு,	எத்தகைய நிலமையிலேனும் இந்த மாணவர்களுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்காமையினால் அதிகாரிகள் அவர்களுக்கு பாரிய அநீதி இழைத்துள்ளமையை குழு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	திறமையை வெளிக்காட்டாத முறையே 88 மற்றும் 83 மாணவர்களுக்கு பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி வழங்காமை.	வலியுறுத்தியது. பரீட்சையில் தோற்றுவதற்கான அனுமதி மறுக்கப்பட்ட மாணவர்களின் பெயர் பட்டியல் மற்றும் அவர்களது தற்போதைய நிலைமை பற்றிய அறிக்கையை விரைவில் குழுவுக்கு முன்வைக்குமாறும், இந்த அறிக்கை கிடைக்கப்பெற்றதன் பின்னர் இந்த விடயம் தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக மாத்திரம் மாகாணசபையை மீண்டும் அழைப்பதாகவும் குழு வலியுறுத்தியது.
11.	விளையாட்டுத்துறைத் திணைக்களத்தின் மாகாண பணிப்பாளாரது நெருங்கிய உறவினரொருவருக்கு திருகோணமலையிருந்து கொழும்பு வரையில் பயணிப்பதற்காக வழங்கப்பட்டிருந்த திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனத்தின் ஒரு டயர் பழுதடைந்தமையால், புதிய 04 டயர்களையும் பொருத்துவதற்காக, புதிய டயர்களைக் கொள்வனவு செய்வதற்காக குறிப்பிட்ட நபர் கொழும்பில் அமைந்துள்ள நிறுவனமொன்றிற்கு திணைக்களத்தினால் வழங்கப்பட்ட ரூ. 137,000 காசோலையை வழங்கியிருந்தார். எவ்வாறாயினும், மாகாண பணிப்பாளரது கட்டளைக்கமைய அக்காசோலையில் செலுத்துபவரின் பெயர் மாற்றப்பட்டு திருகோணமலை வங்கியொன்றில் பணமாக மாற்றப்பட்டிருந்தது.	இது தொடர்பில் பரிசீலனை செய்து குழுவுக்கு அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு குழுவானது பிரதம க. அ. ./க. அ. இற்கு பணிப்பரை விடுத்தது.
பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு **2017 மே 03**		

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
1.	அமைச்சில் காணப்படும் 166 மொத்தப் பதவி வெற்றிடங்களில் 123பொது முகாமைத்துவ உதவியாளர் சேவை, அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் இடமாற்றல்களாகக் காணப்படுதல்.	எதிர்காலத்தில் கனிணி முறைமையைத் தாபித்து கனினி நிகழ்சித்திட்டத்தை பயன்படுத்தி அரசாங்க உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் 5வருடங்களுக்கு ஒரு தடவை இடமாற்றல்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக பிரதம க. அ. ./க. அ. தெரிவித்தார். இதனை ஒரு கொள்கையாக மாத்திரம் வரையறுக்காது, ஒழுங்குவிதியாக்குவது உகந்ததென்பது குழுவின் கருத்தாக அமைந்தது. 2009ஆம் ஆண்டு 1589/30 ஆம் இலக்க பகிரங்க சேவைகள் ஆணைக்குழுவின் செயல் நடைமுறை விதி 1 தொகுதியின் XVIII அத்தியாயத்தில் 195 மற்றும் 203வது பிரிவுகளுக்கு அமைவாக நாடளாவிய மற்றும் ஒருங்கிணைந்த சேவைகளின் வருடாந்த இடமாற்றல்கள் அமுல்படுத்தப்படுவதில்லையென அவதானிக்கப்பட்டமையால், இதன் மூலம் அரசாங்க சேவை தரமிழப்பதனால், இந்த இடமாற்றல்களை விரைவாக நடைமுறைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை குழு வலியுறுத்தியது.
2.	2016.12.31 மூலதன மொத்த மீதி ரூ.37,433,648 இல் ரூ.25,000,000, JICA வின் "முதல்வரிசை உத்தியோகத்தர்களை பயிற்றுவிக்கும் கருத்திட்டத்திற்காக" ஒதுக்கப்பட்ட நிதியாகுமென்பதுடன், இது 100% மூலதன மீதியாகக் காணப்படுதல்.	இது திறைசேரியின் ஊடாக நிதி ஏற்பாடுகள் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நன்கொடைக் கருத்திட்டம் எனவும், ஆரம்பத்தில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் கீழும் பின்னர் உள்ளூராட்சி அமைச்சின் கீழும் செயற்பட்டதுடன், தற்போது இலங்கை அபிவிருத்தி நிருவாக நிறுவனத்தினால் இதற்காக நிதி ஒதுக்கப்படுவதாகவும், பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சானது இதன் பொறுப்புக் கூறும் செயற்பாட்டை மாத்திரம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		மேற்கொள்வதாகவும், எவ்வாறாயினும், பெரும்பாலும் வருட இறுதியில் இந்த நிதி ஏற்பாடுகள் கிடைக்கப்பெறுவது இந்த மீதிகளுக்கு காரணமாக அமைவதாகவும் பிரதம க. அ. . தெரிவித்தார். இந்த நிதி ஏற்பாடுகள் பயன்படுத்தப்படாமையால், பொறுப்புக்கூறுதல் மற்றும் அரசாங்க சேவையின் வினைத்திறன் பற்றிய சிக்கல் தோன்றுவதாக குழு வலியுறுத்தியது. பயிற்சிக்காக நீண்டகால பிரதான திட்டமொன்று காணப்படுதல் வேண்டுமெனவும், சிரேஷ்ட உத்தியோகத்தர்களுக்கு சர்வதேச பயிற்சியை வழங்குவது மிகவும் அவசியமானதெனவும் குழு குறிப்பிட்டதுடன், SLIDA நிறுவனத்துடன் இணைந்து பயிற்சிகள் திட்டமிடப்பட்டுள்ளதாக பிரதம க. அ. . தெரிவித்தார். பயிற்சி வேலைத்திட்டங்களை ஆயத்தம் செய்ததன் பின்னர் மாத்திரம் அதற்கான நிதி ஒதுக்கீட்டை மேற்கொள்வது உகந்ததென குழு வலியுறுத்தியது.
3.	2016/12/31 ஆம் திகதியில் பொது நிர்வாக அமைச்சின் ரூ.55,179,844 நிலுவை வாடகை அறவிடப்பட வேண்டியதுடன் காணி சீர்த்திருத்த ஆணைக்குழுவிடம் அறவிடப்பட வேண்டிய நிலுவைத் தொகை ரூ. 3,925,617 என குறிப்பிடப்பட்டுள்ளதுடன், ஆணைக்குழுவின் நிதிக் கூற்றுக்களுக்கு அமைவாக செலுத்த வேண்டிய நிலைவை ரூ.7,474,530 என குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நிறுவனம் கட்டிடத்திலிருந்து விலகியுள்ளதால் 2016 ஒக்டோபர் மாதத்தின் பின்னர் வாடகை	தற்சமயம் இவ்வாறு வாடகை செலுத்த வேண்டிய உத்தியோகத்தர்கள்/ அமைச்சர்களின் பெயர் பட்டியலொன்றை பெற்றுக்கொடுக்குமாறு குழுவினால் பிரதம க. அ. ./க. அ. உத்தரவிடப்பட்டுள்ளது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	அறவிடப்படாமை. அத்துடன் 59 பாராளுமன்ற அமைச்சர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகையான ரூ.3,261,617 தொகை 2015 ஆம் ஆண்டு தொடக்கம் அறவிடப்படாமை மற்றும் 2012 ஆண்டு வரை 15 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய வீட்டு வாடகையான ரூ.7,261,713 தொகை 2016 ஆம் ஆண்டு வரை அறவிடப்படாமை மற்றும் இது பற்றி சட்ட நடவடிக்கை எடுக்கப்படாமை.	
4.	மாகாண சபைகளுக்கும் மத்திய அரசாங்கத்திற்கும் இடையே இணைந்த சேவை உத்தியோகத்தர்களின் இடமாற்றம்.	இதற்காக செயற்றிறனான நிகழ்ச்சித்திட்டங்கள் காணப்பட வேண்டியதுடன் இந்நிகழ்ச்சித்திட்டங்கள் பற்றி மற்றும் ஒரே இடத்தில் 5 ஆண்டுகள் கடந்த உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் 2017 முடிவடையும் நிலையில் வேறு இடங்களுக்கு இடமாற்றம் பெறும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை மற்றும் பெயர் வாரியான அறிக்கையொன்றை குழுவிற்கு பெற்றுக் கொடுக்குமாறு பிரதம க. அ. . க்கு உத்தரவிடப்பட்டுள்ளதுடன் இவ்விடமாற்றங்கைள 2017 ஆகஸ்ட் மாதமளவில் தீர்மானித்து முடிவுறுத்துமாறு பிரதம க. அ. .க்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
ஓய்வூதிய திணைக்களம் 2017 மே 03		
1.	இ-ஓய்வூதிய கருத்திட்டத்திற்கென சம்பளம், ஊதியம் மற்றும் பயிற்சி செலவினம் தவிர ரூ. 182,223,229/- தொகை செலவிடப்பட்டமை மற்றும் 2013.1.01 திகதி தொடக்கம் கைவிடப்பட்டிருந்த மேற்படி	இது பற்றி கலந்துரையாடுவதற்கு குழு முன்னிலையில் அழைக்கப்பட வேண்டிய பொறுப்பான உத்தியோகத்திர்களின் பெயர் பட்டியலை குழுவிற்கு பெற்றுக்கொடுக்குமாறு பிரதம க. அ. .க்கு குழு உத்தரவிட்டுள்ளது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	கருத்திட்டம் பற்றி தோன்றிய பிரச்சினைகளை ICTA நிறுவனம் தீர்த்த போதிலும் திணைக்களங்களில் தோன்றிய பிரச்சினைகளை தீர்த்து மேற்படி கருத்திட்டத்தை நடத்துவதற்கு ஆர்வமில்லையென ICTA நிறுவனம் அறிவித்தமை, ஒப்பந்தத்தின் படி E–wis நிறுவனம் செயற்படாத போதிலும் இவர்களுக்கு எதிராக சட்ட செயன்முறைகள் இதுவரை எடுக்கப்படாமை மற்றும் இற்றையளவில் ஒப்பந்தத்தை இரத்தாக்கல் மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் ICTA நிறுவனம் அறிவித்துள்ளது.	
2.	2017.02.28 திகதியளவில் வங்கி முறை ஊடாக (SLIP) மாதாந்தம் ஓய்வூதியத்தை ஓய்வுபெற்றவரின் வங்கி கணக்கிற்கு வைப்புச் செய்யப்படாமல் மறுக்கப்பட்டு ஓய்வூதிய திணைக்களத்திற்கு திரும்ப அனுப்பப்பட்ட ஓய்வூதியத்தின் எண்ணிக்கை 1463 என்பதுடன் அதன் பெறுமதி ரூ. 53,392,514 என்பதும் புலனாகியது.	இதன் கண்காணிப்பு நடவடிக்கைகள் மற்றும் உரிய முறையியல் பற்றி பிரதம க. அ. /க. அ. இனால் மேற்கொள்ளப்பட்ட விளக்கமளிப்பு பற்றி திருப்தியடைய முடியாதென்பதால், இந்த SLIP Return பிரச்சினை பற்றி 2017 ஜனவரி தொடக்கம் பெப்ரவரி வரையான காலங்களில் அறிவிக்கப்பட்ட திருப்பி அனுப்புதல் எண்ணிக்கை மற்றும் இது பற்றி மேற்கொள்ளப்பட்ட செயன் முறைகள் பற்றிய அறிக்கையொன்றை பெற்றுக்கொடுக்குமாறு குழு உத்தர விட்டுள்ளது. ஓய்வூதிய திணைக்களம் தம் சேவையை வழங்குவதற்கு தகவல் தொழில்நுட்பத்தை பயன்படுத்த வேண்டிய முக்கியத்துவத்தை வலியுறுத்திய குழு இதற்கென 2 மாதத்திறக்கு ஒரு தடவை இதன் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கு குழு முன்னிலையில் வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கப்பட்டது.
3.	2016 ஆம் ஆண்டில் டிசம்பர் 31 திகதியளவில் ஓய்வூதியம் மிகையாக	இது பற்றி ஒழுக்காற்று வழிமுறையொன்றை மேற்கொள்வதாக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	செலுத்தப்பட்ட மீதி ரூ. 320,250,815 ஆக காணப்பட்டதோடு இம்மிகைச் செலுத்து கைகளை மீண்டும் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட போதிலும், இத்தவறுகளை புரிந்த உத்தியோகத்தர்களுக்கு நிதிப் பிரமானம் 119 மற்றும் 156 இன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை.	க. அ. கூறினார்.
4.	2014.04.09 ஆம் திகதியளவில், 2013 மற்றும் 2014 ஆண்டுகளுக்கு செலுத்த வேண்டிய 17,029 ஓய்வூதிய பணிக்கொடை விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ள போதிலும் இவை தொடர்பில் முறையான வகையில் தகவலை பெற்றுக்கொள்ளாது வங்கி முறையை (SLIP) பயன்படுத்தி மேற்படி பணிக்கொடைகளை ஓய்வூதியக்காரர்களின் வங்கிக் கணக்குகளுக்கு நேரடியாக வைப்பிலிடுதல் மற்றும் இவ்விண்ணப்பங்கள் 17,029 இல் உள்ள மாகாண சபை உத்தியோகத்தர்களிடமிருந்து அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய கட்டண குறைப்பு தொகையுடன் ஓய்வூதியக்காரர்களுக்கு மொத்த தொகையையும் செலுத்தப்பட்டிருத்தல்.	அண்மையில் திறைசேரியினால் 3 அரச வங்கிகள் ஊடாக அறிமுகப்படுத்தப்பட்ட ஓய்வூதியக்காரர்களின் பணிக்கொடைகளை நேரடியாக அவர்களது வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடும் முறையியலின் அடிப்படையில் ரூ.15,000 மில்லியன் பெற்றுக்கொண்டதாகவும் இத்தொகையை இயன்றவரை விரைவில் செலுத்த வேண்டியேற்பட்டதும் அரசாங்கத்திற்கு அறவிடப்பட வேண்டிய நிறுவனங்களில் உரிய வகையில் நிதி கிடைக்காமையினால் இப்பிரச்சினை தோன்றியதாக க. அ. கூறினார். மாதிரி காணக்காய்வின் படி 182 ஓய்வூதியக்காரர்களுக்கு மேலதிகமாக செலுத்தப்பட்டுள்ள ரூ. 9,956,314 தொகை பற்றி விரிவான அறிக்கையொன்றை பெற்றுக்கொடுக்குமாறு குழு க. அ. க்கு அறிவித்துள்ளது.
5.	திணைக்களத்திற்கு அன்பளிப்பாளர்களிமிருந்து கிடைக்கப்பெற்ற ரூ. 9,947,965 தொகை நிதி பிரமானம் 170(2) (அ), (ஆ), (இ), (ஈ) மற்றும் (உ) படி ஒருங்கிணைந்த நிதியத்திற்கு வைப்பிலிட வேண்டிய போதிலும் அங்கீகாரமின்றி இதில் ரூ. 1,765,000 தொகை 2016 ஓய்வூதிய	இதற்காக அரசாங்க நிதி செலவிடப்படவில்லையெனவும் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் அரசாங்க வங்கி கணக்கில் வைப்பிலிடப்பட்டுள்ள பண அன்பளிப்பு, நிதிப் பிரமானம் இன் படி ஒருங்கிணைந்த நிதியத்தில் வைப்பிலிடாமைக்கு காரணம் தொழில்நுட்ப கோளாறு எனவும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	தினத்தை அனுஷ்டிக்க செலவிடப்பட்டுள்ளது.	இதற்காக திறைசேரியின் அங்கீகாரத்தை பெற முடியாது போனதாகவும், க. அ. கூறினார். அரசாங்கத்திற்குரிய பணத்தை திறைசேரிக்கு அறிவித்து உரிய அங்கீகாரத்தை பெற்று அரசாங்க வருமானத்தில் வரவு வைக்க வேண்டுமென குழு வலியுறுத்தியது.
6.	ஓய்வூதியக்காரர்களின் பருவமடையாத வயதுடையவர்களுக்குரிய ஓய்வூதிய பணிக்கொடை, நிலுவை ஓய்வூதியம், மரண பணிக்கொடை மற்றும் விஷேட இழப்பீட்டுத் தொகை திணைக்களத்தினால் பெற்றுக்கொடுக்கப்பட்ட பின்னர் இவற்றை பருவமடையாத வயதுடையவர் பெயரில் வங்கி வைப்புப் புத்தகத்தில் வைப்பிலிட்டு இது பற்றிய அறிக்கையொன்றை உரிய நிறுவனத்தினால் ஓய்வூதிய திணைக்களத்திற்கு மாதாந்தம் அறிவிக்க வேண்டுமென்ற போதிலும் உரிய நிறுவனத்தினால் வைப்புப் புத்தகத்தின் உரிமையாளர்களின் வயது பூர்த்தியடைந்து நீண்டகாலம் கடந்துள்ள போதிலும் இவர்களுக்கு கிடைக்க வேண்டிய பயன்கள் கிடைக்காமை.	உரிய வைப்புப் புத்தகங்கள் மேற்படி நிறுவனங்களில் இருப்பதாகவும் இது பற்றி ஓய்வூதிய உரிமையாளர்கள் அறிந்திராத சந்தர்ப்பங்கள் இருக்கலாமெனவும் இவர்களின் தகவல்களை பெற்றுக்கொள்வதில் அசௌகரியங்கள் காணப்படுவதாகவும் பிரதம க. அ. ./க. அ. கூறினார். உரிய தகவல்களை பிரதேச செயலகம் ஊடாகவேனும் பெற்று இப்பிரச்சினையை தீர்க்குமாறு குழுவினால் பிரதம க. அ. ./க. அ. க்கு அறிவுறுத்தப்பட்டது.
	கடற்றொழில், நீரியல் வளமூலங்கள் அமைச்சு **2017 மே 04**	
1.	02 ஆதாரக் கலங்களை கொள்வனவு செய்வதற்காக 2007 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் நிறுவனமொன்றுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தமொன்றிற்கு அமைவாக முற்பணம் செலுத்தி 280 நாட்களுக்குள் ஒப்பந்தக்காரரினால் கலம் தயாரிக்கப்பட்டு கையளிக்க வேண்டியதுடன் இதற்கென ரூ. 1488,000,000/- நிதி ஒதுக்கப்பட்டு 2015 திசெம்பர் அளவில் ரூ. 113,556,801/- செலவிடப்பட்ட போதிலும், ஆதாரக் கலங்கள் கொள்வனவு	ஆதாரக் கலங்களை கொள்வனவு செய்தல் மஹிந்த சிந்தனை நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டமாவதுடன், இதற்காக அமைச்சரவை அங்கீகாரம் 2007 ஆண்டில் கிடைத்திருந்ததாகவும், இதற்கு அமைவாக திறைசேரி நிதியும் கிடைத்திருந்ததாகவும், இதற்காக மதிப்பீட்டுச் செலவினம் ரூ.326 மில்லியனாக காணப்பட்டதாகவும், மேற்படி நிதி ஏற்பாடுகளில் ரூ.113

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	செய்யப்பட்டிருக்கவில்லை.	மில்லியன் செலவிடப்பட்ட போதிலும் 2 ஆதாரக் கலங்களும் கிடைக்கவில்லையென பிரதம க. அ. ./க. அ. கூறினார். வங்கிப் பிணை இன்றி முற்பணமாக ரூ.65 மில்லியன் செலுத்தப்பட்டுள்ளதென கண்டறியப்பட்டுள்ளதாகவும், இக்கொடுக்கல் வாங்கலுக்குரிய கேள்விபத்திர நடைமுறை போன்ற தகவல்கள் அடங்கிய கோப்புகள் தொலைந்துள்ளதாகவும் பிரதம க. அ. . கூறினார். இது பற்றி விசாரணை நடத்தி, பிரதம க. அ. . இன் அவதானிப்புக்கள் அடங்கிய அறிக்கையொன்றை குழுவிற்கு விரைவில் அனுப்புமாறு பிரதம க. அ. .க்கு குழு உத்தரவிட்டுள்ளது.
2.	2014 மற்றும் 2015 ஆண்டுக்கான ஆண்டறிக்கைகள் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படாமை.	ஆண்டறிக்கைகளை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்காமை பற்றி காரணங்களை குறிப்பிட்டு அறிக்கையொன்றை விரைவில் குழுவிற்கு அனுப்புமாறு குழு பிரதம க. அ. . க்கு உத்தரவிட்டுள்ளது.
3.	2015 மற்றும் 2016 ஆண்டுகளுக்கான 16 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு விடையளிக்காமை	கணக்காய்வு ஐயவினாக்களுக்கு தாமதமின்றி விடையளிக்க வேண்டுமென வலியுறுத்திய குழு, எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமைகள் ஏற்படுவதை தடுப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிட்டுள்ளது.
4.	மாது கங்கை மற்றும் நீர்கொழும்பு கடல் நீரேரி கருத்திட்டத்திற்குரிய நெதர்லாந்து நிதியுதவி மூலம் மீளளிப்புச் செய்தல் மறுக்கப்பட்ட ரூ.73 மில்லியன் தொகையை செலுத்துவதற்கு ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் மூலம் ரூ.42.04 மில்லியனும், மீதியை நிதி அமைச்சின் செலவு தலைப்பின் ஊடாகவும், மீளளிப்புச்	கடிதக் கோப்புகள் இல்லாமையினால் உரிய தகவல்களை தேட முடியாதென பிரதம க. அ. . கூறினார் இது பற்றிய அறிக்கையொன்றையும் விரைவில் குழுவிற்கு அனுப்புமாறு குழு பிரதம க. அ. . க்கு உத்தரவிட்டது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	செய்தல் பற்றி முழு ஆய்வொன்றை மேற்கொள்வதற்கும், நோக்கங்களை எய்தாமை பற்றி விளக்கம் கோருவதற்கு சிரேஷ்ட உத்தியோகத்தர் ஒருவரை நியமித்து குழுவிற்கு அறிக்கையிடுவதற்கு முன்பதாக குழுவிற்கு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் இதன் முன்னேற்றத்தை சபைக்கு அறிக்கையிடாமை	
5.	ஹிக்கடுவ மற்றும் பாணந்துரை மீன்பிடித் துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக நிறுவனமொன்றுடன் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்திற்கு அமைவாக 8% புரள்வு வரிக்குப் பதிலாக 12.5% பொருட்கள் மற்றும் சேவைகள் வரி குறைக்கப்பட்டு செலுத்தப்பட்டதுடன் இந்த நட்டத்தை அறவிடுவதற்கு நிறுவனம் தொடர்ந்திருந்த வழக்கின் தீர்ப்பிற்கு அமைவாக ரூ. 15,098,897/- நட்டம் மற்றும் 8 ஆண்டுகளுக்கு வட்டியாக ரூ. 11,159,159/- என்றவாறு ரூ. 26,258,056/- இந்நிறுவனத்திற்கு 2010 ஆண்டில் செலுத்தப்பட்டிருந்தது. மேற்படி நட்டத்திற்கு பொறுப்பானவர்களை கண்டறிவதற்கு உள்ளக கணக்காய்வொன்றினை நடத்துமாறும், மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை குழுவிற்கு அறிவிக்குமாறும் உத்தரவிடப்பட்டிருந்த போதிலும் இத்தீர்மானங்கள் குழுவிற்கு அறிவிக்கப்படாமை.	மேற்படி நட்டத்திற்கு பொறுப்பானவொருவர் கிடையாதென அமைச்சினால் அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த சம்பவம் தொடர்பிலும் கடிதக் கோப்புகள் காணாமல் போயுள்ளதாகவும், இக்காலத்தில் சேவையாற்றிய அனைத்து உத்தியோகத்தர்களும் இடமாற்றம் பெற்று வேறு நிறுவனங்களில் சேவையாற்றுவதாகவும் பிரதம க. அ. . கூறினார். மேற்படி சம்பவம் பற்றி தாமறிந்த சகல உண்மைத் தகவல்களையும் குழுவிற்கு சமர்ப்பிப்பது தற்போதைய பிரதம க. அ. . இன் பொறுப்பாகுமென வலியுறுத்திய குழு, இது பற்றியும் மேற்குறிப்பிட்ட சகல சம்பவங்கள் பற்றியும் மேலதிக விடயங்களை ஆராய்வதற்கு அக்காலத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்கள் பற்றி அறிக்கையொன்றை குழுவிற்கு அனுப்புமாறு பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
6.	திக்ஓவிட்ட மீன்பிடி துறைமுகத்தை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் இதற்கு உரித்தல்லாத வ/ப சீனோர் மன்றத்திற்குரிய மட்டக்குளி படகு திருத்த ஆலையை புனரமைப்பதற்கு செலவிடப்பட்ட 106 மில்லியன் ரூபா	மீனவர்களுக்கு பயன்கள் கிடைக்கக்கூடிய வகையில் 55 அடி நீளம் கடற்றொழில் களங்களை தயாரிக்கும் கருத்திட்டமொன்று தற்சமயம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதெனவும், இதன் கீழ் முதல் களம்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	நிதியை மீள அறவிடுவதற்கு அல்லது இதன் பயன்கள் மீனவர்களுக்கு கிடைக்கும் வகையில் கருத்திட்டம் ஒன்றை தயாரிப்பதற்கும், இதற்காக குழுவிற்கு அறிவிப்பதற்கும் கடந்த குழுவில் பிரதம க. அ. .க்கு அறிவுறுத்தல் வழங்கபட்டிருந்ததுடன் மீனவர்களுக்கு பயன்கள் கிடைக்கும் வகையில் நிவாரண விலைக்கு களங்களை திருத்துவதற்கு கருத்திட்டமொன்று தயாரிக்கப்படாமை மற்றும் 2016 திசெம்பர் மாதம் 31 ஆம் திகதிக்கு இப்படகு திருத்தும் ஆலைக்காக செலவிடப்பட்ட தொகை ரூ. 226,026,146/- காணப்படுதல்.	நிர்மாணிக்கப்பட்டுவிட்டதாகவும், மேலும் 4 களங்கள், களங்கள் திருத்தும் ஆலையில் தயாரிக்கப்படவிருப்பதாகவும் பிரதம க. அ. . கூறினார்.
7.	திக்ஓவிட்ட மீன்பிடி துறைமுகத்தை திறந்து வைக்கும் வைபவத்திற்கான மொத்தச் செலவு ரூ. 26,889,165/- என்பதுடன் வைபவ மண்டபத்தை நிர்மாணித்தல் மற்றும் அலங்கார பணி தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதற்காக அங்கீகரிக்கப்பட்ட தொகைக்கு இணங்கிய பணத்தை விட மேலதிகமாக ரூ. 1,898,950/- செலுத்தப்பட்டிருந்தது. நினைவுப் பலகையை நிர்மாணிப்பதற்காக விநியோகத்தர் ரூ. 650,000/- செலவினத்தை குறிப்பிட்டிருந்ததுடன் பெறுகைகள் குழுவினால் இதற்கு மேலதிக கட்டணமாக ரூ. 350,000/- ஐ சேர்த்து ரூ 1,000,000/- அங்கீகரிக்கப்பட்டு செலுத்தப்பட்டமை.	2013 ஜனவரி மாதம் நடத்தப்பட்டுள்ள இந்த வைபவத்தில் சகல வைபவ பணிகளையும் தனியார் நிறுவனமொன்றுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இந்த செலவுகளை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனம் மேற்கொண்டுள்ளதுடன் பின்னர் மேற்படி பற்றுசீட்டுக்கள் திக்ஓவிட்ட துறைமுக கருத்திட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் பிரதம க. அ. ./க. அ. கூறினார். மேற்படி சம்பவத்துடன் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட சகல சம்பவங்கள் பற்றியும் மேலும் கலந்துரையாடுவதற்கு மேற்படி சம்பவங்களுடன் தொடர்புபட்ட அத்துடன் தற்சமயம் அமைச்சில் சேவையாற்றாத சகல உத்தியோகத்தர்களுடன் தற்போதைய உத்தியோகத்தர்களை மீண்டும் குழு முன்னிலையில் அழைப்பதற்கு குழு தீர்மானித்ததுடன் ஒவ்வொரு சம்பவம் பற்றி அக்காலத்தில் சேவையாற்றிய உத்தியோகத்தர்களின் பெயர் பட்டியல் மற்றும் பிரதம க. அ. . இன்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		அவதானிப்புக்கள் அடங்கிய அறிக்கையொன்றை மே 20 ஆம் திகதிக்கு குழுவுக்கு அனுப்ப வேண்டுமெனவும் பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
8.	2015 ஆண்டு நிறைவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த கைக்காவல நங்கூரத்தள நிர்மாணக் கருத்திட்டத்தை ஆரம்பிப்பதற்காக ரூ.84.84 செலவிடப்பட்டுள்ளது. கைரயோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெறப்படாமலிருந்தமையால் கருத்திட்டம் நிறுத்தப்பட்டதாகவும், நிறுத்தப்பட்டிருந்தாலும், ஆலோசனை கட்டணத்தில் 62 சதவீதம் அதாவது ரூ. 4,379,531/- தொகை ஆலோசனை நிறுவத்திற்கு செலுத்தப்பட்டமை.	பெருளவில் கடலரிப்பு ஏற்படக்கூடுமென்பதால் மேற்படி கருத்திட்டத்திற்கு கரையோரப் பாதுகாப்பு திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொடுக்கப்படவில்லையெனவும், வேறொரு நிறுவனத்தினால் மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள கற்கையாய்வை அடிப்படையாகக் கொண்டு ஆலோசனை நிறுவனம் திட்டவரைபுகளை மேற்கொண்டிருப்பதாகவும் இதற்காக உரிய கட்டணத்தை செலுத்த வேண்டியேற்பட்டதாகவும், ஒப்பந்த நிறுவனத்தினால் பிரவேசப் பாதைகள் நிர்மாணிக்கப்பட்டிருப்பதால் இதற்காகவும் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டியேற்பட்டதாலும், இதற்கு மேலதிகமாக 20% முற்பணமும் செலுத்தப்பட்டிருந்ததாகவும் பிரதம க. அ. ./க. அ. கூறினார். இக்கருத்திட்டம் பற்றி மேற்கொள்ளப்பட்ட சாத்தியவள கற்கையாய்வு அறிக்கை மற்றும் சூழல் மதிப்பீட்டு அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு குழு பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிட்டது.
9.	பாணந்துறை மீன்பிடி துறைமுக முகத்துவாரத்தில் மணலை அகற்றுவதற்கு மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட ரூ.20 மில்லியன் முற்பணம் 10 ஆண்டுக்குள் குறித்த மணல் விற்பனையில் தீர்க்க வேண்டியிருந்த	திறைசேரியின் ஆலோசனைப்படி இவ்வாறு செய்ததாக பிரதம க. அ. ./க. அ. கூறிய போதிலும் திறைசேரிக்கு விடயங்களை தவறாக காட்டியமையால் இந்நிலைமை தோன்றியுள்ளதாக குழு அவதானித்துள்ளது.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	போதிலும், பேரேட்டு குறிப்புகள் மூலம் செலவுத் தலைப்பில் வரவு வைத்து செலுத்தப்பட்டுள்ளமை	இது பற்றி முறையாக விசாரணை நடத்தி, இவ்விசாரணை அறிக்கையை குழுவிற்கு அனுப்புமாறு குழு பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிட்டுள்ளது.
கடற்றொழில், நீரியல் வளமூலங்கள் திணைக்களம் **2017 மே 04**		
1	2013, 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளுக்கான வருடாந்த செயலாற்றுகை அறிக்கைகள் தயாரிக்கப்பட்டிருக்காமை	தற்சமயம் இவை தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரதம க. அ. ./க. அ. அறிவித்துள்ளதுடன் இவ்வறிக்கைகள் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்தப்படவில்லையென அவதானித்த குழு, இவற்றை விரைவில் பாராளுமன்றத்தில் ஆற்றுப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிட்டுள்ளது.
2.	மாவட்ட மீனவ கூட்டுறவு சங்க உறுப்பினர்களுக்கு சுழற்சிக் கடன் உதவி திட்டமொன்றை தாபிப்பதற்கு 2009 மற்றும் 2010 ஆண்டுகளில் 07 கூட்டுறவு சங்கங்களுக்கு ரூ. 4,050,000/- பெற்றுக்கொடுக்கப்பட்டதுடன் 06 சங்கங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்ட ரூ. 2,416,563/- தொகையும் உரிய செயற்பாட்டுக்காக பயன்படுத்தப்படாமல் தேக்கி வைக்கப்பட்டுள்ளது	கடற்றொழில் சட்டத்தின் படி மீனவ அமைப்புக்களை தாபிப்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், மீனவ கூட்டுறவு சங்கங்கள் மாகாண சபைகளின் கீழ் பொறுப் பேற்கப்படுவதால் இதன் நிதி நிர்வாகத்தை மேற்கொள்வதற்கு கடற்றொழில் திணைக்களத்திற்கு ஆற்றல் கிடையாதெனவும், இத்தொகை மீனவச் சங்கங்களுக்கு இருப்பதாகவும் ஆனால் சுழற்சி நிதியமொன்று இயங்கவில்லை எனவும் க. அ. கூறினார். மீனவ கூட்டுறவுச் சங்கங்களுடன் கலந்துரையாடிய பின்னர் இந்நிதியை உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்து வதற்கான முறையியலொன்றை தயாரிக்குமாறு குழு பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிட்டுள்ளது.
3.	திவிநெகும மீன்பிடி விளைச்சலுக்கு பிந்திய தொழில்நுட்ப சுழற்சி கடன்	மேற்படி பணம் ஆரம்பத்தில் கடனாக வழங்கப்படவில்லையென்பதுடன்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	திட்டத்தின் கீழ் ரூ.26.75 மில்லியன் இலங்கை வங்கியின் தலைமை அலுவலகத்தில் வைப்பிலிடப்பட்டிருந்ததுடன் 2013 யூலை அளவில் கடன் வழங்கும் முன்னேற்றம் 45% மானதுடன் கடன் பெற்றுக்கொண்ட பயனாளிகள் 535 பேர் ரூ. 1,334,935/- கடனை மீளச் செலுத்த தவறியுள்ளனர்.	சலுகை காலமும் வழங்கப்பட்டிருந் ததாகவும், ரூ.10 மில்லியன் பணம் பொருளாதார அபிவிருத்தி அமைச்சுக்கு திருப்பி அனுப்பப்பட்டிருப்பதாகவும், எஞ்சியுள்ள ரூ.16 மில்லியன் மூலம் ரூ.10,000/- கடன் தொகையை மாத்திரம் வழங்க முடியுமெனவும் இத்தொகை உரிய நோக்கங்களை நடைமுறைப்படுத்த போதுமானதாகவில்லையெனவும் க. அ. கூறினார்.
4.	பலநாள் மீன்பிடி வள்ளங்களுக்கு VMS உபகரணங்களை பொருத்துவதற்கு 2015 ஆண்டில் ரூ.605 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் 2016 திசெம்பர் 31 திகதியளவில் இப்பணிகள் நிறைவேறாமை	மீன் ஏற்றுமதித் தடை அமுல்படுத்தப்பட்ட காலத்தில் விதிக்கப்பட்ட நிபந்தனையாக 1500 களங்களுக்கு VMS உபகரணங் களை பொருத்தியதாகவும், இத்தடை நீக்கப்பட்ட பின்னர் 3000 களங்களுக்கு இவ்வுபகரணங்களை பொருத்துவதற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்பட்ட பின்னர் கேள்விபத்திரதாரரின் கேள்விப் பத்திரத்தை அமுல்படுத்துவதற்கு எதிராக ஏனைய கேள்விபத்திரதாரர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளமையால் செயற் பாடுகள் முன்னெடுக்கப் படவில்லை என க. அ. கூறினார்.
5.	VMS உபகரணங்கள் பொருத்தப்பட்ட பின்னர் மீனவர்களிடம் அறிவிடப்பட்ட கட்டணங்கள்	இக்கட்டணமானது களம் இருக்கின்ற இடத்தை அறிந்துகொள்வதற்கு வசதியளிப்பதற்காக உரிய நிறுவனத்திற்கு செலுத்தப்படும் வீஎம்எஸ் செய்மதி கட்டணமாக (VMS Satellite Charges) மற்றும் உரிய மூன்று தரப்பினாலும் கைச்சாத்திடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின் படியும், அக்கட்டணங்களை அறவிடுதல் பற்றி மீனவ சமூகத்தினருக்கு விளக்கமளிக்கப்பட்டிருப்பதாகவும் க. அ. கூறினார்.
6.	2013 ஆண்டில் எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்ட பின்னர் அறிமுகப்படுத்தப்பட்ட மீன்பிடி உபகரண மானிய முறைக்கு தகைமை பெற்றுள்ள	ஒவ்வொரு வகை களங்களுக்கு மேற்படி முறையின் கீழ் இதுவரை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ள நிவாரண அளவு பற்றி அறிக்கையொன்றை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	ஒருநாள் களம் மற்றும் பாராம்பரிய களங்களுக்கு மானியம் வழங்கப்பட்ட போதிலும் பலநாள் களங்களுக்கு இன்னும் இந்த நிவாரணம் வழங்கப்பட்டிருக்காமை	விரைவில் குழுவிற்கு அனுப்புமாறு குழு க. அ. க்கு உத்தரவிட்டுள்ளது.
விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் 2017 மே 05		
1.	கிளிநொச்சி பிரதேசத்தில் மெய்வல்லுனர் விளையாட்டு சங்கத்தில் பதிவு செய்யப்படாத மன்றமொன்றுக்கு கட்டிடம் ஒன்றை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ரூ. 500,000/= க்குரிய நிர்மாணப் பணிகளின் முன்னேற்றத்தை புகைப்படங்களுடன் அறிவிக்குமாறு வழங்கப்பட்ட உத்தரவை நடைமுறைப்படுத்தாமை	தேசிய மெய்வல்லுனர் விளையாட்டு சங்க நிதியத்தில் ஒரு விளையாட்டரங்கு நிர்மாணிக்கப்படுவதாக தகவல்கள் உள்ள போதிலும் கட்டிடமொன்று தொடர்பிலான தகவல்களை தேடிக்கொள்ள முடியாமையால் தற்போதைய மெய்வல்லுனர் விளையாட்டு சங்க தவிசாளரிடம் இது பற்றி அறிக்கையொன்றை கோரியிருப்பதாக பிரதம க. அ. ./க. அ. கூறினார். இது பற்றி விஷேட கவனமொன்றை செலுத்தி விபரமான அறிக்கையொன்றை 2017 மே 31 திகதிக்கு முன்னர் குழுவிற்கு சமர்ப்பிக்குமாறு பிரதம க. அ. . க்கு உத்தரவிடப்பட்டுள்ளது.
2	2011-2013 ஆண்டுகளில் கருத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட மூலதன ஒதுக்கீடுகளில் குறிப்பிடத்தக்க மீதி காணப்படுதல்.	வருடாந்தம் கூடுதலான அல்லது குறைவான அளவில் மூலதன மீதிகள் அறிவிக்கப்படுவதுடன் 2013 ஆண்டில் நுவரெலியா மாவட்டத்திற்காக திட்டமிடப்பட்ட அபிவிருத்தி கருத்திட்டங்கள் பல சீரற்ற காலநிலை மற்றும் முற்பணம் கிடைப்பதிலான தாமதம் இதற்கு காரணமாகியிருப்பதாக கூறிய பிரதம க. அ. ./க. அ. கருத்திற்கொள்ளப்பட்ட ஆண்டில் 100% பௌதீக செயலாற்றுகை எய்துவதற்கு முடிந்துள்ளதாக கூறினார்.
3.	2008 ஆம் ஆண்டின் 431 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கைக்கு மாறாக 2012 ஆண்டில் ரூ. 1,262,150/= மற்றும் 2013 ஆண்டில் ரூ. 8,071,795/=	2012-2013 காலத்தில் கொள்வனவு செயற்பாட்டில் பெருமளவு குறைபாடுகள் காணப்பட்டதாக ஏற்றுக்கொண்ட க. அ. இக்கொடுக்கல் வாங்கல்களில் நட்டத்தை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	செலவிடப்பட்டு வெளிநாட்டு பயணங்களுக்கு தனியார் பிரதிநிதியொருவரிடமிருந்து விமான டிக்கட்டுக்களை கொள்வனவு செய்திருந்தமை	ஏற்படுத்தியுள்ள உத்தியோகத்தர்கள் பற்றி இலஞ்ச ஆணைக்குழு விசாரணை நடத்திவருவதாக கூறினார்.
4.	2011, 2012 மற்றும் 2013 ஆண்டுகளில் விளையாட்டு சங்கங்களில் ஏற்பட்டுள்ள நிர்வாக மற்றும் நிதி பலவீனங்கள் மற்றும் திறமையின்மையை குறைப்பதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்	விளையாட்டு சங்கங்கள் பற்றி முறையான நிர்வாக முறையொன்று இன்மை இந்த திறமையின்மைக்கு காரணமாகியுள்ளதால் அமைச்சின் தலையீட்டுடன் முறையான நிகழ்ச்சித்திட்டத்தை தயாரித்து விளையாட்டு சங்கங்களின் எதிர்காலத்தை பாதுகாப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு குழுவினால் பிரதம க. அ. ./க. அ. க்கு உத்தரவிடப்பட்டது.
5.	1993 ஆம் ஆண்டின் 47 ஆம் இலக்க விளையாட்டுத்துறைச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மாறாக வருடாந்த கணக்கு கூற்றுக்கள் சமர்ப்பிக்கப்படாத 8 விளையாட்டுச் சங்கங்களுக்கு 2011-2015 காலத்தில் ரூ. 68,665,775/= தொகை பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளமை மற்றும் உத்தரவு இலக்கம் 35 இன் கீழ் அமைச்சு நிதியளிப்பிற்கான தேவைகள் பூர்த்தி செய்யப்பட்டிராத நிலையில் ரூ. 271,066,000/= தொகை விளையாட்டுச் சங்கங்களுக்கு பெற்றுக்கொடுக்கப்பட்டமை.	ஆசிய விளையாட்டு விழாவில் தேவைக்கு முன்னுரிமை வழங்கி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதால் விளையாட்டு உபகரணங்களை கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய தேவைகளை பூர்த்தி செய்வதற்காக விளையாட்டு சங்கங்களுக்கு இந்நிதியை பெற்றுக்கொடுத்ததுடன் இதற்குரிய சகல ஆவணங்களும் திணைக்களத்திடம் காணப்படுவதாக கூறிய க. அ. அநேகமான விளையாட்டு சங்கங்கள் அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் மாத்திரம் தங்கியிருப்பதால் விளையாட்டு துறையில் அனுவம் கொண்டவர்களை பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளல், கணக்கீடு பற்றிய அறிவுள்ளவர்களை பொருளாளர் பதவிகளுக்கு சேர்த்துக்கொள்ளல் மற்றும் உரிய காலத்தில் கணக்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல் ஆகிய விடங்கள் குறித்து கவனம் செலுத்தும்படி விளையாட்டு சங்கங்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாக மேலும் கூறினார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
6.	2011 ஆம் ஆண்டில் ரூ.112 மில்லியன் செலவில் நிர்மாணிக்கப்பட்ட 400 மீற்றர் செயற்கை ஓடுபாதையை நிர்மாணித்து 2 மாதங்களின் பின்னர் பயன்படுத்த முடியாத நிலையில் சேதமடைந்திருத்தல், சேத பட்டியலில் இதனை அறிவிக்காமை, நிதிப் பிரமானம்104 (2) இற்கு ஏற்ப கணக்காய்வாளர் தலைமையதிபதிக்கு அறிவிக்காமை மற்றும் ஓடுபாதையை நீக்குவதற்கு பத்திரிகை விளம்பரத்தை பிரசுரித்தல், ஆய்வு கட்டணங்கள் மற்றும் போக்குவரத்து செலவாக ரூ. 2,534,503/= சிக்கனமற்ற செலவொன்று மேற்கொள்ளப்படுதல்.	“கஹகொல என்டபிரைஸஸ்” என்ற பெயரிலான நிறுவனமொன்றினால் நிர்மாணிக்கப்பட்ட இந்த ஓடுபாதை தரத்திற்கு ஏற்ப தயார் செய்யப்படாமையினால் பயன்படுத்த இயலாத நிலையில் இருப்பதால் இது பற்றி சட்ட ஆலோசனைகள் நாடப்பட்டதுடன் தற்போதுள்ள ஓடுபாதையை மீள அமைப்பதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது. இதற்கு அமைவாக ரூ. 300 மில்லியன் பெறுமதியான 2 செயற்கை ஓடுபாதைகளை அமைப்பதற்கு விலைமனு கோரப்பட்டுள்ளதெனவும் ஒப்பந்தத்திற்கு அமைவாக நடவடிக்கை எடுக்கத்தவறிய “கஹகொல நிறுவனத்திற்கு” செலுத்த வேண்டிய ரூ.22 மில்லியன் நிறுத்தியுள்ளதாகவும் க. அ. தெரிவித்தார். இது பற்றி தொழில்நுட்ப மதிப்பீட்டு குழுவும் பொறுப்புக்கூற வேண்டுமெனவும் நிபந்தனைகளுக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்க சகல தரப்பினரும் வழிவகை செய்ய வேண்டுமெனவும் குழு வலியுறுத்தியுள்ளது. ஆவனசெய்தல் வேண்டும் என்றும் குழு வலியுறுத்தியது
7.	2016 பெப்ருவரி 05 முதல் 15 வரை இந்தியாவில் நடைபெற்ற தெற்காசிய சுற்றுப் போட்டிக்கு அலுவலர்கள் மற்றும் அவதானிப்பாளர்களாக 288 பேர் பங்கேட்கச் செய்யப்பட்டதன் மூலம் 2016.03.18 ஆம் திகதிய ஒலிம்பிக் குழுவின் செயலாளர் நாயகத்தின் கட்டளையை பொருட்படுத்தாமை,	சுமார் 3 வார காலமாக நடைபெற்ற இந்த சுற்றுப்போட்டிக்கு விளையாட்டு வீரர்கள், அலுவலர்கள் மற்றும் அவதானிப்பாளர் குழு அடிப்படையில் பல சந்தர்ப்பங்களில் வெளிநாடு சென்றுள்ளார்கள் என்பதுடன், பல்வேறு நிறுவனங்களைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற அலுவலர்களுக்கு தேசிய

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
	எழுத்துமூலமான உறுதிப்படுத்தல் இன்றி அவதானிப்பு அலுவலர்கள் 41 பேருக்கு அமய மற்றும் இணைந்த கொடுப்பனவாக 71990 அமெரிக்க டொலர்கள் செலுத்தப்பட்டுள்ளமை மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களின் விபரம் கணக்காய்வுக்காக வழங்கப்பட்டிருக்காமை பற்றி குழுவினால் ஆராயப்பட்டது.	மட்டத்திலான விளையாட்டுப் போட்டிகளின் அனுபவத்தைப் பெற்றுக் கொடுப்பது இதன் அடிப்படை நோக்கமாகும் என்றும், அலுவலர்களை தெரிவு செய்யும் போது அவர்களின் வெளிக்கள செயற்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட்டதுடன், கொடுப்பனவுகளைச் செலுத்தும் போது சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பிரதம க. அ. ./ க. அ. தெரிவித்தார். குறித்த சுற்றுப்பயணத்தில் பங்கேற்ற அலுவலர்களின் தகவல்களை உள்ளடக்கிய அறிக்கையை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடப்பட்டது.
8.	2011 ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட "கிறீடா சக்தி" நிகழ்ச்சித்திட்டத்திற்கு 210-2-2-1405 செலவுத் தலைப்பின் கீழ் 2016 ஆம் ஆண்டு ஒதுக்கப்பட்ட ரூ. 60 மில்லியன் தொகையில் சுமார் ரூ. 34 மில்லியன் தொகை எஞ்சியுள்ளமை.	கிராமிய மட்டத்தில் திறமைகளைக் கொண்டுள்ள விளையாட்டு வீரர்களை இனங்கண்டு அவர்களுக்கு சர்வதேச மட்டத்திலான வெற்றிகளை வென்றெடுக்க ஊக்குவிப்பதற்காக 2016 ஆம் ஆண்டுக்கு ஒதுக்கப்பட்ட இந்தத் தொகையினால் விளையாட்டு உபகரணங்கள் மற்றும் ஆடைத் தொகுதிகளை இலவசமாக பெற்றுக் கொடுக்கத் திட்டமிடப்பட்ட போதிலும், வழங்கல் செயன்முறையில் காணப்பட்ட தாமதம் காரணமாக நிதி ஏற்பாடுகள் எஞ்சியமை அறிக்கையிடக் காரணமாகியுள்ளது என்றும், 25 மாவட்டங்களையும் உள்ளடக்கும் வகையில் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் 5000 பேரை தெரிவு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		செய்து, 28 விளையாட்டுக்களுக்கான பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள் தற்போது அமுல்படுத்தப்படுகின்றன என்றும் பிரதம க. அ. ./ க. அ. தெரிவித்தார்.
வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் **2017 மே 23**		
1.	2016 ஆம் ஆண்டின் வருடாந்த செயற்றிட்டத்தைத் தயார் செய்திருந்த போதிலும் செயலாற்றுகை தொடர்பான தகவல்கள் 2017 மே மாதம் வரை வழங்கப்பட்டிருக்கவில்லை.	கருத்திட்டங்களின் தகவல்களை பொழிப்புரையாக்குவதற்கு காலமெடுத்தது என்றும், எதிர்வரும் சில தினங்களில் இந்த அறிக்கையை கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் சமர்ப்பிக்க முடியும் என்றும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார்.
2.	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிகள் மற்றும் செயற்பாடுகள்	இந்தத் திணைக்களம் “ஏ” வகுதியைச் சேர்ந்ததொரு திணைக்களமாகும் என்றும் வெளிநாட்டு அபிவிருத்தித் தரப்பினர்கள் மற்றும் உதவி வழங்கும் குழுக்களுடன் வெளிநாட்டு கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல் மற்றும் உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளல், மேற்படி உடன்படிக்கைகளை தத்துவமுள்ளதாக்கல், நிதி உதவி பெற்றுக் கொண்ட பின்னர் மேற்படி நிகழ்ச்சித்திட்டங்களின் நிதிசார் முகாமைத்துவம் செய்வதை ஒருங்கிணைப்புச் செய்தல், வெளிநாட்டு கற்கை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளல், கடன் தொடர்பான தரவு முறைமையை பேணிவருதல் ஆகிய நடவடிக்கைகள் பிரதானமாக

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		நிறைவேற்றும் பணிகளாகும் என்று பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார்.
3.	வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு புறம்பாக பெற்றுக் கொள்ளப்படுகின்ற கடன் மற்றும் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட நேரடி வெளிநாட்டுக் கடன் அறிக்கையிடப்படாமை காரணமாக கடனைக் கணிப்பிடுவது சிக்கலானதாக மாறியுள்ளமை.	இந்தத் திணைக்களத்தினால் தவிர வேறு நிறுவனங்களிடம் வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்ள முடியுமா என்று வினவியதற்குப் பதிலளித்த பிரதம க. அ. . / க. அ. , திறைசேரி தொழிற்பாட்டுத் திணைக்களத்தின் பிணையின் அடிப்படையில் நேரடிக் கடன் பெற்றுக் கொள்ள முடியும் என்றும், இந்தக் கடன் தொடர்பான தகவல்கள் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்திடம் இல்லை என்றும் குறிப்பிட்டார். இதற்கு மேலதிகமாக, திறைசேரி முறிகளில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் செய்துள்ள முதலீடுகளும் வெளிநாட்டுக் கடனாகக் கருதப்பட வேண்டும் என்று பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார். மேலும் இந்தக் கடன் பற்றிய தரவுகளை ஒரு நிறுவனத்தின் கீழ் கொண்டுவருவதற்கு தற்போது கலந்துரையாடல் மட்டத்தில் வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டுள்ளது என்றும், இந்த நிறுவனம் சட்டமூலமொன்றின் மூலம் கூட்டிணைக்கப்பட்ட பின்னர் செயற்படும் என்றும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார். தற்போது நிதிச் சபைச் சட்டத்தின் 113 ஆம் பிரிவின் கீழ் கடன் முகாமைத்துவப் பொறுப்பு மத்திய வங்கிக்கு உரித்தானது என்றும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்துக்கு உரித்தான தரவு முறைமைக்கு மத்திய வங்கிக்குப்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பிரவேசிக்க வசதி செய்யப்பட்டுள்ளது என்றும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார். இதற்கான சட்டமூலத்தைத் தயார்செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், அதன் மூலம் வெளிநாட்டுக் கடன் பெற்றுக் கொள்ளல், கடன் பற்றிய தரவு முறைமையைப் பேணிவருதல் மற்றும் கடன் செலுத்தல் ஆகிய நடவடிக்கைகளை ஒருங்கிணைப்புச் செய்யத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்படும் என்றும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார்.
4.	JICA நிறுவனத்தினால் உதவி வழங்கி நிர்மாணிக்கப்படுகின்ற இலகுரக புகையிரத (LRT) கருத்திட்டத்தின் முன்னேற்றம்	இந்தக் கருத்திட்டத்தை 2018 பெப்ருவரி மாதத்தில் ஆரம்பிக்க முடியும் என்றும் சாத்தியக்கூறு ஆய்வை 2017 இறுதியில் பூர்த்தி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார். இந்தக் கருத்திட்டத்திற்கான பிரேரணைகளை சமர்ப்பிக்க முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட மொனோரேல் கருத்திட்டம் செலவு அதிகமாக உள்ளதனால் அது நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும் அதற்குப் பதிலாக LRT கருத்திட்டத்தை அமுல்படுத்துவதாகவும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார்.
5.	பொது முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் (PIP – Public Investment Programme) தற்போது செயலிழந்து உள்ளமை.	இந்தக் கருத்திட்டத்தின் கீழ் முன்னுரிமை அடிப்படையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கு வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவிகளைப் பயன்படுத்திக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
		இந்த நிகழ்ச்சித்திட்டம் 1999/2000 ஆம் ஆண்டு முதல் அமுல்படுத்தப்படாத நிலைமை காணப்பட்டதாகவும் இதன் மூலம் பொது உட்கட்டமைப்பு வசதிகளை முறையாக மேம்படுத்தத் திட்டமிடப்பட்டிருந்தது என்றும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார். நேரடி வெளிநாட்டு முதலீட்டுக்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், இந்தக் கருத்திட்டம் திட்டமிடப்பட்டிருந்தது என்றும் அவ்வாறே நாட்டில் அமைந்துள்ள துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்களை பரந்த வீதிக் கட்டமைப்பின் ஊடாக ஒன்றுடன் ஒன்று இணைத்திருப்பதானது நேரடி முதலீடுகளைப் பெற்றுக் கொள்ளத் தேவையான பிரதான காரணியாகும் என்றும் பிரதம க. அ. . / க. அ. மேலும் தெரிவித்தார்.
6.	வெளிநாட்டுப் புலமைப் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செயற்பணி	இந்த செயன்முறையின் போது இடையீட்டாளராக வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் செயற்படு கின்றது என்றும், குறித்த நிறுவனங் களினால் தெரிவு செய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்களை புலமைப் பரிசில் களுக்கு சிபாரிசு செய்வதாகவும், வெளிநாட்டு புலமைப் பரிசில்கள் தொடர்பில் தொடர்ந்தும் கவனம் செலுத்தி குறித்த அமைச்சுக்கள், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் கம்பனிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார்.

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		விண்ணப்பதாரர் களில் தகுதிவாய்ந்தவர்களை தெரிவு செய்வதை வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் மேற்கொள்வதாகவும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார். சில வேளை அமைச்சு, திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள் மற்றும் கம்பனி களினால் தெரிவு செய்து அனுப்பப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் தகுதிவாய்ந்தவர்கள் அல்ல என்று வெளிநாட்டு நிறுவனங்கள் தீர்மானிப்ப தாகவும் விண்ணப்பதாரர்களை தெரிவு செய்து அனுப்பத் தவறுவதாகவும் இதனால் இந்த சந்தர்ப்பங்களிலிருந்து உச்சளவான பயன்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது என்றும் பிரதம க. அ. . / க. அ. தெரிவித்தார்.
	உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு **2017 மே 24**	
1.	2014 செப்தெம்பர் 25 ஆம் திகதிய அரசாங்க கணக்குகள் குழுவின் கூட்டத்தின் போது வழங்கப்பட்ட கட்டளைக்கு அமைய வெளிநாட்டு உதவி நிர்மாணக் கருத்திட்டங்களின் தாமதங்கள் தொடர்பாக பொறுப்புக்கூற வேண்டிய ஆட்கள் பற்றி இதுவரை நடவடிக்கை மேற்கொள்ளப்படாமை.	குறித்த பல்வேறு வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்களுடன் சம்பந்தப்பட்ட அலுவலர்கள் கருத்திட்டங்கள் நிறைவடைந்த பின்னர் குறித்த நிறுவனங்களிலிருந்து நீங்கிச் சென்றுள்ளமை காரணமாக மேற்படி அலுவலர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ள முடியாத நிலைமையை எதிர்நோக்க வேண்டி தமது அமைச்சுக்கு ஏற்பட்டுள்ளதாக பிரதம க. அ. . தெரிவித்தார். மேற்படி பதில் தொடர்பில் திருப்தியடைய முடியாது என்று குறிப்பிட்ட குழு வெளிநாட்டு உதவிக் கருத்திட்டங்கள் தாமதமடைதல் மற்றும் நிறைவடைந்து சிறிது காலத்திற்கு பின்னர் முன்னேற்ற மீளாய்வு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		மேற்கொள்ளப்படுகின்ற சந்தர்ப்பங்களில் குறித்த ஆவணக் கோப்புக்கள் காணாமல் போதல் மற்றும் அது தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்களை தேடிக் கண்டுபிடித்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏதும் முறையியல் காணப்படுகின்றதா, நிதி அமைச்சினால் அனுப்பப்பட்டுள்ள சுற்றறிக்கைகள் காணப்படுகின்றனவா என்பது பற்றிய அறிக்கையொன்றை குழுவிடம் சமர்ப்பிக்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு அறிவிக்குமாறு கட்டளையிடப்பட்டது.
2.	2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் மூலதன ஏற்பாடுகளின் குறைப்பயன் பாடானது, 29% முதல் 50% வரை பரந்து காணப்பட்டமை மற்றும் 2016 மூலதன ஏற்பாடுகளில் ரூபா 2,352 மில்லியன் அதாவது 32% எஞ்சியுள்ளமையும், 2016 ஆம் ஆண்டின் செலவினத் தலைப்புக்கள் 08 தொடர்பாக ரூ. 793 மில்லியன் பயன்படுத்தப்படாதுள்ளமையும்.	ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்ட போதிலும் நிதி அவசியமான சந்தர்ப்பங்களில் நிதி விடுவிக்காமை இதற்கான காணரமாகும் என்று பிரதம க. அ. . இங்கு தெரிவித்தார். திறைசேரிக்கு ஒவ்வொரு மாதமும் சமமான காசுப் பாய்ச்சல் கிடைக்கின்ற போதிலும் அமைச்சுக்களினால் கூடுதலாக நிதி கோரப்படுவது ஆண்டின் இறுதி மாதங்களில் என்பதனால் திறைசேரிக்கு நிதி முகாமைத்துவத்தின் போது அசௌகரியங்கள் எழுவதாக இங்கு தெரியவந்தது.
3.	2015 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு பொது வைப்புக் கணக்கின் தடுத்துவைக்கப் பட்டிருந்த 2 வருடங்களுக்கும் மேற்பட்ட ரூ. 5.5 மில்லியன் ஆன வைப்பு மற்றும் 2016 திசெம்பர் 31 ஆம் திகதிக்கு 2 வருடங்களை விஞ்சிய பொது வைப்புக் கணக்கில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசசார்பற்ற பல்கலைக்கழகங்களின்	பாடநெறி மதிப்பீட்டுப் பணிகளில் பங்கேற்கின்ற விரிவுரையாளர்களுக்கு போக்குவரத்து கொடுப்பனவாக மற்றும் பட்டப் பாடநெறியொன்றை மதிப்பீடு செய்வதன் இறுதியில் செலுத்தப்படுகின்ற கொடுப்பனவுக்கு இந்த பண வைப்பு பேணிவரப்படுகின்றது என்று பிரதம க. அ. . தெரிவித்தார். தற்போது மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்ற பாடநெறிகள்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	மதிப்பீட்டு பணிகள் தொடர்பான மீதி ரூ. 12 மில்லியனாக இருந்தமை.	பற்றி அறிக்கை சமர்ப்பிக்குமாறு குழு கட்டளையிட்டது.
4.	விளையாட்டு அமைச்சுக்காக வெளிநாடு சென்றுள்ள உயர் கல்வி அமைச்சில் ஒப்பந்த அடிப்படையில் சேவைக்கு அமர்த்தப்பட்ட ஒரு அலுவலருக்கு அமய கொடுப்பனவாக அமைச்சினால் ரூபா 117,159/- 2014 ஆம் ஆண்டு செலுத்தப்பட்டிருந்ததுடன், மேற்படி தொகையை விளையாட்டு அமைச்சிடம் அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை.	மேற்படி அலுவலர் உயர் கல்வி அமைச்சின் விளையாட்டு மற்றும் திறன்கள் பிரிவின் பணிப்பாளர் நாயகமாக சேவையாற்றியுள்ளார் என்றும், மேலும் ஒலிம்பிக் தங்கப் பதக்கம் வென்ற ஒருவர் என்றும், விளையாட்டு அமைச்சிடம் கிடைத்த வெளிநாட்டு விஜயமொன்றில் பங்கேட்கும் போது அவர் உயர் கல்வி அமைச்சினை பிரதிநிதித்துவம் செய்வதன் மூலம் பெற்றுக் கொள்ளக்கூடிய பயன்களைக் கவனத்தில் கொண்டு அமையக் கொடுப்பனவுகள் மற்றும் குளிருக்கு அணியும் ஆடைக்கான கொடுப்பனவாக இந்தக் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட்டதென்று விளக்கமளித்த பிரதம க. அ. . இந்தக்கொடுப்பனவு அரசாங்க ஊழியர் ஒருவர் வெளிநாட்டு விஜயம் மேற்கொள்ளும் போது செலுத்தப்படுகின்ற கொடுப்பனவாகும் என்றும் மேலும் விளக்கமளித்தார்.
5.	2010 மே 14 ஆம் திகதிய அரசாங்க செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையின் 3(1) மற்றும் 4(1) பந்திக்கு அமைய அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் உபயோகத்திற்காக மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக உச்சளவான உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை 3 ஆக உள்ளபோதிலும் 2014 ஆம் ஆண்டில்	இக்காலப்பகுதியில் ஏற்பட்ட சிக்கலான சூழல் காரணமாக குறித்த அமைச்சரின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டி ஏற்பட்டது என்றும், பாராளுமன்றத்தினால் கேட்கப்படுகின்ற பல்வேறு கருத்திட்டங்கள் தொடர்பிலான வினாக்களுக்கு பதிலளிப்பதற்கான உரிய பணியாட்டொகுதியினருக்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ள அலுவலர்களின் கடமை நடவடிக்கைகளுக்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	மேற்படி வரையறையை விஞ்சி 7 வாகனங்கள் அமைச்சருக்கு வழங்கப்பட்டிருந்ததுடன், மாதாந்தம் உரித்தாகின்ற எரிபொருளின் அளவையும் விஞ்சி ரூபா 1,029,380/-ஆன எரிபொருள் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், மேற்படி தொகை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்டிருக்காமை.	உத்தியோகபூர்வ வாகனங்களை வழங்க வேண்டி ஏற்பட்டது என்றும், எனினும் சுற்றறிக்கை தொடர்பாக 3 உத்தியோகபூர்வ வாகனங்கள் மாத்திரம் உபயோகத்திற்குப் பயன்படுத்தப்பட்டது என்றும் பிரதம க. அ. . குறிப்பிட்டார்.
6.	2014 ஆம் ஆண்டு அமைச்சருக்கு வருடாந்தம் உரித்தான வீட்டு வாடகைக் கொடுப்பனவுக்குப் பதிலாக மேற்படி எல்லையை விஞ்சும் வகையில் மின் மற்றும் நீர் கட்டணப் பட்டியல்கள் மீள்நிரப்புச் செய்யப்பட்டிருந்த போதிலும் மேலதிகமாக செலுத்தப்பட்ட ரூபா 833,460/- ஆன தொகையை உரிய தரப்பினர்களிடமிருந்து அறவிட்டுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்காமை.	2009 மார்ச் 05 ஆம் திகதிய 10/2007(1) ஆம் இலக்க சுற்றறிக்கைக்கு அமைய அமைச்சர் ஒருவருக்கு உரித்தான ரூபா 50,000/- ஆன வீட்டு வாடகைக் கொடுப்பனவை செலுத்திவந்த போது, அப்போது பல்கலைக்கழகங்களில் ஏற் பட்ட சிக்கல்களை தீர்ப்பதற்காக நாளாந்தம் பல்கலைக்கழக விரிவுரை யாளர்களுடன் கூட்டங்களை நடாத்த வேண்டி ஏற்பட்டதென்றும், செல வினத்தைக் குறைத்துக் கொள்வதற்காக அவை அமைச்சரின் உத்தியோகபூர்வ இல்லத்தில் நடாத்தப்பட்டதனால், வீட்டு வாடகைக் கொடுப்பனவு அவசியமற்றது என்று தெரிவித்த அமைச்சர் குறித்த காலப்பகுதிக்கான மின் மற்றும் நீர் கட்டணப் பட்டியல்களை மீள்நிரப்புச் செய்வது போதுமானது என்று அறி வித்தார் என்றும், இதனால் பொது நிருவாக அமைச்சின் செயலாளரின் அங்கீகாரத்துடன் மேற்படி மின் மற்றும் நீர் கட்டணப் பட்டியல்களை மீள்நிரப்புச் செய்வது இடம்பெற்றது என்றும் பிரதம

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		க. அ. . தெரிவித்தார்.
7.	இலங்கை அரசின் சனாதிபதி புலமைப் பரிசில் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2012/2013 கல்வி ஆண்டில் பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தில் பதிவு செய்துள்ள பாகிஸ்தான் நாட்டவரான மாணவர்கள் இருவர் பின்னர் SAITM நிறுவனத்தில் மருத்துவ மாணவர்களாக பதிவு செய்து அமைச்சினால் 2012 முதல் 2017 யூன் வரை ரூ. 3 மில்லியனான செலவினம் செய்யப்பட்டுள்ளமை.	அமைச்சரவையின் தீர்மானத்தின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்டவாறு வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட இந்த பாகிஸ்தான் நாட்டு மாணவர்கள் இருவரும் பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்திற்கு அனுமதிபெற விண்ணப்பித்துள்ளனர் என்பதுடன், அப்போதைய பல்கலைக்கழக நிருவாகம் இதற்கு இணங்கியதாகவும், பின்னர் மாணவர்கள் இந்நாட்டுக்கு வருகைதந்து விடுதியில் தங்கிய பின்னர் பல்கலைக்கழகத்தில் ஏற்பட்ட உள்ளக நிருவாக சிக்கல்களின் விளைவாக இந்த மாணவர்கள் இருவரினதும் பதிவு நிராகரிக்கப்பட்டுள்ளதுடன், இந்த நிலைமையின் கீழ் பாகிஸ்தான் – இலங்கை இராஜதந்திர உறவுகள் மற்றும் நட்புறவுக்கு பாதிப்பை ஏற்படுத்த முடியும் என்பதனால் இந்த மாணவர்கள் இருவரையும் வேறு பாடநெறிகளில் ஈடுபடுத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அம்முயற்சிகள் பயனளிக்கவில்லை என்றும், இந்த சந்தர்ப்பத்தில் SAITM நிறுவனம் முன்வந்து மேற்படி மாணவர்கள் இருவருக்கும் மருத்துவ பட்டப் பாடநெறிக்கான புலமைப்பரிசில்களை வழங்கியது என்றும் பிரதம க. அ. . தெரிவித்தார். எவ்வாறாயினும், SAITM நிறுவனத்திற்கு

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		பாடநெறிக் கட்டணம் செலுத்தப்படவில்லை என்றும், மேற்படி புலமைப்பரிசின் கீழ் இது உள்ளடங்கியது என்றும் முன்னர் குறிப்பிட்ட வெளிநாட்டு மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்டவாறு மாணவர்களுக்கு வதிவிட வசதிகள் மற்றும் உணவும் குடிபானமும் வழங்குவதற்கு மாதாந்த கொடுப்பனவு மற்றும் ஒரு தடவை மாத்திரம் செலுத்தப்படுகின்ற சரிசெய்கை கொடுப்பனவு மாத்திரம் செலுத்தப்பட்டது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். இது பற்றிய விரிவான அறிக்கையொன்றை வழங்குமாறு குழு, பிரதம க. அ. . இற்கு கட்டளையிட்டது.
8.	வருடாந்த மதிப்பீட்டு ஏற்பாடுகளின் கீழ் பொதுத் திறைசேரியினால் 11 பல்கலைக்கழகங்களுக்கு வழங்கப்பட்டிருந்த கட்டுநிதியை பூரணமாக செலவிடாது 2016 ஆம் ஆண்டின் இறுதிவரை ரூ. 586.2 மில்லியனான மீதி வங்கிக் கணக்குகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை.	பிக்கு பல்கலைக்கழகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்த வேண்டிய தடுத்துவைத்தல் தொகை, கருத்திட்டத்திலுள்ள குறைபாடுகள் காரணமாக விடுவிக்கப்படவில்லை என்பதுடன், மேற்படி தொகையும் இதில் உள்ளடங்குவதாக பிரதம க. அ. . தெரிவித்தார். திறைசேரியினால் குறித்த பல்கலைக்கழகங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஏற்பாடுகளை மேற்படி தேவைகளுக்கு செலவிட முடியாத பட்சத்தில், முற்படி தொகைகளை வேறு கருத்திட்டமொன்றுக்கேனும் மாற்றியமைக்கும் ஆற்றல் உள்ளதனால் மேற்படி ஏற்பாடுகளை செலவிடாது வங்கிக் கணக்குகளில் தடுத்து

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		வைத்திருக்கும் ஆற்றல் இல்லை என்பது குழுவில் தெரியவந்தது. மேற்படி பல்கலைக்கழகங்களிடம் வினவி எந்த அடிப்படையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளது என்பதை தேடிப்பார்த்து அறிக்கையிடுமாறு பிரதம க. அ. . இற்கு குழு கட்டளையிட்டது.
9.	2015 மற்றும் 2016 ஆண்டுகளில் அமைச்சினால் உள்நாட்டு வெளிநாட்டு நிதிக் கடன்களின் கீழ் கருத்திட்டங்களை அமுல்படுத்துவதற்காக அமைச்சுக்கு முறையே ரூபா 3,165 மில்லியன் மற்றும் ரூ. 2,256 மில்லியன் வழங்கப்பட்டிருந்ததுடன், மேற்படி தொகையில் 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் முறையே ரூ. 710 மில்லியன் மற்றும் ரூ. 896 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.	இந்திய மற்றும் ஜப்பான் அரசுகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கொடுப்பனவுகளின் அடிப்படையில் அரசாங்க பல்கலைக்கழகங்கள் பலவற்றில் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் பற்றி விளக்கமளித்த பிரதம க. அ. . பல்வேறு காரணங்களின் அடிப்படையில் கொடுப்பனவுகள் கிடைக்காமையினால் ஏற்பட்ட தாமதங்கள் காரணமாக கருத்திட்டங்களின் தற்போதைய முன்னேற்றமும், மேற்படி ஆண்டுகளில் பயன்படுத்த முடியாது போன தொகைகள் தற்போது பயன்படுத்தப்பட்டுள்ள முறை பற்றியும் விளக்கமளித்தார்.
10.	அமைச்சின் 2015 ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டத்திற்கு அமைய வதிவிட மாணவர்களின் எண்ணிக்கையை 12,000 இனால் அதிகரிக்க மாணவர்களின் விடுதி வசதிகளை மேம்படுத்தும் நோக்கத்துடன், பல்கலைக்கழகங்களில் 60 விடுதிகளை நிர்மாணிக்கும் கருத்திட்டம் தொடர்பில் 100 அறைகளைக் கொண்ட விடுதியொன்று சுமார் ரூ. 219 மில்லியனான தொகை செலவிடப்பட்டு அம்பாந்தோட்டை வெலிகெத்த	அம்பாந்தோட்டை, வெலிகெத்த பிரதேசத்தில் கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்ததாக தாபிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த உயிரியல் தொழில்நுட்ப பீடத்திற்கான விடுதியொன்றை நிர்மாணிக்க அப்போதைய கொழும்புப் பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் சமர்ப்பித்த கோரிக்கைக்கு அமைய மேற்கொள்ளப்பட்டதென்று பிரதம க. அ. . தெரிவித்தார். இப்பீடத்தைத் தாபிக்க முன்னர் எதன் அடிப்படையில் விடுதி

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	பிரதேசத்தில் 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தாபிக்க உத்தேசிக்கப்பட்டிருந்த கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிரியல் தொழில்நுட்பப் பீடத்தை தாபிக்காதிருக்க தீர்மானிக்கப்பட்டதன் காரணமாக இந்த விடுதியை பயன்மிக்கவாறு பயன்படுத்திக் கொள்ள முடியாது போயுள்ளதனால் அங்கு பேணிவரப்படுகின்ற விவசாய தொழில்நுட்ப மற்றும் கிராமிய விஞ்ஞான நிறுவனத்தின் கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற சுமார் 30 மாணவர்களின் விடுதி வசதிக்காக இந்த விடுதி பயன்படுத்தப்பட்டுள்ளமை.	நிர்மாணிக்கப்பட்டது என்று குழு தீவிரமாக வினவியது. இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய அலுவலர்கள் யார் என்பதை இனங்கண்டு அறிக்கையிடுமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு கட்டளையிட்ட குழு மேற்படி விடுதிக்கான பீடமொன்றை நிர்மாணிக்க முடியாதெனின், வேறு பயன்மிக்க நடவடிக்கைக்கு அதனைப் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய முறையை பற்றி ஆராய்ந்து அறிக்கையிடுமாறு பிரதம க. அ. . இற்கு கட்டளையிடப்பட்டது.
11.	மேற்படி கருத்திட்டத்தை துரித கருத்திட்டமொன்றாக 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்குள் நிர்மாணித்து முடிக்க வேண்டியிருந்த போதிலும் 2017 ஏப்ரல் மாத இறுதிக்குள் பெரும்பாலான வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும் மாணவர்களின் உபயோகத்திற்கு கையளிக்கப்படாத விடுதிகளின் எண்ணிக்கை 11 ஆக உள்ளமை.	இந்தக் கருத்திட்டத்தின் கீழ் விடுதிக் கட்டிடம் மாத்திரம் நிர்மாணிக்கப்படுவதுடன், ஏனைய உபகரணங்கள் மற்றும் வசகதிளை பல்கலைக்கழகம் பெற்றுக் கொள்ளல் வேண்டும் என்றும், அதற்காக அவர்களுக்கு ஏற்பாடுகளைத் தேடிப்பெற்றுக் கொள்வதில் அசௌகரியங்களை எதிர்கொள்ள வேண்டி ஏற்பட்டதனால் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் மேற்படி விடுதியை மாணவர்களிடம் கையளிக்க முடியவில்லை என்றும் பிரதம க. அ. . குறிப்பிட்டார். ஒவ்வொரு பல்கலைக்கழகத்திலும் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை, விடுதி வசதிகள் வழங்கப்பட்டுள்ள மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய அறிக்கை, மாணவர்களின்

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
		உபயோகத்திற்காக கையளிக்கப்படாதுள்ள 11 விடுதிகளின் தற்போதைய நிலைமை மற்றும் அவற்றை மாணவர்களிடம் கையளிக்கக்கூடிய காலஎல்லைகள் பற்றிய அறிக்கையையும் சமர்ப்பிக்குமாறு குழு பிரதம க. அ. . க்கு கட்டளையிட்டது.
12.	2014 ஆம் ஆண்டின் வருடாந்த மதிப்பீட்டில் ஏற்பாடுகள் இல்லாத போதிலும், மேற்படி விடுதிக் கருத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட தொகையில் இலத்திரனியல் மற்றும் அச்சு பிரச்சார நடவடிக்கைகளுக்காக அமைச்சினால் ரூ. 21.5 மில்லியன் தொகை செலவிடப்பட்டுள்ளமை.	இவ்வாறான பணியொன்றை மேற்கொள்ளும் போது இதனை பொது மக்களிடம் கொண்டுசெல்வது அமைச்சின் பொறுப்பாகும் என்றும், கருத்திட்டத்துடன் சம்பந்தப்பட்ட ஏனைய பணிகளுக்கு கருத்திட்டத்தின் ஏற்பாடுகளிலிருந்து சிறிய விகிதத்தை செலவிட முடியும் என்பதனால் கருத்திட்டத்தின் பிரச்சார நடவடிக்கைகளுக்கு இந்த செலவினங்களைச் செய்ய வேண்டி ஏற்பட்டதென்று பிரதம க. அ. . குறிப்பிட்டார். பிரச்சார நடவடிக்கைகளுக்குத் தேவையாயின் வேறு ஏற்பாடுகளைப் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்றும், கருத்திட்டத்தின் ஏற்பாடுகளை அங்கீகாரம் இன்றி செலவிட முடியாது என்பதும் கணக்காய்வின் கருத்தாக இருப்பதனால் பிரச்சார நடவடிக்கைகளுக்காக இந்த நிதி செலவிடப்பட்டிருப்பது எந்த அடிப்படையில் என்பதை ஆராய்ந்து அறிக்கையிடுமாறு குழு பிரதம க. அ. . இற்கு கட்டளையிட்டது.
13.	சபரகமுவா பல்கலைக்கழகத்திற்கு மருத்துவ பீடமொன்றை தாபிப்பதற்கான	சபரகமுவா பல்கலைக்கழகத்திற்கு இணைந்ததாக மருத்துவ பீடமொன்றை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்
	பிரேரணையின் தற்போதைய நிலைமை	தாபிப்பதற்கான பிரேரணையொன்று இருந்தது என்றும், அதனை வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்குவதற்கு பிரேரிக்கப்பட்டிருந்த போதிலும் அது வரவு செலவுத்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை என்றும் பிரதம க. அ. குறிப்பிட்டதுடன், மருத்துவ பீடமொன்றை தாபிப்பதற்காக இரத்தினபுரி நகரத்திலிருந்து 25 ஏக்கர் அளவான காணிப்பகுதியை கொள்வனவு செய்திருந்ததாகவும், குழுவின் போது தெரியவந்தது. இது தொடர்பான ஆவணங்களை பரிசீலனை செய்து இந்தப் பிரேரணை எவ்வாறு சமர்ப்பிக்கப்பட்டது, யார் சமர்ப்பித்தார் என்பது பற்றி ஆராய்ந்து அறிக்கையிடுமாறு குழு பிரதம க. அ. . இற்கு கட்டளையிட்டது.
14.	அங்கீகரிக்கப்பட்ட தரநியமங்களுக்கு ஏற்புடையதாகாமையினால் தற்போது பங்களாதேஷ் மருத்துவ சபையினால் தடை செய்யப்பட்டுள்ள சிதகொன் மருத்துவக் கல்லூரியிலிருந்து மருத்துவப் பட்டம் பெற்றுள்ள மாணவர்களுக்கு இலங்கை மருத்துவச் சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொடுக்குமாறு உயர் கல்வி அமைச்சுக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதும்அமைச்சின் அலுவலர்கள் குறித்த மருத்துவக் கல்லூரியை அவதானிப்புச் செய்வதில் பங்கேற்றுள்ளனரா என்பதும்	மேற்படி மருத்துவக் கல்லூரியின் தரநியமங்கள் பற்றி திருப்தியடைய முடியாமை காரணமாக பங்களாதேஷ் மருத்து சபையினால் மேற்படி மருத்துவக் கல்லூரிக்கு வழங்கப்பட்டிருந்த அங்கீகாரம் இடைநிறுத்தப்பட்டுள்ளது என்றும், தாம் தமது அமைச்சின் அலுவலர்களுடன் பங்களாதேஷ் கல்வி அமைச்சரைச் சந்தித்து மேற்படி மருத்துவக் கல்லூரிக்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக் கொடுத்து முன்னர் இருந்த அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளத் தேவையான உதவியை வழங்குமாறு கோரிக்கைவிடுத்ததாகவும், இதன் மூலம் மேற்படி மருத்துவக் கல்லூரியில் கல்வி கற்கின்ற இலங்கை

	கலந்துரையாடப்பட்ட பிரதான விடயங்கள்	**பிரதம கணக்கீட்டு அலுவலரின்/ கணக்கீட்டு அலுவலரின் தெளிவுபடுத்தல்கள் மற்றும் குழுவின் கருத்துகள்/ விதப்புரைகள்/ பணிப்புரைகள்**
		மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்றும் பிரதம க. அ. . தெரிவித்தார்.

உள்ளடக்கம்

பக்க இல.

ஆ

ஆட்பதிவுத் திணைக்களம் 13

ஆயுர்வேத திணைக்களம் 57

இ

இரத்தினபுரி மாவட்ட செயலகம் 32

உ

உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு 143

உணவு ஆணையாளர் திணைக்களம் 111

ஊவா மாகாண சபை 76

ஊழியர் சேமலாப நிதியம் 99

ஓ

ஓய்வூதியத் திணைக்களம் 124

க

கம்பஹா மாவட்ட செயலகம் 27

கடற்றொழில், நீரியல் வளமூலங்கள் திணைக்களம் 132

கடற்றோழில், நீரியல் வளமூலங்கள் அமைச்சு 127

கலாசார அலுவல்கள் பற்றிய திணைக்களம் 70

களுத்துறை மாவட்ட செயலகம் 68

கரையோரம் பேணல் மற்றும் கரையோர வளங்கள் முகாமைத்துவ திணைக்களம் 15

கிழக்கு மாகாண சபை

கொழும்பு மாவட்ட செயலகம் 116

கொழும்பு மாநகர சபை 61

ச

சமூக வலுவூட்டல், சமூக நலன்புரி அமைச்சு 41

த

தபால், தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சு 34

தபால் திணைக்களம் 36

தென் மாகாண சபை 21

தேசிய நூதனசாலைத் திணைக்களம் 73

ந

நகரத் திட்டமிடல் மற்றும் நீர் வழங்கல் அமைச்சு 38

ப

புத்த சாசன அமைச்சு மற்றும் பௌத்த அலுவல்கள் திணைக்களம் 91

பொது நிருவாக மற்றும் முகாமைத்துவ அமைச்சு 121

போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சு 18

ம

மத்திய மாகாண சபை 63

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம் 44

மோட்டார் வாகனப் போக்குவரத்து திணைக்களம்
107

வ

வடமத்திய மாகாண சபை
விளையாட்டுத்துறை அமைச்சு மற்றும் விளையாட்டுத்துறை அபிவிருத்தித் திணைக்களம் 81

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு 54

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் 138

விசேட விசாரணை

டெங்கு நோயை தடுத்தல் மற்றும் சிகிச்சை உள்ளடக்கிய டெங்கு நோயைக் கட்டுப்படுத்துதல் நிகழ்ச்சித் திட்டத்தின் செயலாற்றுகை பற்றி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை மீதான ஆய்வு 47

குடிநீர் போத்தல் செயலாற்றுகை பற்றிய கூட்டம்	52
கரையோரம் பேணல் மற்றும் சுற்றுலாக் கைத்தொழில் அபிவிருத்தி பற்றி நடத்தப்பட்ட விசேட குழு	15